www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

செப்டம்பர் - 2003
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00





# நீதிமன்ற பாசிசம்

படிப்பகம்

www.padippakam.com




## வாசகர் கடிதம்

போதிய சாட்சியம் இல்லை என்று கைகழுவி விடும் சட்டக்காவலர்களும், கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமல் ''பழசை மறந்து விடுங்கள், நல்ல உறவை வளர்த்துக் கொள்ளுங்கள், நீங்கள் போலீசை ஆதரித்தாலும் ஆதரிக்கா விட்டாலும் அவர்களின் உதவி உங்களுக்குத் தேவைப்படும்'' என்று கூறிய நீதிமன்றத்தின் வழக்குரைஞர்களும் இருக்கும் வரை அங்கு நமக்குப் பாதுகாப்பு இல்லை என்பது உறுதிபடத் தெளிவாகிறது. இந்து மதவெறி பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராடத் துணியும் அனைவரும் ''சட்டத்திற்குப் புறம்பான வழிகளைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்று எடுத்துரைத்த *புதிய கலாச்சாரத்திற்கு* மிகவும் நன்றி. (''குஜராத் படுகொலை: குற்றவாளிகளின் பிடியில் சாட்சிகள்'')

— **விஜி,** மதுரை.

''ஸ்டாலின் ஐம்பதாண்டு நினைவு - மக்களே அழிவற்றவர்கள்'' - கட்டுரையில் பல்வேறு விதமான போராட்டப் பணிகளிலும், ஆக்கப் பணிகளிலும் ஈடுபட்டுக் கொண்டே மக்களுக்கான இலக்கிய நோக்கத்தையும் ஆய்ந்த விதம்... ஸ்டாலினை நினைக்கும்போது வியப்பு ஏற்படுகிறது.

— செம்மலர் **மா.நடராஜன்,** அறந்தாங்கி.

கலை இலக்கியம் குறித்து தோழர் ஸ்டாலினின் கருத்துக்களும், கவிதையும் வரலாற்று ஆவணம். ஸ்டாலினைப் பற்றிய எதிர்மறையான விமரிசனங்கள் திட்டமிட்டுப் பரப்பப்படும் சூழலில், இப்படைப்பு வரவேற்கத்தக்கது. தோழர் துரை. சண்முகத்தின் ''நிலத்தைப் பழிக்கும் நெல்லு மிரட்டிகள்'' கவிதை பாராட்டத்தக்கது. 'அண்ணன்' அறிவுமதி அறிமுகப்படுத்திய 'தம்பிகள்' முத்துக்குமார் முதலானோர்கள் இன்றைய தமிழ்ச் சினிமாவின் சீரழிவில் பங்கேற்கிறார்கள் என்பது கண்கூடு. வாய்ப்பு ஏற்படும் போது, வெளிப்படையாகவே தோலுரிப்பது சரியாக இருக்கும்.

— **ருத்ரன்,** காவேரிப்பட்டினம்.

''என் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் கூட ஆதரவாக நின்றிருந்தால் நீதிமன்றத்தில் பொய் சொல்லியிருக்க மாட்டேன்'' என்ற ஜஹீராவின் கூற்று மதநல்லிணக்கம் பேசுகிறவர்களின் கையாலாகத்தனத்தையே காட்டுகிறது.

— **திலீபன்,** மதுரை.

அழகு, அமைதி, சுத்தம் என்பதற்கும் பயங்கரவாதம் என்பதற்கும் நேரெதிரான அர்த்தங்கள் இருந்தாலும் இன்றைய சமூக சூழ்நிலையில் இரண்டும் ஒன்றுதான் என்று நடைமுறை உதாரணங்களுடன் விளக்கியது சிறப்பாக இருந்தது. இந்த விசயத்தில் ஆளும் வர்க்கக் கண்ணோட்டத்தில் பார்த்த எனக்கு பாட்டாளிவர்க்க கண்ணோட்டத்தில் பார்க்க வைத்துள்ளீர்கள்.

''பெப்சி உங்கள் சாய்ஸ்'', எஃப்-எம் என பலதும் புற்றீசலாய் முளைத்தபோது ஒன்றும் செய்ய முடியாத செயலற்ற நிலையில் வெறுப்பாய் இருந்தது. சர்வரோக நிவாரணி போல் புரட்சிதான் தீர்வு என சப்பைக் கட்டு கட்டிக் கொண்டு இருந்துவிட்டேன். ''பண்பலையைக் கீறுவது எப்படி?'' என்ற கட்டுரையைப் படித்த பிறகு பண்பலையை மட்டுமல்ல எல்லாவற்றையும் கீறித்தான் ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளேன்.

சமூக மாற்றம், புரட்சி என்றால் ஒரு தனிப்பட்ட விவகாரம், அது தனியாக நடப்பது என்ற கண்ணோட்டமும், இன்றைய குறிப்பான அரசியல், பண்பாட்டு சமூக நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்திப் பார்க்காத கண்ணோட்டமும்தான். ஆனால் சமூகத்தின் ஒவ்வொரு தளத்திலும், ஆளும் வர்க்கத்தின் ஒவ்வொரு சுவட்டிலும் சவால் விடும் வகையில் குறுக்கிட வேண்டும்.

உங்கள் கட்டுரை ''ஏன் அவர்களை அப்படிச் செயல்பட அனுமதிக்கிறீர்கள், விடாதே துரத்து'' என்று அறை கூவுகிறது. செயலற்ற வாசகர்களை செயலூக்கமுள்ள சிந்தனையாளர்களாக மாற்றும் சக்தி *புதிய கலாச்சாரத்திற்கு* மட்டுமே உண்டு. நானும், என் நண்பரும், பண்பலையைக் கீறித்தான் பார்ப்பதென முடிவெடுத்துள்ளோம்.

— **புரட்சித்தூயன்,** தருமபுரி.

பார்ப்பன பாசிச இந்துத்துவத்தை அடியோடு வேரறுக்க வேண்டிய இன்றையக் காலகட்டத்தில், அதற்கு மாறாக (தலித் விடுதலை பேசிவிட்டு, கடைசியில்) சங்கரமடத்தில் கரைந்து போன அந்த ஓடுகாலி ஆசாமியை எதைக் கொண்டு அடிப்பது?

பாரதியை ஏதோ முண்டாசு கட்டிக் கொண்டு அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு அபாரக் கவிஞன் என்ற நிலைப்பாட்டிலிருந்தே மதிப்பீடு செய்கின்றனர். மாறாக, பாரதியின் முண்டாசைக் கழற்றிவிட்டு அவர் மண்டையோட்டிற்குள் இருக்கும் சிந்தனை எந்த வர்க்கப் பின்புலத்தைச் சார்ந்துள்ளது என்ற அடிப்படையில் பல்வேறு வரலாற்றுச் சான்றுகளுடன் சுட்டிக்காட்டுவதோடு மட்டுமின்றி, இன்றைய காலகட்டத்தில் பாரதியை இப்படித்தான் பார்க்க வேண்டும் (அல்லது) முடியும் என்று ''பாரதியின் அவலத்தை'' மிகவும் தூய்மையான முறையில் தோலுரித்துக் காட்டிய கட்டுரை சிறப்பு.

— **வே. கணேசமூர்த்தி,** சென்னை.

**இந்த இதழுடன் (செப்.03) முடிவுறும் சந்தாதாரர்கள்**

199, 237, 580, 582, 583, 584, 585, 588, 589, 590, 591, 592, 593, 594, 595, 597, 598, 599, 601, 602, 603, 604, 605, 606, 607, 617, 618, 621, 622, 623, 624, 625, 630, 631, 632, 633, 634, 638, 639, 640, 642, 773

**அடுத்த இதழுடன் (அக். 03) முடிவுறும் சந்தாதாரர்கள்**

15, 17, 55, 61, 68, 127, 142, 148, 161, 229, 232, 234, 238, 244, 250, 257, 259, 260, 273, 275, 276, 278, 293, 306, 372, 468, 507, 608, 613, 614, 615, 620, 628, 643, 644, 645, 646, 647, 648, 649, 650, 651, 652, 653, 654, 655, 656, 663, 664, 665, 666, 667, 668, 669, 670, 671, 672, 673, 674, 675, 676, 677, 678, 680, 681, 682, 684, 685, 686, 687, 688, 689, 691, 693, 695, 696, 697, 698, 699, 700, 701, 702, 703, 704, 705, 706, 707, 708, 709, 710, 711, 712, 713, 714, 741, 742

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: 21
- குரல்: 3-4
- ஆக., செப். - 2003

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

தொலைபேசி: 044-23718706

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

அலுவலக நேரம்:

காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

அட்டை ஓவியம்:
முகிலன்

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்

# எதிர்ப்பை நிறுவனமயமாக்கும் பாசிசத் தந்திரம்!

அரசு ஊழியர்களின் வேலை நிறுத்த உரிமைக்கு எதிராகவும், பொதுவாகவே வேலை நிறுத்தம் என்ற தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட ஆயுதத்திற்கு எதிராகவும், கடையடைப்பு முதலிய அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிராகவும், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு எதிராகவும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள திமிர்த்தனமான கருத்துக்களும் தீர்ப்பும் அப்பட்டமான பாசிசத் தன்மையுடையவை. இந்த நாட்டில் பாசிசக் கொடுங்கோன்மையை நிறுவுவதற்கு நாடாளுமன்ற ஆட்சிமுறை மற்றும் நீதிமன்றம் போன்ற 'ஜனநாயக' நிறுவனங்களைக் கவிழ்க்க வேண்டிய அவசியமே இல்லை என்பதையும், பாசிசத்தை சட்டபூர்வமாகவும் சமூகமாகவும் நிலைநாட்ட நீதிபதிகளே முன் கையெடுத்துச் செயல்படுவார்கள் என்பதையும் இத்தீர்ப்பு இன்னுமொருமுறை உறுதி செய்துள்ளது. உலக வங்கியே நீதிபதியின் உருக்கொண்டு வந்ததைப் போல, மறுகாலனியாக்கம் திணிக்கும் 'தொழிலாளர் கொள்கை'யையே, 'நீதி' என்ற பெயரில் தொழிலாளி வர்க்கத்தின் தொண்டைக்குழியில் செருகியிருக்கிறார்கள் நீதிபதிகள். ஜனநாயகத்தின் ஆன்மாவைப் பாதுகாக்கும் காவல் தேவதையாக நீதிமன்றத்தைச் சித்தரித்து சூடம் சாம்பிராணி காட்டி வந்த போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அர்ச்சகர்கள் தான் அம்பாள் இப்படியொரு அருள்வாக்கு சொன்னதற்காக அதிர்ச்சி அடைய வேண்டும்.

நம்மைப் பொறுத்தவரை இந்தத் தீர்ப்பைக் காட்டிலும் அபாயகரமானது, இது குறித்து மைய அரசின் அட்டார்னி ஜெனரல் சோலி சோரப்ஜி தெரிவித்துள்ள கருத்துதான். தொழிலாளி வர்க்கம் பல்லாண்டு காலம் போராடிப் பெற்ற உரிமையை இத்தீர்ப்பு பறிப்பதாகச் சாடியிருக்கிறார் சோரப்ஜி.

தற்போது தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை உரிமைக்காகக் குரல் கொடுக்கும் பா.ஜ.க. அரசின் தலைமை வழக்குரைஞர், ஏற்கெனவே யூனியன் கார்பைடு தலைவர் ஆண்டர்சனுக்காகக் குரல் கொடுத்தவர். போபால் விஷவாயுப் படுகொலை தொடர்பாக 20 ஆண்டுகளாகத் தூங்கிக் கொண்டிருக்கும் வழக்கில், "தற்போது அமெரிக்காவில் இருக்கும் அதன் தலைவர் ஆண்டர்சனுக்கு 80 வயது ஆகிவிட்டபடியால் அவரைக் கைது செய்ய வேண்டாம்" என்று கருத்து தெரிவித்தவர்; "உச்ச நீதிமன்றத்தால் தடைவிதிக்கப்பட்ட பாபர் மசூதி வளாகத்தில் ராமர் கோயிலுக்கு அடிக்கல் பூசை நடத்தலாம்" என்று பா.ஜ.க. அரசின் சார்பில் வாதாடியவர். சுருங்கக் கூறின் பார்ப்பன இந்து மதவெறிக் கும்பலுக்கும், பன்னாட்டு நிறுவனத்துக்கும் ஆதரவாக வாதாடிய பா.ஜ.க. அரசின் அட்டார்னி ஜெனரல் இப்போது பாட்டாளி வர்க்கத்துக்கு ஆதரவாகவும் குரல் கொடுக்கிறார். நீதித்துறையால் பறிக்கப்படும் ஜனநாயக உரிமையை மீட்பதற்கு பாசிசக் கும்பலின் வழக்குரைஞர் குரல் கொடுக்கிறார்! இந்த நாடகம் அரங்கேறிக் கொண்டிருக்கும் அதேவேளையில், பணிப்பாதுகாப்பு, குறைந்தபட்ச ஊதியம் உள்ளிட்ட தொழிலாளி வர்க்கத்தின் அனைத்து உரிமைகளையும் ஒழித்துக் கட்டுவதற்கான 'புதிய தொழிலுறவு மசோதா' திரைக்குப் பின்னே தயார் நிலையில் காத்திருக்கிறது. விசித்திரம், ஆனால் உண்மை!

●●●

நாட்டைப் பரபரப்புக்குள்ளாக்கியிருக்கும் இரண்டாவது விசயம் கோக் - பெப்சி ஆகிய பன்னாட்டு நிறுவனங்களின் 12 வகை குளிர்பானங்கள் குறித்து 'அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வு மையம்' வெளியிட்டிருக்கும் ஆய்வறிக்கை. இவ்வறிக்கை வெளியானவுடன் நாடெங்கும் நடைபெற்று வரும் கோக் - பெப்சி எதிர்ப்புப் போராட்டங்களிலும் சங்க பரிவாரத் திருடர்கள் முந்திக் கொண்டிருக்கின்றனர். பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டையே சூறையாடுவதாக நாடாளுமன்றத்தில் குமுறுகிறார் ஒரு சிவசேனா எம்.பி; பெப்சியை ஊற்றிக் கக்கூஸ் கழுவுகிறது ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல்; நாடாளுமன்ற உணவு விடுதியிலிருந்து இப்பானங்கள் வெளியேற்றப்படுகின்றன; அரசின் 'அசாத்தியமான கண்டிப்பை'ப் பாராட்டித் தலையங்கம் எழுதுகிறது தினமணி. மாட்டு மூத்திர விரும்பிகளான பா.ஜ.க.வினர் இந்த அமெரிக்க மூத்திரத்தைத் தடைசெய்யத் தயாராக இருப்பது போலவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதை ஆதரிப்பார்களா என்பதுதான் பிரச்சினை என்றும் பித்தலாட்டமாக ஒரு கட்டுரை எழுதுகிறார் சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் தலைவரான குருமூர்த்தி. ஆர்.எஸ்.எஸ்.ஸின் அதிகாரபூர்வ பத்திரிக்கையான தினமணி இந்த மோசடியை முதல் பக்கத்தில் பிரசுரிக்கிறது. ஆக, அக்மார்க் அமெரிக்கக் கைக்கூலியான ஆர்.எஸ்.எஸ். கும்பல், ஏகாதிபத்திய எதிர்ப்பு மேடையையும் கைப்பற்றிக் கொண்டுவிட்டது. குளிர்பானங்களின் 'தரம்' குறித்த விவாதத்தில் நாடே ஆழ்ந்திருக்கும்போது, குடிநீரும் நீர்வளமும் கேள்விக்கிடமற்ற முறையில் தனியார்மயமாக்கப்படுகின்றன. இதுவும் விசித்திரம்தான். ஆனால் உண்மை!

எதிர்ப்பை நிறுவனமயமாக்கும் இந்தச் சூழ்ச்சி பார்ப்பன பாசிஸ்டுகளுக்கேயுரிய தந்திரமாக இருக்கிறது. இதில் ஒவ்வொரு முறையும் அவர்கள் வெற்றி பெறுவதை,

படிப்பகம்

www.padippakam.com

தமது நடவடிக்கைகளின் மூலம் 'எதிர்'க் கட்சிகளே உத்தர வாதப்படுத்துகிறார்கள். சங்க பரிவாரத்தின் தொழிற்சங்க மான பாரதீய மஸ்தூர் சங்கத்தை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக தனியார்மயத்தை எதிர்த்த போராட்டத்தில் ஐக்கிய முன்னணிக்கு வருமாறு அவர்களை அழைக்கிறார்கள் மார்க்சிஸ்டுகள். சோலி சோரப்ஜியின் அறிக்கையை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக, ஒரு தொழிலாளி வர்க்க எழுச்சியின் மூலம் நீதிமன்றத்துக்குப் பதிலடி கொடுப்பதற்குப் பதிலாக, வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை உத்தரவாதம் செய்யும் சட்டமொன்றை நாடாளுமன்றம் நிறைவேற்ற வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறார், சோம்நாத் சட்டர்ஜி. நாடாளுமன்றப் பெரும்பான்மையின் மூலம் 'பொடா' போன்ற சட்டங்களைக் கொண்டு வந்து ஜனநாயக உரிமைகளை பா.ஜ.க. பறிக்கும்போது நீதிமன்றத்திடம் முறையிடுவது, நீதிமன்றமே பாசிசத்தைத் திணித்தால் நாடாளுமன்றத்தில் கதறுவது - என்ற நிறுவனமயமாக்கப்பட்ட 'எதிர்ப்பு' முறைகளை மட்டுமே போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் கடைப்பிடிக்கின்ற காரணத்தால், எதிர்ப்பை நிறுவனமயமாக்கும் பா.ஜ.க.வின் சூழ்ச்சி சுலபமாக வெற்றி பெறுகிறது.

கோக், பெப்சி விவகாரத்திலும், பா.ஜ.க. அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைக் காட்டிலும் மேம்பட்ட கோரிக்கைகள் எதுவும் எதிர்க்கட்சிகளிடம் இல்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கையைப் போன்று தோற்றம் காட்டினாலும் ''நச்சுத் தன்மையற்ற தரமான கோக்'' என்பதுதான் இவர்களுடைய உண்மையான கோரிக்கையாக எஞ்சி நிற்கிறது. நச்சுத் தன்மை கொண்ட நாலாந்தரமான பொருட்களை ஏழை நாட்டு மக்களின் தலையில் கட்டுவதென்பது பன்னாட்டு நிறுவனங்களுடைய ஏகாதிபத்தியத் திமிரின் வெளிப்பாடு என்ற போதிலும் ''தரமான கோக்'' என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு முழக்கமல்ல; தரமாக இருப்பினும் பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களைத் தடை செய்தல்; தரம் குறைவாக இருப்பினும் உள்நாட்டுப் பொருட்களை ஊக்குவித்தல் - என்பதுதான் தற்சார்பு அரசியலின் முழக்கமாக இருக்க முடியும். ஆனால் மறுகாலனியாக்கத்தில் முழுமையாக உடன்படும் காங்கிரசும் முக்கால்வாசி உடன்படும் போலி கம்யூனிஸ்டுகளும் இத்தகைய முழக்கத்தை வைக்கவில்லை; வைக்கப் போவதுமில்லை.

எனவே கோக், பெப்சி விவகாரம் இப்போது வெறும் தரக் கட்டுப்பாட்டுப் பிரச்சினையாக மட்டுமே ஆராயப்படுகிறது. மத்தியச் சுகாதார அமைச்சகம் நடத்தும் ஆய்வும், டெல்லி உயர் நீதிமன்றத்தில் பெப்சி தொடுத்துள்ள வழக்கும் இதனை அரசியலற்ற தூய சட்டப் பிரச்சினையாக மட்டுமே கையாளவிருக்கின்றன. மறுகாலனியாக்கத்தின் கலாச்சாரக் குறியீடுகளுக்கு எதிரான போராட்டம் போலத் தோற்றமளிக்கும் ஒரு பிரச்சினை, நகைக்கத்தக்க விதத்தில் நிறுவனமயமாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை காரணமாகக் கிடைக்கக்கூடிய தேர்தல் அரசியல் ஆதாயங்களைக் கூட எதிரிகளுக்கு விட்டு வைக்காமல், பாசிஸ்டுகளுக்கேயுரிய வாய்ச்சவடால்கள் மற்றும் 'பரபரப்புப் போராட்டங்கள்' மூலம் அறுவடை செய்துவிட்டது ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

தேர்தல் அரசியல் பிழைப்புவாதத்தால் மூளைச்சலவை செய்யப்பட்டு, அரசியலற்ற மோன நிலையில் இருத்தப்பட்டிருக்கும் மக்கள், தனது கொள்கைகளின் விளைவாகத் தோன்றும் எதிர்ப்பை தானே உறிஞ்சி நிறுவனமயமாக்கி எதிர்க் கட்சிகளை முடமாக்கி வரும் பாசிஸ்டுகள், பாசிசத்துக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கிக் கவுரவிக்கும் நீதித்துறை - இதுதான் நாம் எதிர்கொண்டிருக்கும் அரசியல் சூழ்நிலை; நாட்டுப்பற்றும் ஜனநாயக உணர்வும் கொண்ட ஒவ்வொருவரையும் அவசரமாகச் செயல்படக் கோரும் அரசியல் சூழ்நிலை. ●

## வாசகர் கருத்து:

## அரசு ஊழியர் போராட்டம் தோல்வி ஏன்?

நடப்பு பாசிச ஜெயா ஆட்சியில் நடக்கும் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களுக்கெல்லாம் முதன்மையாக இருப்பது போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் 2001 நவம்பரில் நடைபெற்ற 17 நாட்கள் வீரம் செறிந்த போராட்டம்தான். தொழிலாளர்களின் குடும்பங்களெல்லாம் களம் இறங்கிய போராட்டப் பாதையை வழி நடத்தத் தவறினார்கள் தொழிற்சங்க தலைவர்கள். குறிப்பாக தொ.மு.ச. பேரவையும், போலி இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளும்.

அதனால் அந்தப் போராட்டம் தற்காலிக தோல்வியாக முடிவிற்கு வந்தது. தற்போதைய அரசு ஊழியர்களின் சரணாகதி பாதையைப் பார்த்தால் இங்கும் போலி கம்யூனிஸ்டுகளும், அரசியல் சார்புத் தன்மையுள்ள தொழிற்சங்க தலைவர்களும் வழி தவறித் தடுமாறி விட்டனரோ என எண்ணத் தோன்றுகிறது.

வேலை மறுக்கப்பட்ட 3 லட்சம் அரசு ஊழியர்களின் குடும்பங்கள் தெருவில் இறங்கினால் போதும் இந்த அரசை அசைத்துப் பார்த்து விடலாம். உடனடியாக அரசு ஊழியர்கள் கைதாவதற்குப் பயந்து ஓடியதற்குப் பதிலாக சுமார் 50,000 பேரை சிறை நிரப்பும் நடவடிக்கையாகக் களம் இறக்கியிருந்தால் ஒரு வாரத்திற்குச் சிறையில் சோறு போட வக்கின்றி அரசு இறங்கி வந்திருக்கும். இப்பொழுது கூட சரணாகதிக்குப் பதிலாக நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்கவில்லை என்ற பிறகு, தெருவிற்குப் போராட்டக் களத்தை இறக்கியிருக்க வேண்டும்.

ஆனால் பார்வைக்குப் பல சங்கங்களாகத் தோன்றி அவையெல்லாம் கூட்டமைப்பாகச் செயல்படுவதாகத் தோன்றினாலும், அவரவர் சார்ந்த ஓட்டுப் பொறுக்கி அரசியல் சார்புத்தன்மையை வைத்தே போராட்டப் பாதை நகர்கிறது. கருணாநிதி, தான் ஆட்சிக்கு வரும் வரை பொறுமையாக இருங்கள் என்கிறார். அப்படியென்றால் தற்போது டிஸ்மிஸ் செய்யுங்கள் என்கிறாரா? இடதுசாரிகளோ தாம் பாராளுமன்றத் தேர்தலுக்கு மீண்டும் அம்மாவை அடிவருட வைத்துவிடுவாரோ தாடிக்காரர் (சுர்ஜித்) என்று அடக்கியே வாசியுங்கள் என்கின்றனர்.

தங்களைப் பெரிய தொழிற்சங்கங்களாக வருணித்துக் கொள்கிற தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை, சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி. போன்றவை அனைத்துத் தொழில் மையங்களிலும் தொழிற்சங்கங்கள் வைத்துள்ளன. சுமார் 1 மாதத்திற்கு முன்பே அறிவித்து ஆயத்தமான அரசு ஊழியர்கள் போராட்டத்தில் மற்ற பொதுத்துறை நிறுவனங்களையும் இணைக்கும் விதமாக இந்தத் தொழிற்சங்கங்கள் களம் இறக்கியிருக்க வேண்டும்.

இதையெல்லாம் பார்க்கும்போது ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகள் எதையும் சாராமல் தொழில்மையத்திற்கு ஒன்று என்கிற விதத்தில் தொழிற்சங்கங்கள் தோன்ற வேண்டும். ஆனால் அதற்குக் கூட வழியில்லாமல் செய்யும் பா.ஜ.க. மத்திய அரசு தொழிலாளர் நலச் சட்டங்களை, தொழிற்சங்கச் சட்டங்களைத் திருத்த முழு மூச்சாக இறங்கியிருக்கிறது. இன்றைய இளைஞர்களாவது ஓட்டுப் பொறுக்கி அரசியல்களைச் சாராமல் மாணவப்பருவத்திலிருந்தே புரட்சிகர அமைப்புகளில் சேர்ந்து புரட்சிக்கு வித்திடுவதே எதிர்கால மறுகாலனியாதிக்கத்திலிருந்து விடுதலையடைவதற்குச் சரியான பாதை.

● சித்ரகுப்தன், மதுரை.



படிப்பகம்

www.padippakam.com

## அரசு ஊழியர் மீதான அடக்குமுறை :

# எதிர்பாராத சூறாவளியா எதிர்கொள்ள வேண்டிய போராட்டமா?

எண்ணெய்க் கொப்பரையிலிருந்து தப்ப முயன்று, எரியும் நெருப்பில் விழுவதென்பது இதுதான். ஜெயலலிதாவின், வேலை நீக்க உத்தரவுகளை ரத்து செய்வதற்காக உச்ச நீதிமன்றம் சென்ற அரசு ஊழியர்கள் வேலை நிறுத்த உரிமையையே பறிகொடுத்திருக்கிறார்கள். இது குறித்து அரசு ஊழியர் சங்கங்கள் அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரை 8063 பேரின் வேலைநீக்க உத்தரவு ரத்து செய்யப்பட்டதும், மீதமுள்ள 6072 பேரின் வேலைநீக்க உத்தரவுக்கு எதிரான முறையீடுகள் மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவினரால் விசாரிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் தீர்ப்பளிக்கப்பட இருப்பதுமே மாபெரும் நிவாரணங்கள்.

அனைவருக்கும் மீண்டும் வேலை கிடைக்கவில்லை என்ற மனக்குறை இருந்தாலும் அரசு ஊழியர் சங்கங்களைப் பொருத்தமட்டில் அதிகபட்சமாக தாங்கள் என்ன முயற்சி செய்ய முடியுமோ அதைச் செய்து விட்டதாகத்தான் கருதிக் கொண்டிருக்கிறார்கள். 6072 பேரின் வேலைநீக்க உத்தரவுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரிக்கவிருக்கும் மூன்று நீதிபதிகளுக்கும் கடவுள் நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டுமென்றும், ஜெயலலிதா எதையும் கொடுக்காமலிருக்க வேண்டுமென்றும் பிரார்த்திப்பதைத் தவிர, 12 லட்சம் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் வேலையிழந்தவர்களுக்காக வேறெதுவும் செய்யப் போவதாகத் தெரியவில்லை.

போராடுபவர்களை அரசு ஒடுக்குவதென்பது புதிதில்லைதான். ஆனால் அந்த அடக்குமுறையில் உறைந்திருக்கும் வக்கிரம்தான் ஜெயலலிதாவின் முத்திரை. எதிரிகளைச் சட்டென்று கொன்று விடாமல் விதவிதமாகச் சித்திரவதை செய்து, அதைக் கண்டு ரசித்து மகிழும் நாலாந்தரத் தமிழ்ச் சினிமாவின் வில்லன் பாத்திரத்தை ஏற்றிருக்கிறார் இந்த முன்னாள் கதாநாயகி.

சூழ்நிலையின் அவலத்தை நகைப்புக்கிடமாக்கும் விதத்தில் வசனம் பேசுகிறார் சங்கத் தலைவர் சூரியமூர்த்தி: ''என்னை வேண்டுமானால் தூக்கி விடுங்கள்; என் ஆட்களை விட்டு விடுங்கள்'' என்று உருக்கமாக அறிக்கை விடுகிறார். ''வேண்டாம் தலைவா'' என்று பேச்சுக்குச் சொல்லக் கூட ஒரு நாதியில்லை. ஜெயலலிதாவோ இந்தத் 'தியாகியை'த் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

ஜெயலலிதா கோட்டைக்கு எப்போது வருவார் என்று தெரிவித்தால் அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கக் காத்திருப்பதாகக் கூறுகின்றனராம் தலைமைச் செயலகத்தின் பெண் ஊழியர்கள். ஆரவாரமாகத் துவங்கிய போராட்டம் இடையில் சில அவலக்காட்சிகளைக் கடந்து தற்போது கேலிக்குரிய எல்லையை எட்டிவிட்டது.

போராட்டத்தில் தோற்கலாம். அதில் கடுகளவும் அவமானமில்லை. தோற்று வீழ்ந்தாலும் எதிரி நம்மைக் கண்டு அஞ்சினால் அதற்காக நாம் பெருமிதம் கொள்ளலாம். எதிரி நம்மை வெறுத்தால் அதைக் கவுரவமாகக் கருதலாம். ஆனால் ஜெயலலிதாவோ 12 லட்சம் அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் புழுவைப் போலக் கேவலமாகக் கருதுகிறார். இந்த அவமானத்தைத்தான் சகிக்க முடியவில்லை.

அவமானம் அரசு ஊழியர்களுக்கு மட்டுமல்ல; தமிழகமே தலைகுனிந்து நிற்கிறது. இரண்டு லட்சம் பேர் வேலை நீக்கம் என்று கூறியவுடனே மீதமுள்ள 10 லட்சம் பேர் உள்ளே ஓடினார்கள். பிறகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு வந்தவுடனே மற்றவர்கள் ஓடினார்கள். ஓடுகிற வேகத்தில் வேலையிழந்தவர்களைத் திரும்பிப் பார்க்கக்கூட யாருக்கும் தோன்றவில்லை.

உண்ணாவிரதம் உள்ளிட்ட எந்த வகையான எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் இனி ஈடுபடமாட்டோமென்று எழுதிக் கொடுத்துவிட்டு எல்லோரும் உள்ளே நுழைந்திருக்கிறார்கள். ''பலவீனமான சூழலில் இவ்வாறு மன்னிப்புக் கடிதம் கொடுப்பதும் பிறகு மீண்டும் போராடுவதும் தொழிற்சங்க இயக்கத்தில் சகஜம்'' என்று வாதாடுவார்கள் சங்கத் தலைவர்கள்.

நல்லது. பலவீனம் என்றைக்குப் பலமாக மாறும்? அடுத்த மாதமா, அடுத்த ஆண்டா, எப்போது? இந்தப் பலவீனத்தைப் பலமாக மாற்றவிருக்கும் ரசவாதம் என்ன?

அரசு ஊழியர்களின் பலவீனத்தை மன்னிப்புக் கடிதம் என்ற அந்தக் காகிதத்திலிருந்து நாங்கள் கண்டுபிடிக்கவில்லை. போராட்டத்திற்கு ஆதரவாக நாங்கள் கொண்டு வந்துள்ள வெளியீட்டைக் கூட வாங்கத் தயங்கும் அவர்கள் கைகளில் கண்டோம்; இனி போராட்டமே வேண்டாம் என்று கூறிய அவர்களது குரலின் நடுக்கத்தில் கண்டோம்; அனைத்திற்கும் மேலாக, அச்சத்தை அவர்களின் கண்களில் கண்டோம்.

இத்தனைக்குப் பிறகும் பலர் கனவு காண்கிறார்கள். ''அரசு ஊழியர்களின்

**சென்னை உயர்நீதிமன்றம் நம்மைக் காப்பாற்றுமா என்று காத்திருக்கும் கண்கள்: அறியாமையா – சுயநலமா?**



www.padippakam.com

அமைதியான வாழ்க்கையில் எதிர்பாராமல் வீசிய சூறாவளி இது'' என்று தம்மைத் தேற்றிக் கொள்கிறார்கள். இந்தப் பேரலையை எதிர்த்து நிற்காமல் குனிந்து கொண்டால் உயிர் தப்பி விடலாம் என்ற நம்புகிறார்கள். இவையெல்லாம் வேலையில் இருப்பவர்களின் நம்பிக்கை.

வேலை இழந்தவர்கள்? அவர்களும் நம்புகிறார்கள். பலர் நீதிமன்றத்தை நம்புகிறார்கள், சிலர் கலைஞரை நம்புகிறார்கள், சிலர் கடவுளை நம்புகிறார்கள். யாருக்காவது சக ஊழியர்கள் மீது நம்பிக்கை இருக்கிறதா? கேட்டுப் பாருங்கள். யாரோ ஒரு நீதிபதியை நம்புகிறவர்களுக்கு தங்கள் பக்கத்து இருக்கையில் பல்லாண்டுகளாகப் பணி புரிந்த நண்பர் மீது நம்பிக்கை இருக்கிறதா? 12 லட்சம் ஊழியர்களை வழி நடத்தும் சங்கங்களின் தலைவர்கள் மீது நம்பிக்கை இருக்கிறதா? கேட்டுப் பாருங்கள்.

12 லட்சம் பேரின் இன்றைய பலவீனம் நாளைய பலமாக மாறிவிடும் என்று இவர்கள் நம்புகிறார்களா - கேட்டுப் பாருங்கள்.

12 லட்சம் உயிருள்ள மனிதர்களால் வழங்க முடியாத நம்பிக்கையை சில உயிரற்ற உடல்கள் நமக்கு வழங்குகின்றன. மேலிடத்தின் உத்திரவை மீறும் துணிவில்லாமல் அநீதியான வேலை நீக்க உத்தரவைத் தங்களது கையால் பலருக்கு வழங்க நேர்ந்ததை எண்ணி எண்ணி மறுகி மாரடைப்பு வந்து செத்திருக்கிறார்கள் சில ஊழியர்கள்.

''நானென்ன செய்ய முடியும், மேலிடத்தின் உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து யூதர்களைக் கொலை செய்தேன். கொலைக்கு நான் பொறுப்பல்ல'' என்று கூறிய ஹிட்லரின் நாஜி அதிகாரிகளைப் போல இவர்கள் சிந்திக்கவில்லை. தங்களது குற்றத்தின் சுமை தாளாமல் இவர்கள் 'தற்கொலை' செய்து கொண்டுவிட்டார்கள்.

பணியிலிருப்பவர்கள் அனைவரும் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். குற்றவுணர்வு உங்கள் நெஞ்சை அறுக்கவில்லையா? 12 லட்சம் பேரும் வெளியில் நின்றிருந்தால் டெஸ்மாவின் கீழ் எத்தனைச் சிறைகளில் உங்களை அடைத்திருக்க முடியும்? எப்படிப் பணிநீக்கம் செய்திருக்க முடியும்?

ஆயிரக்கணக்கானோரைத் தெருவில் நிறுத்திவிட்டு ஓடோடிச் சென்று உங்கள் நாற்காலியைக் கட்டிப் பிடித்து நிம்மதிப் பெருமூச்சு விட்டீர்களே, வேலையிழந்த ஆயிரக்கணக்கான ஊழியர்களின் துயரப் பெருமூச்சு அப்போது உங்கள் காதில் விழவில்லையா?

**ஒருவேளை நீங்கள் ஜெயாவைத் தோற்கடித்திருந்தால் முதலாளிகள் ஜெயலலிதாவைப் பாராட்டியிருக்க முடியாது. அந்தவகையில் அவர்களுடைய பாராட்டு உங்களைச் சேர்கிறது. ஒருவேளை வேலையைக் கைப்பற்றும் 'மகிழ்ச்சி'க்குப் பதிலாகப் போராட்டமெனும் 'துன்பத்தை' நீங்கள் தெரிவு செய்திருந்தால் இந்திய முதலாளிகள் மகிழ்ந்திருக்க முடியாது. எனவே, உங்களுடைய மகிழ்ச்சிதான் முதலாளிகளின் மகிழ்ச்சிக்கு ஆதாரமாய் அமைகிறது.**

இல்லை. சரியான தருணத்தில் உள்ளே ஓடிவிட்ட உங்கள் சமயோசிதத்தை நீங்களே வியந்து கொள்கிறீர்கள். அல்லது மயிரிழையில் உயிர் தப்பிய உங்கள் அதிருஷ்டத்தை எண்ணி மகிழ்ந்து கொள்கிறீர்கள். மொத்தத்தில் உங்கள் குடும்பம், அதன் அந்தஸ்து, வாழ்க்கை வசதிகள், பிள்ளையின் கல்வி, எதிர்காலத் திட்டங்கள், சினிமா, ஓட்டல், மதுப் புட்டி அனைத்தும் காப்பாற்றப்பட்டு விட்டன. இவையனைத்தையும் உத்தரவாதம் செய்யும் உங்கள் பொருளாதார ஆதாயங்கள் காப்பாற்றப்பட்டு விட்டன. மகிழ்ச்சி!

போராட்டத்தைக் கடுமையாக ஒடுக்கி, ஒழுங்கை நிலைநாட்டிய புரட்சித் தலைவியைப் புகழ்ந்திருக்கிறது அனைத்திந்தியத் தொழிலதிபர்கள் சங்கம். தொழிற்சங்க ஒற்றுமையின் முதுகெலும்பை முறித்ததற்காக, இனி தொழிலாளர் இயக்கத்தை நசுக்குவதற்கு ஒரு முன்மாதிரியைப் படைத்ததற்காக ஜெயலலிதாவைப் பாராட்டுகிறார்கள் இந்தியப் பெருமுதலாளிகள். நீதிமன்றமும் பாராட்டுகிறது.

ஒருவேளை நீங்கள் ஜெயாவைத் தோற்கடித்திருந்தால் அவர்கள் ஜெயலலிதாவைப் பாராட்டியிருக்க முடியாது. அந்தவகையில் அவர்களுடைய பாராட்டு உங்களைச் சேர்கிறது. ஒருவேளை வேலையைக் கைப்பற்றும் 'மகிழ்ச்சி'க்குப் பதிலாகப் போராட்டமெனும் 'துன்பத்தை' நீங்கள் தெரிவு செய்திருந்தால் இந்திய முதலாளிகள் மகிழ்ந்திருக்க முடியாது. எனவே, உங்களுடைய மகிழ்ச்சிதான் முதலாளிகளின் மகிழ்ச்சிக்கு ஆதாரமாய் அமைகிறது.

இரண்டு லட்சம் ஊழியர்களை வேலைநீக்கம் செய்ததற்கு மட்டும்தான் நாம் ஜெயலலிதாவைப் பொறுப்பாக்க முடியும். 10 லட்சம் பேர் வேலைக்குச் சென்றதற்கு நீங்களும், உங்களை இவ்வாறு உருவாக்கி வளர்த்த சங்கத் தலைமையும்தான் பொறுப்பு. இரண்டு லட்சம் பேர் தெருவில் நின்றாலும் அரசு இயங்கும் என்பதைச் சாத்தியமாக்கியவர்கள் நீங்கள்; உங்கள் தலைவர்கள்!

இந்தச் சுயநலமிருக்கிறதே, இதற்குப் பெயர்தான் பொருளாதாரவாதம். விவசாயிகளும், நெசவாளர்களும் இன்னபிற ஏழை மக்களும் ஜெ. அரசின் அடுக்கடுக்கான தாக்குதல்களுக்கு இலக்கானபோது 'அது அவர்கள் பிரச்சினை' என்று அலட்சியம் செய்தீர்கள். பிறகு உங்கள் முறை வந்தது. ''எனது சம்பளம், எனது ஓய்வூதியம்'' என்று குரலெழுப்பினீர்கள். சுயநலத்தை 12 லட்சத்தால் பெருக்கினால் கிடைக்கும் விடை பொதுநலம் அல்ல. ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் என்ற ஒரு பிரிவினரின் நலனுக்கான கோரிக்கை மட்டும்தான் அது. அதனால்தான் நீங்கள் 2 சதவீதம், மக்கள் 98 சதவீதம் என்று உங்களுக்கெதிராக மக்களை நிறுத்த ஜெயலலிதாவால் முடிந்தது.

''எல்லாத் தரப்பு மக்களுக்கும் எதிரான பொது எதிரியான ஜெ. அரசு மற்றவர்களை என்ன செய்தாலும் எங்களுக்குக் கவலையில்லை; எங்கள் கோரிக்கை மட்டும்தான் எங்கள் கவலை'' என்றது உங்கள் தலைமை. ''எத்தனை பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டாலும் என் வேலை மட்டும்தான் என் கவலை'' என்கிறீர்கள் நீங்கள்.

ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட சலுகைகளைத் தரமுடியாதென்று ஒருதலைப்பட்சமாக ஜெயலலிதா அரசு மீறுவதை நம்பிக்கைத் துரோகமென்று அழைக்கலாமென்றால், சில ஆயிரம் பேர் நீதிபதிகளின் தயவை எதிர்பார்த்துத் தவித்திருக்க, மற்றவர்கள் வழக்கம்போல வேலைக்குச் செல்வது மட்டும் நம்பிக்கைத் துரோகமாகாதா? எனினும் குற்றவுணர்வில்லாமல் இந்தத் துரோகத்தைச் செய்வதற்கு ஏற்ப உங்கள் சங்கத் தலைமைகள் உங்களைப் போதுமான அளவுக்குப்


படிப்பகம்

www.padippakam.com



**மன்னிப்புக் கடிதங்கள் எழுதும் கைகள் :**
**கோழைத்தனமா - புத்திசாலித்தனமா?**

பயிற்றுவித்திருக்கின்றன.

ஒரே உத்திரவில் துடைத்தெறியப் பட்ட 10,000 சாலைப் பணியாளர்களும் மக்கள் நலப் பணியாளர்களும் அரசு ஊழியர்களில்லையா? ஒரு வேளை அரசு ஊழியர்களிலேயே அவர்கள் தீண்டத்தகாத சாதியினரா? அவர்களில் எத்தனை பேர் தற்கொலை செய்து கொண்டனர் என்பதை நீங்கள் அறிவீர்களா? கோட்டைக்கு மனுக் கொடுக்க வந்தவர்களை தமிழக மெங்கும் வழிமறித்துப் போலீசு தாக்கியதையும், சிறை வைத்ததையும் நீங்கள் தொலைக்காட்சிகளில் காணவில்லையா?

அவர்கள் முறையான அரசு ஊழியர்களில்லை, அவர்கள் வேறு ரகம், வேறு தரம், வேறு சாதி... என ஆயிரம் விளக்கங்கள் சொல்லி உங்கள் இரக்கமின்மையை மறைக்கலாம். இன்று தெருவில் நிற்பவர்கள் உங்கள் சாதிதான். 'நாங்கள் வேறு' என்று கூறியவர்கள் இப்போது 'நான் வேறு' என்கிறீர்கள்.

எதிர்காலம் சூனியமாக்கப்பட்ட இளங்குருத்துக்களான மாணவர்கள் தெருவில் தடியடிபட்டபோது, 20,000 சம்பளக்காரர்களான பேராசிரியப் பெருமக்கள் பின்வாங்கினார்கள். சுயநலத்தின் ஒளிவிளக்காக இருந்து மாணவர்களுக்கு வழிகாட்டினார்கள்.

இப்போது பார்வையிழந்த ஆசிரியர்கள் தெருவில் நிற்க, தனது சொந்த எதிர்காலம் குறித்த தூரப் பார்வை கொண்ட பேராசிரியர்கள் உள்ளே பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

12 லட்சம் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் முறையாகப் பணி நியமனம் பெற்றவர்கள்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் தற்போது ஜெயலலிதா உங்களுக்கு வழங்கியிருக்கும் மறுநியமனம் என்பது ஒரு லஞ்சம். உங்களிடமிருந்து ஒரே நாளில் திருடிய வேலையை இப்போது உங்களுக்கே லஞ்சமாக வழங்கியிருக்கிறார் புரட்சித் தலைவி. இந்தக் கையூட்டுக்கு அவர் எதிர்பார்க்கும் கைம்மாறு ஒன்று மட்டும்தான் - ''வேலை நீக்கம் செய்யப் பட்டவர்களுக்காக நீங்கள் போராடக் கூடாது.''

நீங்கள் ஆத்திரப்படலாம். வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை நாங்கள் புறக்கணிக்கவில்லை என்றும் அவர்களுடைய தியாகத்தைப் போற்றுவதாகவும் கூறலாம். அவர்களுக்கு நிதி உதவி அளிக்கவிருப்பதாக வாக்குறுதி அளிக்கலாம்.

உங்கள் இரக்கவுணர்ச்சியைச் சந்தேகிக்கவில்லை. அதன் வரம்பை மட்டுமே சுட்டிக் காட்டுகிறோம். ஜெயலலிதா அனுமதிக்கும் அளவிற்கு மட்டும்தான் நீங்கள் அவர்கள் மீது இரக்கம் காட்ட இயலும். வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் அலுவலக வளாகத்தில் நுழையவே தடை விதிக்கப் படலாம்; அவர்களுடன் உரையாடுபவர்கள் கண்காணிக்கப் படலாம்; அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படலாம்.

வெளியேற்றப்பட்ட ஊழியர்கள் உங்களிடம் எதிர்பார்ப்பது உள்ளேயிருந்தபடியே நீங்கள் தெரிவிக்கும் இரக்கத்தை அல்ல. வெளியே வந்து நீங்கள் எழுப்பும் உரிமை முழக்கத்தை!

புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் ஜெயலலிதா அரசின் பணயக் கைதிகள். தன்னுடைய பாசிச அடக்குமுறையை பகிரங்கமாக வாழ்த்தி வரவேற்க வேண்டுமென்று 'ஜெ' உங்களிடம் கோரவில்லை. ''மவுனமாக இருங்கள், கொள்கையற்று இருங்கள், செயலற்றிருங்கள், மகிழ்ச்சியாக இருங்கள்'' என்பதுதான் ஜெ உங்களுக்கு அளிக்கும் செய்தி.

தனக்கென்று கொள்கை ஏதுமில்லை எனக்கூறும் அப்பாவிகள்தான் உண்மையில் அபாயகரமானவர்கள். இவர்கள் அபாயமற்றவர்களாகத்தான் தோற்றமளிக்கிறார்கள். ஆனால் நெருக்கடியான தருணங்களில் இவர்களது 'அப்பாவித்தனமான மவுனமே' அபாயகரமான ஆயுதமாக எதிரியின் கையில் மின்னத் தொடங்குகிறது.

''எனக்கு உலக வங்கியைத் தெரியாது, தனியார்மயம் - தாராளமயமெல்லாம் தெரியாது, சித்தி - அண்ணாமலை - அப்பாவைத் தவிர வேறு யாரையும் தெரியாது'' என்று கூறும் அப்பாவிகளின் அறியாமைக்குள் ஒரு அகங்காரம் இருக்கிறது. அவர்களது வாழ்க்கை, வர்க்க நலன், கனவு ஆகிய வற்றில்தான் இந்த அகங்காரத்தின் அடித்தளம் இருக்கிறது. இவற்றைக் கேள்விக்குள்ளாக்கிப் பாருங்கள். அவர்கள் உங்களுக்கே பாடம் நடத்துவார்கள். போராடுவது பயனற்றது என்ற தத்துவத்தைப் புரிய வைப்பார்கள்.

வேலையிழந்தவர்கள் இன்று தியாகிகள் என்றும் வீரர்கள் என்றும் மதிக்கப்படலாம்; நாளை அவர்கள் அனுதாபத்துக்குரியவர்களாவார்கள்; பிறகு துரதிருஷ்டசாலிகள் என அழைக்கப்படுவார்கள்; அப்புறம் பிழைக்கத் தெரியாதவர்களாகவும் தொல்லை பிடித்தவர்களாகவும் இறுதியாகப் போராடக் கூடாது என்பதற்கான எதிர்மறை உதாரணங்களாகவும் சித்தரிக்கப் படுவார்கள்.

இது வேலையில் இருப்பவர்கள் மீது வாசிக்கப்படும் குற்றப்பத்திரிக்கை அல்ல. சங்கத் தலைமைகளின் சிந்தனைப் போக்கும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் மனப்போக்கும் எப்படி இருந்து வருகிறது என்பதைப் புரிய வைக்கும் ஒரு முயற்சி.

இப்படியொரு அடக்குமுறையை இந்த அரசிடமிருந்து எதிர்பார்க்க வில்லை என்று அரசு ஊழியர் சங்கத் தலைமைகள் கூறுமானால் அது பொய். அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 'கசப்பு மருந்து', கடந்த இரண்டாண்டு



படிப்பகம்

www.padippakam.com

களில் தமிழக மக்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. உலக வங்கியின் ஆணைதான் இதற்குக் காரணம் என்பது தினத்தந்தி வாசகனுக்கும் தெரியுமென்பதால், தங்களுக்குத் தெரியாதென்று சங்கத் தலைவர்கள் கூற முடியாது.

உலக வங்கி, மறுகாலனியாக்கம் என்ற சொற்களைக் கூறினாலோ தவிர்க்கவியலாமல் அரசியல் பேசவேண்டிவரும். ''தொழிற்சங்கத்தில் அரசியல் பேசக்கூடாது'' என்றும், ஊரே தீப்பிடித்து எரிந்தாலும், 'நம்வீடு - நம் கோரிக்கை' தவிர எது பற்றியும் கவலைப்படக் கூடாதென்றும் ஒரு உயர்ந்த ஒழுக்கத்தை இதுகாறும் போதித்துவந்த தலைவர்கள் திடீரென 'நெறிபிறழ' இயலாது. அதற்குள் அவர்கள் தயாராகவும் இல்லை.

''தென்னை மரமளவுக்கு இருக்கிறது தண்ணீரின் ஆழம்'' என்று அவர்களுக்குத் தெரியும். ''ஆழம் முழங்கால் அளவுதான் - கலக்கிவிடலாம்'' என்று இதுநாள்வரை ஊழியர்களிடம் நம்பிக் கையூட்டி வந்திருப்பதால், வேறு வழியின்றிக் குதித்தார்கள். மூழ்கினார்கள்.

ஊழியர்களும் அரசியலற்ற தொழிற்சங்கவாதத்தின் ஊறுகாய் போட்டுப் பதமாக்கப்பட்டவர்கள். பக்கத்து மேசைக்காரரின் பெயர் கூட மறந்து அவரது நாற்காலியின் பெயரால் அவரை அழைக்குமளவு அரசு ஊழியர் அடையாளத்தில் ஐக்கியமானவர்கள்.

அதிகார வர்க்க எந்திரத்தின் உறுப்புகள் என்ற வகையில் அவர்களுக்கு ஒரு காது மட்டுமே கேட்கும். அரசு ஆணைகள், உயரதிகாரிகளின் உத்தரவுகள் தவிர மக்களின் பிரச்சினைகள், துயரம் போன்றவை அவர்களது காதில் ஏறுவதில்லை. நாட்டு நடப்புகள் எதையும் காதில் ஏறவிடாமல் தடுக்கும் வரப்பிரசாதமாக அவர்கள் கருதிக் கொண்டிருந்த இந்தச் செவிட்டுத் தனமே இப்போது சாபமாக மாறி அவர்களைப் பழிவாங்கி விட்டது.

''குத்திக் காட்டுவதற்கு இதுவா நேரம்?'' என்று சிலர் வேதனைப்படலாம். ஆம், இதுதான் நேரம். தோல்வியடைந்த தருணத்தில்தான் தோல்விக்கான காரணங்களைப் பரிசீலிக்க வேண்டும். மேலும், மற்ற நேரங்களில் நீங்கள் எதற்கும் காது கொடுப்பதில்லை என்பதும் இன்னொரு காரணம்.

''மக்கள் தங்களைப் பற்றியே பயம் அடையும்படி கற்பித்தால்தான் அவர்களுக்குத் துணிவு ஏற்படும்'' என்றார் மார்க்ஸ்.

**உங்களில் பலர் அமைதியை நாடுகிறீர்கள். பழைய பொற்காலம் திரும்பாதாவென ஏங்குகிறீர்கள். பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் நியமனம் பெற்றுவிட்டால் இந்தப் புயல் ஓய்ந்துவிடும் என்று நம்புகிறீர்கள். ஓயாது. ஏனென்றால் இந்தப் புயலின் கண் உலகவங்கி. எதிர்ப்பில்லாத வெற்றிடங்களைத்தான் எந்தப் புயலும் கடுமையாகத் தாக்கும். போராட்டமில்லாத அமைதி என்பது அழிவுக்கு நீங்கள் வழங்கும் அழைப்பிதழ்.**

நீங்கள் ஜெ அரசைக் கண்டு அஞ்சுகிறீர்கள். இந்த அரசை மேலும் கடுமையான சொற்களால் நாங்கள் சாடுவதன் மூலமோ, அல்லது இந்த அரசின் சூழ்ச்சித் திட்டங்களை விவரிப்பதன் மூலமோ, வரவிருக்கும் அடக்குமுறைகள் பற்றி விளக்கி முன்னறிவிப்பு செய்வதன் மூலமோ உங்கள் அச்சம் ஒழியப் போவதில்லை. ஒருவேளை அது அதிகரிக்கக்கூடும்.

உங்களுக்குள்ளே உறைந்திருக்கும் அஞ்சத்தக்க பண்புகளை, அபாயகரமான கருத்துக்களை, அருவெறுக்கத் தக்க நடைமுறையை விமரிசிப்பதன் வாயிலாகத்தான் உங்களுக்குள்ளிருந்து துணிவை வரவழைக்க முடியும்.

''நாங்கள் போராடினோம்; வாபஸ் வாங்கினோம்; எங்கள் உரிமைகளை இழந்தோம்; இது எங்கள் சொந்தப் பிரச்சினை; எங்களை விமரிசிக்க நீ யார்?'' என்று நீங்கள் எம்மைக் கேட்க முடியாது. ஏனென்றால் இன்று நீங்கள் இழந்திருக்கும் உங்களுடைய உரிமைகள் உங்களால் மட்டும் சம்பாதிக்கப்பட்ட உரிமைகளல்ல. ''எனக்கு என் வேலை முக்கியம் - என் உரிமை போனால் போகட்டும்'' என்று கூற எந்த ஒரு தனி நபருக்கும் உரிமை கிடையாது.

உங்கள் பணி, பணிப் பாதுகாப்பு, தொழிற்சங்க உரிமைகள், வேலை நிறுத்த உரிமை, பிற சலுகைகள் ஆகிய எதையும் இன்று பணியிலிருக்கும் எந்த ஒரு அரசு ஊழியரும் தனிப்பட்ட முறையில் போராடிப் பெறவில்லை. அவை கோடிக்கணக்கான மக்கள் தம் குருதியைச் சிந்தி உங்களுக்குப் பெற்றுத் தந்த உரிமைகள்.

எனவே, ''எனக்குப் போராட விருப்பமில்லை; நான் வேலைக்குச் செல்கிறேன்'' என்று எந்த ஒரு தனிமனிதனும் உரிமை கோர முடியாது. போராட்டத்திலிருந்து பின்வாங்கி ஒளிந்து கொள்வதற்கு எந்தச் சங்கத் தலைமைக்கும் உரிமை கிடையாது. பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கம் வைக்கும் உரிமை, வேலைநிறுத்த உரிமை ஆகிய அனைத்தும் நம் முன்னோர் போராடிப் பெற்ற உரிமைகள். அதை அடகு வைக்க உங்களுக்கு உரிமை கிடையாது.

''விசாரணையில்லாமல் வேலை நீக்கம் செய்வது தவறு; டெஸ்மா சட்டம் அடிப்படை உரிமையைப் பறிக்கிறது'' என்று அரசியல் சட்டத்தைக் காட்டி இன்று வாதாடுகிறாரே உங்கள் வழக்குரைஞர் ப. சிதம்பரம், அந்த அரசியல் சட்டத்தில் இந்த உரிமைகளைக் கடவுள் எழுதவில்லை. மக்களின் போராட்டங்கள் கொடுத்த நிர்ப்பந்தம்தான் ஆளும் வர்க்கத்தை எழுத வைத்திருக்கிறது. நீங்களோ, லாட்டரிச் சீட்டு முடிவு, ராசிபலன் பார்ப்பதைப் போல நீதிமன்ற முடிவு என்ன என்பதை அன்றாடம் தினசரியில் தேடிக் கொண்டிருக்கிறீர்கள். சங்கத் தலைமையின் ஒரு பிரிவு நீதிமன்றத்தைச் சரணடைந்திருக்கிறது. சூரியமூர்த்தியோ சண்டைக்காரன் காலிலேயே விழுந்து விடலாம் என்று வழிகாட்டுகிறார்.

இதுதான் நிலைமை. உங்களுடைய தவறுகளை மனந்திறந்து பரிசீலனை செய்யுங்கள். பிறகுதான் சங்கத் தலைமைகளின் தவறுகள் உங்கள் கண்ணுக்குப் புலப்படும்.

ஊழலுக்காகத் தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளி, முதல்வர் நாற்காலியில் அமர்ந்து கொண்டு நம்மைக் குற்றம் சாட்டுவதா என்ற கேள்வி உங்கள் தொண்டைக் குழியிலேயே நிற்கிறது. அந்தக் கேள்வியை உரக்கக கேட்க விடாமல் தடுக்கும் உங்கள் கோழைத் தனத்தைக் கண்டு அஞ்சுங்கள்.

இடஒதுக்கீடு, சமூக நீதி பேசி அரசியல் செல்வாக்குப் பெற்ற கட்சிகள் இன்று இந்த அடக்குமுறையை எதிர்க்கத் துணிவின்றி அறிக்கைக்குள் பதுங்கிக் கொள்ளும் சந்தர்ப்பவாதம் உங்களுக்கு உறைக்கவேயில்லை. அது சுள்ளென்று உறைக்க வேண்டுமானால் உங்களிடம் படிந்திருக்கும் காரியவாதத்தைக் கண்டு அஞ்சுங்கள்.

தீண்டாமைச் சிறையிலிருந்து தலித் மக்களைத் தப்ப விடாமல் விலங்கிடும்


படிப்பகம்

www.padippakam.com

# நாடாளும் ஊழலும் பிச்சையெடுக்கும் வள்ளலும்

வயல் காய்ந்தால் ஊரில் எல்லாமே காய்ந்து விடுகின்றன.

''பாருங்க கையே காஞ்சி கெடக்கு, வயவேல மும்முரமா இருந்தா இன்னேரம் அவனவனும் எட்ணாவுக்கு எண்ண ஊத்து, ஓர்ருவாவுக்கு ஊத்துன்னு மேலுக்கும் கீழுக்கும் தடவிக்கிட்டு சும்மா மினுமினுப்பா நிப்பானுவ. இப்ப சீண்ட நாதியில்லாம கையே காஞ்சி கெடக்கு போங்க'' அலுத்துக் கொண்டார் எண்ணெய்க் கடைக்காரர்.

''என்ன பந்தநல்லூர்லேயே உங்க டீக் கடைதான் களை கட்டுது'' தேநீரை உறிஞ்சி கொண்டே பழக்கமுள்ள டீக் கடைக்காரரைச் சீண்டினேன்.

''அட நீங்க வேற தம்பி, காலைல ஷோ கேசுல கொட்டுன தித்திப்புப் போண்டாவ ஈ கூட எட்டிப் பாக்க மாட்டேங்குது. எல்லாம் வா காஞ்ச நேரமாயிருக்கு, ரெண்டு போண்டாவ எடுத்துக்கிட்டு, தெரிஞ்சவன் வந்தாலும் எடுத்துக்கடாம் பானுவ. மெல்ல பிச்சிப் பிச்சிப் போடுறதுக்கும் மினி பஸ் வர்றதுக்கும் நேரப் பொருத்தமாயிருக்கும், இப்ப என்ன டான்னா தெரிஞ்சவங்கூட பாய்லர மொறச்சி மொறச்சிப் பாக்குறானே ஒழிய உள்ளார வரமாட்டேங்குறான் போங்க! அவ்ளோ காச்சப்பாடு சனங்ககிட்ட. அந்தாளு போயி இந்தம்மா வந்துச்சு. சரி வாஜ்பாயி வந்துதான் எதுவும் நடக் கும்னு பாத்தா இவன் அடிக்கரும்ப அப்புடியே உறிஞ்சுற ஆளு போலருக்கு....'' நாட்டு நடப்பை டீ கிளாசில் நாலு ஆத்து ஆத்தி இறக்கி வைத்தார் கடைக்காரர்.

பஸ் நிற்குமிடத்திற்கு நகர்ந்து வந்து நின்றபடி பெட்டிக் கடையை நோட்டம் விட்டேன். ''ஜெயலலிதா ஊழல் வழக்கு! மேல் முறையீடு. பிரபல தொழிலதிபர் பண மோசடி'' படித்துக் கொண்டிருக்கும் போதே ''ராசா, ராசா ஒரு நாலணா தாப்பா ராசா, ராசா'', ஒரு பிச்சைக்காரப் பாட்டி கவனத்தை திருப்பியது. சில்லறை இல்லாததால், 'இல்ல பாட்டி' என்றேன் மெதுவாக. ''நல்லா இருப்ப ராசா ஒரு டீத்தண்ணி குடிப்பேன் தா ராசா'' நச்சரிக்க ஆரம்பித்தது பாட்டி. எலும்பும் தோலுமாய் குரல் மட்டுமே ஆதாரமாய் கெஞ்சியபடி அது நின்ற கோலம் மனதை உலுக்கினாலும் அந்த நேரத்திற்கு உதவும்படியான வாய்ப்பில்லாமல் போன வருத்தத்துடன் அது நகர்ந்து போவதையே பார்க்க ஆரம்பித்தேன். சிலர் பாட்டியைப் பார்த்ததும் தள்ளிப்போய் ஒதுங்கிக் கொண்டனர்.

பக்கத்திலேயே ஒருவன் சாராய நெடியுடன் மப்பும் மந்தாரமுமாய் அசைந்து கொண்டு நின்றிருந்தான். அவன் பையிலுள்ள வெத்தலப் பாக்குப் பொட்டலத்தை எடுக்க பொலபொலவென்று காசு சிதறி ஓடியது. ''எந்த நாய் பண்ண வேல இது?'' என்று உளறியபடியே ஒன்றிரண்டு காசைப் பொறுக்கி எடுத்துக் கொண்டான். அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பாட்டி நிதானமாகக் கீழே குனிந்து சில காசுகளைப் பொறுக்கி எடுத்தது. குடிகாரன் அதைக் கண்டு கொள்ளவே இல்லை. அக்கம் பக்கம் நின்று கொண்டிருந்தவர்களில் ஒரு டிப்டாப் ஆசாமி ''கெழவிக்கு லக்குதான் பாருங்க'' என்று என்னைச் சீண்டினான்.

மொத்தக் காசுகளையும் பொறுக்கி எடுத்த பிச்சைக்காரப் பாட்டி ''ஏம்பா இந்த காசுச் சம்பாரிக்க என்னான்ன லோல்பட வேண்டியிருக்கு, இவ்ள அலட்சியமா கீழ போட்டுட்டு நிக்கிறியேப்பா. நல்ல புள்ள போ நீ'' குடிகாரன் கையை இழுத்துக் காசைத் திணித்த பாட்டி ''அப்பா ராசா அப்பா ராசா'' என கிடுகிடுவெனக் கையேந்திக் கொண்டு அடுத்தடுத்த ஆட்களை நோக்கி அதுபாட்டுக்கும் போய்க் கொண்டிருந்தது.

அதையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த என்னைக் கவனித்த ஸ்வீட் கடைக்காரர் ''என்ன சார் ஆச்சரியமா பாக்குறீங்க. ஒரு நேரத்துல அறுப்புக்குப் போனா ஊருக்கே எத்தன களம் அறுத்த கை தெரியுங்களா அது! திருடுமா அது'' என்று அர்த்தத்தை விளக்கினார். அவலம் இப்போது ஆத்திரமானது எனக்கு. உங்களுக்கு?

● சுடர்விழி

---

மதமாற்றத் தடைச்சட்டமும், உரிமைகள் பறிக்கப்பட்ட உங்களை அலுவலகத்தை விட்டு வெளியேறவிடாமல் தடுக்கின்ற டெஸ்மாவும் ஒரே தன்மையானவைதான். இருபுறமும் வெட்டும் பார்ப்பனப் பாசிசம் என்ற இந்த வெட்டுக் கத்தியைப் புரிந்து கொள்ள முடியாமல் உங்கள் கண்ணை மறைக்கும் சாதியுணர்வைக் கண்டு அஞ்சுங்கள்.

மக்களின் துன்பத்தையும், அவர்கள் மீது இந்த அரசு ஏவுகின்ற அடக்குமுறையையும் காணவொட்டாமல் உங்கள் இதயத்தைக் கல்லாக்கும் அதிகார மமதையைக் கண்டு அஞ்சுங்கள். லஞ்சப் புல்லுருவிகளைப் பாதுகாக்கும் மாஃபியாத்தனமான ஒற்றுமையை ஊழியர் ஒற்றுமையெனச் சித்தரிக்கும் உங்கள் வெட்கங்கெட்ட 'தொழிற்சங்க' உணர்வை எண்ணி அஞ்சுங்கள்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை. உங்கள் குறைகளுக்கும், குற்றங்களுக்கும் அஞ்சுங்கள். துணிவு பிறக்கும்.

உங்களில் பலர் அமைதியை நாடுகிறீர்கள். பழைய பொற்காலம் திரும்பாதாவென ஏங்குகிறீர்கள். பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் நியமனம் பெற்றுவிட்டால் இந்தப் புயல் ஓய்ந்துவிடும் என்று நம்புகிறீர்கள். ஓயாது. ஏனென்றால் இந்தப் புயலின் கண் உலகவங்கி. எதிர்ப்பில்லாத வெற்றிடங்களைத்தான் எந்தப் புயலும் கடுமையாகத்தாக்கும். போராட்டமில்லாத அமைதி என்பது அழிவுக்கு நீங்கள் வழங்கும் அழைப்பிதழ்.

நீங்கள் சீறினீர்கள்; உண்மைதான். ஆனால் வெடிக்கவில்லை. வெடிக்கத் தவறிய வெடிகளை - புஸ்வாணங்களை - யாரும் சும்மா விடுவதில்லை. அவை மிதிக்கப்படும், நசுக்கப்படும். தவறிக்கூட மீண்டும் வெடிக்காமலிருப்பதை உறுதி செய்து கொள்ள நீங்களும் நசுக்கப்படுவீர்கள்.

இந்தத் தோல்வி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் தனிப்பட்ட விவகாரமல்ல. பனிரெண்டு லட்சம் ஊழியர்களையே அடக்கிப் பணியவைத்த புரட்சித்தலைவி, மனித ரத்தத்தைச் சுவைத்த ஓநாய் மற்றெல்லோர் மீதும் பாயும்; முன்னிலும் மூர்க்கமாகப் பாயும்; உங்கள் மீதும் மறுபடி பாயும்.

ஓய்ந்து விடாதீர்கள். வலிமையானவர்கள்தான் வெற்றி பெறுவார்கள் என்பது கணித சூத்திரத்தைப் போன்ற உண்மை அல்ல. வரலாறு அப்படி இருந்தால், வலிமை குறைந்தவர்கள் எங்குமே போரில் இறங்க மாட்டார்கள். தோற்றவர்கள் என்றும் தோற்றவர்களே என்றால், இன்று இராக்கில் தினமிரண்டு அமெரிக்கப் பிணங்கள் விழுந்து கொண்டிருக்காது.

இறுதி வெற்றியைத் தீர்மானிப்பது வலிமையல்ல - நீதி! நாட்டுப்பற்று, மக்கள் பற்று, தியாகவுணர்வு, உரிமை வேட்கை, அரசியல் விழிப்புணர்வு, வீரம் இவையனைத்தும் கொண்ட படையை எந்த பாசிஸ்டும் வெல்ல முடியாது. இன்னமும் வாய்ப்பிருக்கிறது; இரண்டாவது சுற்றில் இதை நிரூபித்துக் காட்டுங்கள்.

● சூரியன்



படிப்பகம்

www.padippakam.com



# தீ

● இலட்சுமணப் பெருமாள்

தாக்கல் வந்ததுதான் தாமசம். ஊருச்சனமே பஸ்ஸுல திரண்டு போயிருச்சி. விறகுக்குப் போயிருந்த சேர்மத்தாயிக்கு இப்படின்னு விசயம் தெரிய வந்ததும் விறகை அரைகுறையா அள்ளிப் போட்டுக் கட்டி அவக்குத்த வக்குன்னு ஓடியாந்தா. வீட்டு முத்தத்துல ஆணும் பொண்ணும் கூட்டமா கூடி நின்னாங்க.

வாயிலிருந்து பொவயிலை ஒழுக நின்று கொண்டிருந்த முத்து சேர்மத்தாயியைப் பார்த்ததும் ஓடிவந்து விவரம் சொன்னன்.

''தீப்பெட்டி ஆபீஸ் பூராவும் பிடிச்சு எரியுதாம் சேர்மத்தாயி! பத்து ஏக்கர் சுத்தளவு இருக்கும் கட்டிடம். சுவத்துக்கு மேலே தீயி எக்காளம் போட்டு வருது. இப்பொ நெனச்சாலும் புல்லரிக்கி. சிவகாசி ஜனங்களே அங்கெதான் கூடிக்கிடக்கு. பேர்பாதி தொலைவுக்கு வந்தபிறகும் பாத்தா ஊரே புகை மண்டலமா கிடக்கு. மொத்தம் ஆபீஸ் கேட்டுக்குள்ளே நொழைய முடியல. ஒரே பொண நாத்தம். எத்தனை செத்துச்சோ, கால் கை போனது எத்தனை. ஒண்ணுங் கணக்கு கிடையாது.

''அவ்வளவும் கரிக்கட்டையா வெளியே அடுக்கி வச்சிருக்காங்க. எங்கெ நின்னாலும் ஒரே அழுகைச் சத்தம் ஆணும் பொண்ணும் அய்யோ அம்மான்னு அவயக்காடு. கூப்பாடு. எம்பிள்ளையைக் காணமே. ஒம்பிள்ளையக் காணமேன்னு சுத்து வட்டாரம் பூராம் வந்து நிக்கி. தீயணைக்கிற வண்டி இத்தனைதான்னு கணக்கு வழக்கு இல்லே. டையான் டையான் டையான்னு முனியசாமி வேட்டைக்கி கிளம்புன மாதிரி வந்துக்கிட்டேயிருக்காங்க.

''வந்து என்ன செய்ய? அவங்க கிட்டெ தண்ணியில்லையாம். இங்க எங்கயாவது இருந்தாச் சொல்லுங் கன்னு வந்து நிக்காங்க. இருக்கு தீப்பெட்டி ஆபீஸுக்கு மத்தியில பெரிய்ய கிணறு இருக்கு. சுத்தி வேலி போட்ட மாதிரி தீ தகிக்கே! தீயை அணைச்சா அதுலே வேண்டிய தண்ணி எடுத்துக்கிடலாம். தண்ணி இருந்தா எரியிற தீயை அணைக்கலாம். நம்ம கிரகம் எப்படியிருக்குன்னு பாரு.

''பெரிய பெரிய ஆபீஸர்கள் வரவும் போகவுமா பத்து ஐநூறு காருகள் இருக்கும். அங்குட்டும் இங்குட்டும் ஜீப்பு மூஞ்சிக்கு மேலே சிவப்பு லைட்டு விய்யா விய்யான்னு சுத்திக்கிட்டு பறந்துக்கிட்டு திரியுது. இன்னும் மந்திரி வேற வர்றதா பேசிக்கிடுறாங்க. நானும் எட்ட முட்டும் பாத்தேன். நம்ம ஊரு பிள்ளைக ஒன்னு கூட எங் கண்ணுக்குத் தட்டல. கொண்டு போன வெள்ளரிப்பழத்தைக் கூட விக்காம தன்னால மனசு திகிலடிச்சுப் போயி கூடையை அங்கேயே போட்டுட்டு இந்நியார வரைக்கும் அங்கெதான் வேடிக்கை பாத்துக்கிட்டு நின்னேன். கண் கொண்டு சகிக்க முடியலை அந்தக் கொடுமையை.

''தீத்து மண்ணுல சுட்ட அய்யனார் சிலை மாதிரி மேத்தோலெல்லாம் உறிஞ்சி வெள்ளவெளேர்ன்னு மண்டைத் தொலியெல்லாம் பிஞ்சி கால் வளைஞ்சி கை வளைஞ்சி கண்ணு முழிக வெளியெ வந்து... ஹே... த்தூ... சே.... யப்பயப்பா இன்னும் ஒரு வாரத்துக்கு நான் கஞ்சி குடிக்க முடியாது.

○○○

''ஐயையோ! ஆண்டவனே எம் மூணு பிள்ளைகளும் என்னாச்சோ. நா யார்கிட்டேப் போயி சொல்லுவேன். இந்தப் பாதகத்திக்கி யாரிருக்கா...'' கண்ணிலிருந்து கண்ணீரும் வாயிலிருந்து வார்த்தைகளும் அனிச்சையா வந்து கொண்டிருந்தாலும் சேர்மத்தாயின் மனசு ஓரிடத்திலும் கால்கள் ஒரு திசை நோக்கியும் கைகள் தலையிலடித்துக் கொண்டும் ஒரே ஓட்டமாய்ப் போய்க் கொண்டிருந்தாள்.

இன்றைக்கு திங்கட்கிழமை கையில் அணா பைசா கிடையாது. அடுத்த சனிக்கிழமை பிள்ளைகள் சம்பளம் வாங்கி வர்ற வரைக்கும் இந்த வாரத்தை எப்படியாவது ஓட்டியாகணும்கிற வாரா வாரம் இருக்கிற பரிதாபநிலை. போன சனிக்கிழமை பிள்ளைகள் கொண்டு வந்த சம்பளம்; பலசரக்கு கடைக்கி, வார வட்டிக்கி, குடிதண்ணி வண்டிக்கி, தீபாவளிக்கு வாங்குன ஜவுளி பாக்கின்னு ஒரு மணிநேரத்துல துட்டு மாயமாப் போச்சி. தூக்கமில்லாம போயி உழைச்சிட்டு வர்ற பிள்ளைகளுக்கு வாங்கித் திங்க ஒரு எட்டணா தர முடியலே. அடுத்த பிள்ளைக மாம்பழம் தின்னா பாத்து எச்சி ஊறி நிக்கிதுக.

இதுல பஸ்ஸுக்குப் போக துட்டு ஏது? அக்கம் பக்கம் ஒரு கைமாத்து கால் மாத்துன்னு வாங்க முடியலே. அந்த மனுசனுக்குப் பயந்து யாரும் எந்த உதவியும் செய்ய மாட்டாங்க.

●●●

''அவகிட்டெ எவளாவது கொடுக்கல் வாங்கல்ன்னு வச்சுக்கிட்டும் பிறகு இந்த கோடாங்கி கருப்பையா யாருன்னு காட்டுறேன்.'' புருசன் வாசப்படி மிதிச்சு ஏழு வருசம் இருக்கும். கோடாங்கி கருப்பையான்னா அந்த சுத்துப்பட்டிக்கே தெரியும். பேய் விரட்டு, தகடு வெக்கிறது, தகடு எடுக்கிறது எதிரியை கால் கை மொடக்கிற சித்து வேலைகள். இதுலே கைதேர்ந்த தொல்லாளி. சேர்மத்தாயிக்கு இதெல்லாம் சுத்தமா பிடிக்கலை. பொய், ஏமாத்து, மிரட்டறது, இதுவும் ஒரு பிழைப்பா. கூட கையாளு ஒருத்தன் சூரங்குடி சன்னாசிப் பயலை வச்சுக்கிட்டு மொத நாளே தகடைக் கொண்டு போய் வெக்கச் சொல்லிட்டு மறுநாள் இவர் அருளாடிப் போய் எடுக்கிறது.

இதெல்லாம் அவளுக்குப் பிடிக்கலை. இப்படி தொழில் செய்த எந்தக் குடும்பமும் முன்னிலைக்கு வந்திருக்கா. நாமளும் நாலு பொம்பளைப் பிள்ளைகள் வச்சிருக்கோம். அதுகளுக்கும் நாளைக்கி நல்லது பொல்லதுகள் நடக்கணும். அப்புராணி சப்புராணிகளை ஏமாத்தி அந்தக் குடும்பங்கள் கெட்டுப் போயி அதுக வாயில விழுந்து அப்படிச் சம்பாதிக்கிற சம்பாத்யம் வத்திக்குமா?

இதிலெதான் ஆரம்பத்திலிருந்தே சண்டை. சரி உனக்கும் எனக்கும் எந்தத் தொந்தமும் இல்லேன்னு பேசி பொம்பளைப் புள்ளைக பொம்பளைக்கி என்று எழுதப்படாத கிராமச் சட்ட நியாயங்களின் அடிப்படையில் நாலு பிள்ளைகளோடு சேர்மத்தாயி ஒதுங்கிக் கொண்டாள்.

தற்சமயத்துக்கு அவனோட பூர்வீக வீடு இவர்கள் குடியிருக்கிறதுக் குன்னும், அஞ்சாறு வருசத்துல பிள்ளைக தலையெடுத்து ஒரு வீடு வாசல் போடுற வரைக்கும், பிறகு அருவம் படாம வீட்டை காலிபண்ணிரணும்னும் பேச்சு.

கருப்பையா ராசா மாதிரி இருந்தான். தொழிலுக்குப் போயிட்டு வர்ற இடங்கள்ல சகல சம்பத்துகளும்



படிப்பகம்

www.padippakam.com

கிடைச்சது. சதா வெள்ளை வேட்டியும் மஞ்சள் ஜிப்பாவும் தூசு படாமல் போட்டிருப்பான். பாகவதர் தலைமுடி. முறுக்கி விடப்பட்ட மீசை. ஜனவசியம் பண்ணுவதற்காக தூரத்தில் வரும் போதே மணக்கும் ஜவ்வாது. கையில் மந்திரக்கோல் மாதிரி வெள்ளிப்பூண் வைத்த பிரம்பு.

ஒரு நா கடையில நாலஞ்சு பேருக்கு போண்டா வாங்கிக் கொடுத்து இவனும் சாப்பிட்டுக்கிட்டே அவர் தொழில் பிரதாபங்களைச் சொல்லிக்கிட்டிருந்தான். அவன் வாயச்சவடாலில் கூட்டம் கூடிக் கேட்டுக்கிட்டிருந்தது. யாரோ சொல்லிக் கொடுத்தோ எப்படியோ அவனை போகும்போது வரும் பாது அந்தக் கடைசிப்பிள்ளை முத்து லட்சுமி ஏக்கமாய்ப் பார்ப்பாள். தினசரியும் ஊரை ஒரு சுத்துச் சுத்தி அவனை பாக்காம இருக்கமாட்டாள்.

அன்னக்கி கடையில வச்சி அவளுக்குக் கூப்பிடணும்னு ஆசையாயிருந்ததோ இல்லை அப்படிச் சொந்த நினைவூட்டல்ல ஒரு போண்டா கிடைக்கும்னு நெனச்சாளோ என்னமோ ஆவலா 'அய்யா' அப்படீன்னுட்டா, அவ்வளவுதான். வீட்டுக்கு முன்னாடி வந்து நின்னு சேர்மத்தாயை இந்த அளவுன்னு இல்லாம திட்டுனான்.

''நூல்லயே நான் நடக்கிறவ, உழைச்



www.padippakam.com

சுத்தான் பிள்ளை குட்டிகளை காப்பாத்துவேன்னே! இத்தன வருசத்துக்கப்புறம் 'அய்யான்னு கூப்பிடு' அப்படீன்னு அனுப்பிச்சு வெச்சிருக்கியே அது எவனுக்குப் பொறந்ததோ, அதென்ன கழுதெக எல்லாமே ஒரு தண்ணியில வெந்திருந்தா தெரியும். எல்லாம் முடிஞ்சு கடைசிக் கட்டமா உறவு கொண்டாட விட்டிருக்கா. உடம்புல ரத்தங் குறைஞ்ச பிறகு.''

சேர்மத்தாயி ஒண்ணுஞ் சொல்ல முடியலை. சாயந்தரம் வரைக்கும் பிள்ளைகளோட வெளியவே வர முடியாம கிடந்தா. அந்த மனுசனும் தன் தயவில்லாம பிள்ளை குட்டிகளோட பிழைக்காளே இவளை எப்படான்னு காத்திருந்தவன் பொழுது அடைகிற வரைக்கும் மானங்கெட்ட பேச்சு பேசி நிக்கிறான்.

சின்னவளை கண்ணு மண்ணு தெரியாம போட்டு அடிச்சா சேர்மத்தாயி. நாம தப்பு பண்ணப் போறோமோன்னு 'அய்யா'ன்னு கூப்பிடும் போதும் அந்த சின்ன மனசுல தோணுச்சு. இப்பொ அடிபடும்போது தப்பு பண்ணிப் போட்டோ முன்னும் தெரிஞ்சு போச்சு. போட்டு கைவலிக்க அடிச்சாலும் நாம அழுக நியாயமில்லேன்னு அந்தப் பிள்ளை தலையைக் கவுந்த மட்டுல அடி விழுந்த இடத்தை வலிதாங்க மாட்டாம தடவிக் கொடுத்துக்கிட்டே உதட்டைப் பிதுக்கிப் பிதுக்கி ஆத்தாமையை வெளியேத்த முடியாம கிடந்தாள்.

கருப்பையா இன்னும் ஒருபடி மேலே போய் உடனே வீட்டைவிட்டு வெளியேறணும்னு சொன்னான். இப்படி நேரத்துலதான் சிவகாசிக்கு பஸ்ஸுல தீப்பெட்டி போடப்போன பிள்ளைகளுக்கு இப்படி ஆகிப் போச்சு.

○○○

பன்னிரெண்டு மைல் கோனம்பட்டி ஊடு பாதை வழியா நடந்தே சிவகாசிக்கு வந்துட்டா சேர்மத்தாயி. கண்ணீர் பாதை நெடுக முத்து முத்தாய் உதுத்து வந்து சேந்தா. ''ஓடு ஓடு எல்லாம் ஆஸ்பத்திரியில போட்டு வச்சிருக்கு. இங்கெ நிக்காதே'' - போலீசுக்காரர்கள் விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

செத்துப்போன பத்து அம்பது பிள்ளைகளுக்கு மேலே மொத்தமா அடக்கம் பண்ணிட்டதாகவும் பக்கத்திலிருக்கிற இன்னொரு பெரிய பில்டிங்கிலே இறந்து போன காயமான பிள்ளைகளைப் பாக்கவந்த ஆளுகளுக்கு பேரு அடையாளம் கேட்டு தகவல் சொல்லிக் கிட்டும் இருக்கிறதா கேள்விப்பட்டு அங்க ஓடுனா.

அங்கே ஒரு கவுண்டரிலெ உள்ள ஒரு ஆள் வர்ற ஆளுங்க இறந்து போன, காயப்பட்ட பிள்ளைகளுக்கு என்ன உறவுன்னு கேட்டுப் பதிஞ்சு சாப்பாட்டுக்கு டோக்கன் கொடுத்துக் கிட்டு இருந்தார். கூட்டம் ஒண்ணோட ஒண்ணு முட்டி மோதி ஒரு ஆளுக்கு மேல ஒரு ஆளு குதிரை ஏறிக்கிட்டு, எனக்கு நாலு டோக்கன் இங்க ஏழு பேரு, பேரு சொல்லி பதிஞ்சாச்சி டோக்கன் தரலே, டோக்கன் பன்னென்டுக்கு ஒன்பதுதான் இருக்கு - இப்படி ஒரே தள்ளுமுள்ளா கிடந்தது. அதுலயும் இடிச்சுப் பறிச்சு சேர்மத்தாயி ஒரு



மணிநேரமா அல்லாடி கவுன்ட்டருக்கு முன்னாடி போயிட்டா.

''ஐயா நா இரவார்பட்டியிலிருந்து வர்றேன். எம்பொண்ணுக மொத்தம் நாலுபேரு. காளீஸ்வரி, ராஜேசுவரி, சித்ராதேவி, முத்துலட்சுமி...''

''எந்த ஊரு இரவார்பட்டியா... ம்... தாய் தகப்பன் பேரு?''

''கருப்பையா சேர்மத்தாயி''

''ஙா... சரி சரி.. அந்தப் பிள்ளைகளுக்கு ஒண்ணுமில்லமா, இங்கதான் எங்கயாவது இருக்கும். சொல்லி கையெழுத்துப் போட்டு கூட்டிக்கிட்டுப் போம்மா.'' இவள் விசாரணை முடிந்து கூட்டத்தை முண்டி வெளியே வரும் போது பிள்ளைகள் நான்கும் ''யம்மா... யம்மா....'' என்று ஓடிவந்தது. பிள்ளைகள் வாடி வதங்கிப் போயிருந்தார்கள். ''ஏ... ஆத்தா... ஒங்களுக்கு ஒண்ணுமில்லையில்லே தாயி! எந்தச் சாமி புண்ணியமோ... நான் செய்த தவமும் எஞ்சீதேவிகளுக்கு ஒண்ணும் ஆகலை.'' எல்லாரையும் சேத்துப் பிடிச்சு அழுதாள்.

''அம்மா நாங்க யாருமே காலையிலிருந்து சாப்பிடலை'' மூத்தவள் சொன்னாள். சேர்மத்தாயிக்குப் படபடன்னது. அடப்பாதரவே, காலையில மூணு மணிக்கு வந்த பிள்ளைக இன்னுஞ் சாப்பிடலையா? ஏந்தாயி?''

''காலையில எட்டு மணிக்கெல்லாம் தீப்பிடிச்சிரிச்சி. சுத்திச் சுத்தி இரும்பு மிஷின்களா இருக்கு. பிள்ளைக அதைத்தாண்டி விருட்டுன்னு வர முடியலை. அதுக்குள்ள புகை மண்டிருச்சி. யாருக்கும் கண்ணு தெரியலை. நாங்க அந்நேரம் சாப்புட வரணும்னு வெளியே வரைக்கும் வந்தமா. அப்படியே கண்ணைக் கசக்கிக்கிட்டே ஓடியாந்தோம். தூக்குச்சட்டிக வச்சிருந்த ரூம்லயும் தீப்பரவி புகை சுத்தீருச்சி. எடுக்க முடியலை. அப்படியே வெளியே ஓடியாந்துட்டோம்.''

''தூக்குச்சட்டி போனாப்போகுது. நீங்க உசிரு பொழச்சதே போதும். அப்படி ஏதாவது நடந்துட்டா 'பேசுற மனுசனுக்கு' ரொம்ப தொக்காப் போகும்.''

அவளுக்குத் தெரியும் கருப்பையா புத்தி. பிள்ளைக எவனுக்குப் பொறந்ததோம்பான். அவனை எதிர்பார்க்காம குடும்பம் நடக்குதேங்கிற கறுவல். இப்படி எதாச்சும் இழப்பு ஏற்பட்டுச்சுன்னா எம்பிள்ளைகளெ கொன்னு போட்டா அப்படீன்னு பஞ்சாயத்தெ கூட்டிருவான். ஊரு அவன் பில்லி சூன்யத்துக்குப் பயந்து அவன் பின்னாடிதான் நிக்கும். பிள்ளைகளை பந்தி நடக்கிற இடத்துக்கு கூட்டிக்கிட்டுப் போனாள்.

பிள்ளைகள் அவள் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தியது. ''அங்கெ போகவேண்டாம்மா அப்பவே போய் பேரு சொல்லி பசிக்குதுன்னு சொன்னோம். செத்த பிள்ளைங்க, ஆஸ்பத்திரியில காயமா கிடக்கிற பிள்ளைங்க இவங்க சொந்தக்காரங்களுக்கு மட்டுந்தான் டோக்கன் தருவாங்களாம்.''

சேர்மத்தாயிக்கு எரிச்சலும் கோபமும் வந்தது. விறுவிறுன்னு போயி அந்த கவுன்ட்டரில் இருக்கிற ஆளோடு சண்டை போட்டாள். ''ஏய்யா நாங்களும் வேலை செய்ய வந்தவங்கதானே வேணுமின்னா ஆபீஸ் பேரேட்டை எடுத்துப் பாருங்க. இருந்தா கொடுங்க இல்லைன்னா உள்ளபடி. நாங்க என்ன பொய்யா சொல்றோம். அப்படி ஏமாத்தி வாங்கிச் சாப்புட்டுட்டா எங்க பாடு தீந்து


படிப்பகம்

www.padippakam.com

போகுமா? கொண்டுவந்த சோத்துச் சட்டியைக் கூட எடுக்க விடாம தீ மண்டி ருச்சி சின்னப் பிள்ளைக என்ன செய்யும் காலையிலிருந்து குலை பட்டி னியாக் கிடக்கு கொஞ்சம் தயவு பண்ணுங்க.''

கவுன்ட்டரில் இருக்கிறவன் வரிசையில் நிக்கிற ஆளுகளுக்கு டோக்கன் கொடுத்துக்கிட்டே இப்படி ஆளுகளுக்குப் பதிலும் மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டிருந்தான். ''இந்தா பாரும்மா சும்மா சொல்லியாச்சு. இப்பொ ஒரு தொளாயிரம் பேருக்கு சொல்லி மண்டையை உடைச்சி ருக்கேன். என்ன கேட்டாலும் கிடைக் காது. வெட்டியா நிக்காதீங்க. பாதிக்கப் பட்ட ஆளுகளுக்குத்தான் கவனிக்கச் சொல்லி உத்திரவு. வேணும்னா கொஞ்சம் பொறுங்க. கடைசியில மிச்ச மிருந்தா பாப்பம். சும்மா சொன்ன தையே சொல்லி வாணாளை வாங்கப் படாது.''

குழந்தைகளோடு வெளியில் உட்கார்ந்து விட்டாள் சேர்மத்தாயி. பிள்ளைகளுக்கு பசியில் கண்கள் உள்ளே போய்விட்டது. கிறங்கி கிறங்கி இவள் மடியில் மாறி மாறிப் படுத் தார்கள். முத்துலட்சுமி அம்மாவை அடிக்கடி தொட்டு கையைப் பிடித்து இழுத்து சிரித்தாள். அவள் குறிப்பறிந்து தன் முந்தானையை விரித்துக் காட்டி ஆத்தாக்கிட்ட பத்துப் பைசா கிடையாது என்று உதறிக் காட்டியதும் போய் ஒரு ஓரமாய் உட்கார்ந்து ரோட்டின் வாகன போக்குவரத்து டீப்பட்டறைகள் திறந்த வெளி ஓட்டல் எல்லாவற்றையும் வேடிக்கை பார்க்க கூடிவிட்டாள். மூத்த வளும் நடுவிலவளும் சின்னவளுக்கு நேரா சுருண்டு படுத்தார்கள். ராத்திரி மணி பத்தாகி விட்டது.

சேர்மத்தாயி பழையபடியும் போய் ''அய்யா அஞ்சுபேருல எம்பேருக்கு வேணுன்னா டோக்கன் வேண்டாம். அந்த நாலுக்கும் டோக்கன் கொடுங் கய்யா சின்னஞ்சிறிசு பசி தாங்காது.''

''எல்லாம் முடிஞ்சது. வாங்கிப் போட்ட சரக்கு ஆக்குன சாப்பாடு சரிய்யா வந்திருக்கு கணக்கு. எந்தப் பிரச்சினையுமில்லாம முடிஞ்சது.'' ஏறிட்டுப் பார்க்காம அவர் வேலை திருப்தியாய் முடிந்த மும்முரத்தில் இருந்தார். உள்பக்கமாய்த் திரும்பி ''இதே சாப்பாடு டவுன்ல இருக்கிற ஆளுகன்னா ஆயிரத்து ஐநூறு பேரு சாப்பிட்டிருக்காது?'' என்று கிராமத்து ஜனங்கள் பெருந்தீனிக்காரர்கள் என்ற தன் அபிப்ராயத்தை உறுதி செய்து கொண்டார்.

சேர்மத்தாயிக்கு அந்த ஊரே தூக்கிட்டுப் போற மாதிரி கண்ணை இறுக்க மூடிக்கிட்டு ஒன்னு உசிரு போகும்படியா அழுகணும்போல இருந்தது. கால்ல உசிரு இல்லாம மெல்ல நடந்து வெளியே வந்தாள். அப்பவே ஊரு போய் வீடு சேந்திருக்க லாமோ இந்த சாமத்துல காலையி லிருந்து வயித்துல ஒண்ணும் இல்லாம ஊரு வரைக்கும் நடத்தி கூட்டிக்கிட்டுப் போகணுமே. அப்படி ஊடு காட்டுப் பாதை வழியா நடக்கச் சொல்லி ஊருக்குப் போயி?

அவளுக்கு கால்கள் மரத்துத் தெரிஞ்சது. ரோட்டின் ரெண்டு பக்கத் தையும் பார்த்தாள். சோடியம் விளக்கு வெளிச்சத்துல வெறிச்சோன்னு கிடந் தது. பிள்ளைகள் நாலும் ஒண்ணுக்குப் பின்னாடி ஒண்ணா ஒடுங்கிப் போய் நின்னாங்க. அவங்களுக்கு அம்மாவைப் பாக்க பயம்மாயிருந்தது.

*''எங்காவது தொலைங்கடி... இத்தனை தீயில எவளாவது செத்தீகளா. ஒருத்தி பொசுங்கியிருக்கக் கூடாதா. நாலுல ஒண்ணாச்சும் தீயில அகப்படக்கூடாதா. அந்த ஜமீனுக்கு வாரிசுயில்லை யின்னு நாலு முண்டைகளும் ஆளுக்கு முன்னாடி வெளியே வந்துட்டீகளே. எம்மூஞ்சியில முழிக்காதீங்க போங்கடி... போங்கடி... எங்கயாவது கிடங்குல, கிணத்துல விழுந்து சாகுங்கடி.''*

வீட்டுல துட்டு துக்காணி கிடை யாது. அய்யா வீட்டை காலி பண்ணச் சொல்லி வையுறார். அம்மாவுக்கு இன்னைக்கி அலைச்ச, எல்லாரும் காலையிலிருந்து சாப்பிடாம கிடக்கி றது, எதிர்பார்த்து ஏமாந்தது இவ்வ ளவும் அம்மாவோட மனசுக்குள்ள புயலா அடிக்கிறது ஏதோ வடிவத்துல பிள்ளைகளுக்கு அந்தப்பூ முகத்துக்கு உள்ளே தெரியுது. பிள்ளைகள் பயந்து பதுங்கின.

ஊரை ஒரு தடவை சுத்திப் பார்த்தாள். பத்ரகாளி விஸ்வரூபம் எடுத்து ஊரை காலுக்கடியில் வச்சு குனிந்து பாப்பாளாமே அப்படிப் பாக்கிறாள். எல்லாம் அமைதியான தூக்கத்திலிருந்தது. தன் பிள்ளைகளைப் பார்த்தாள். அந்த எட்டுக் கண்களும், தூக்கத்தை எங்கோ தொலைத்துவிட்டு தரையில் விழுந்த மீன்கள் மாதிரி துவண்டு துவண்டு முழித்தன.

''இந்த ஊரே தீப்பிடிச்சி எரிஞ்சி சாம்பலாயிருக்கக் கூடாதா? நா என்னத்தைச் செய்வேன். பகவானே! அடப்பாதகத்தகா!'' - ஒரு கிறுக்கச்சி மாதிரி அங்கிட்டும் இங்கிட்டும் ஓடினாள் சேர்மத்தாயி. பிள்ளைகளை ரெண்டு கை நீட்டிச் சபிச்சிட்டு சுத்தும் முத்தும் பார்த்தாள். சமையலுக்கு வாங்கிப் போட்ட வேலிக்கருவேல் விறகுக் கட்டைகள் குவிந்து கிடந்தன. பிள்ளைகளையும் அவற்றையும் மாறி மாறிப் பார்த்தாள். பிள்ளைகள் பயந்து அழத்துவங்கி பின்வாங்கி ஓடத்தலைப் பட்டதுகள்.

''ஏ நாசமாப் போக ஒருநேர பசி யாத்தாத பூமியில தீமட்டுமா பிடிக்கும். நீருண்ட களமா ஆகிப் போகும்'' ஓடிப்போய் ரெண்டு கையிலும் ரெண்டு விறகுக் கட்டைகளை எடுத்துக் கொண்டாள். ''எங்காவது தொலைங் கடி... இத்தனை தீயில எவளாவது செத்தீகளா. ஒருத்தி பொசுங்கியிருக்கக் கூடாதா. நாலுல ஒண்ணாச்சும் தீயில அகப்படக்கூடாதா. அந்த ஜமீனுக்கு வாரிசுயில்லையின்னு நாலு முண்டை களும் ஆளுக்கு முன்னாடி வெளியே வந்துட்டீகளே. எம்மூஞ்சியில முழிக்கா தீங்க போங்கடி... போங்கடி... எங்கயா வது கிடங்குல, கிணத்துல விழுந்து சாகுங்கடி.''

''அய்யோ... அம்மா... அடிக்கா தம்மா... அடிக்காதம்மா... அடிக்கா தம்மா'' அடி தாங்காத குழந்தைகள் திசைக்கு ஒன்றாய் ஓடின. விறகுக் கட்டையால் விரல்களில் பலமாய் விழுந்த அடிதாங்காமல் விரல்களையும் கைகளையும் உதறிக் கொண்டும் முதுகைத் தடவிக் கொண்டும் ரோட்டு வழியாகவும் சந்துக்குள் இருட்டிலும் நுழைந்து ஓடினார்கள்.

கைக்குச் சிக்கின சின்னவள் முத்து லட்சுமியை தன் ஆற்றாமை, வெறி தீரு மட்டும் அந்த இளந்தோல் உடம்பிலி ருந்து பிய்யப் பிய்ய பலங்கொண்ட மட்டும் அடிக்க அந்தச் சின்னக் கால்கள் முடிந்தளவு தப்பிக்க வேகமாக ஓடி ஓட முடியாமல் மாறி எதிர்த்து ஓடிவந்து அம்மாவின் கால்களை ஆவிப் பிடித் துக்கொண்டு அண்ணாக்கப் பார்த்து தலையை ஆட்டிக் கேவினாள். ''அம்மா அடிக்காதம்மா இன்னிமே தீப்பிடிச்சா உள்ள இருந்து வெளியே வரமாட் டம்மா... இன்னிம்மே வெளியே வரம் மாட்டம்மா...''

www.padippakam.com

# கல்வி மறுப்பும் காசு தானமும்

ஒருபுறம் மகிழ்ச்சி. மறுபுறம் வேதனை, அப்புறம் ஆத்திரம் ஒவ்வொரு ஆண்டும் வந்து போகின்றன. உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு இப்படிப்பட்ட உணர்வுகள்தாம் அடுத்தடுத்து வருகின்றன.

இந்த ஆண்டு மேல்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் நான்கு மதிப் பெண்கள் வித்தியாசத்தில் மாநில முதலிடத்தைத் தவறவிட்டு மூன்றாம் இடம் பெற்ற ராஜா என்ற மாணவர் அரசுப் பேருந்து நடத்துனரின் மகன். சிவகங்கை அருகேயுள்ள குக்கிராமமான முத்துப்பட்டி அவனது ஊர். மாடு வளர்ப்பு முதலிய குடும்ப வேலையோடு கடினமாகப் படித்து இந்நிலையை எட்டியுள்ளான் அந்தத் தொழிலாளியின் மகன்.

ஊனமுற்ற தந்தை - சலவைத் தொழிலாளியான தாய். தானும் பகுதி நேர சலவைத் தொழில் பார்ப்பவன். சென்னை - சேத்துப்பட்டு மாணவன் நந்தகுமார். வறுமை காரணமாக அவனது மூத்த சகோதரர்கள் பள்ளிப் படிப்பைப் பாதியில் கைவிட்டனர். சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் படித்து தத்துவப் பாடத்தில் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறியுள்ளான்.

கடையநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவன் சேகர். தந்தை ராஜு ஒரு விவசாயக் கூலி. தாய் கிருஷ்ணம்மாள் ஒரு பீடி சுற்றும் தொழிலாளி. வறுமையின் காரணமாக காலை, மாலை பினாயில், சோப்பு விற்று வருவாய் தேடிப் படித்து பட்டு வளர்ப்புப் பிரிவில் மாநிலத்திலேயே சிறப்பு மதிப்பெண் பெற்றான்.

மதுரை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவி சித்திரா புவியியலில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுள்ளார். இவரது தாயும் தந்தையும் சாதாரண காய்கறி வியாபாரிகள், அண்ணனோ, சுமை தூக்கும் தொழிலாளி. அதேபோல சோழவந்தான் அரசுப் பள்ளி மாணவன் அழகு ராஜ். தந்தையும் சகோதரரும் சுமைதூக்கும் தொழிலாளிகள். இவர் புவியியலில் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.

திண்டுக்கல் புனித வளனார் மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி காமாட்சி. சமூகவியல், அறிவியலில் மாநில முதலிடம் பெற்றுள்ளார். இவரது தந்தை தினக்கூலி கொத்தனார், தாய் சித்தாள் வேலை செய்பவர். இரண்டாம் இடம் பெற்றுள்ள குழந்தை தெரசாவின் தந்தை ஒரு தையற் தொழிலாளி.

நெய்வேலியைச் சேர்ந்த ஜெயவேலு. இவரது தந்தை சுவருக்கு சுண்ணாம்பு அடிக்கும் தினக்கூலி, தாய் வீட்டு வேலை செய்பவர். சிறப்பான மதிப்பெண்கள் பெற்று மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் வென்றுள்ள இவரைப் பள்ளி ஆசிரியர்களே உதவி செய்து படிக்க வைத்துள்ளனர்.

ஷமீர் அகமது. தாய் - தந்தையற்றவர். 12 ஆண்டுகளாக ஆதரவற்றோர் சிறுவர் இல்லத்தில் தங்கி வாணியம்பாடி இசுலாமியா மேல்நிலைப் பள்ளியில் படித்து அரபு மொழிச் சிறப்புப் பாடத்தில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுள்ளார்.

சென்னை - சாலிகிராமம் ஜெனரல் கரியப்பா மேல்நிலைப்பள்ளி மாணவ - மாணவிகள், தொழிற்கல்வியைச் சிறப்புப் பாடமாகக் கொண்டவர்கள், பல பாடங்களிலும் மாநிலத்தில் முதலிடம் பெற்றுள்ளார்கள். கணவனைப் பிரிந்து வீட்டு வேலை செய்யும் தாய், தினக்கூலியாக உள்ள தந்தை, மீன்பாடி வண்டி ஓட்டும் தந்தை, இப்படிப் பெற்றோர்கள் இருந்தும் சிறப்பாகத் தேறியுள்ளனர். தந்தை தினக்கூலி, போலியோவால் உடல் ஊனமுற்ற மாணவி - படிப்பில் சாதனை செய்துள்ளார்.

இவையெல்லாம் கேட்பதற்கு பெரும் மகிழ்வூட்டுகின்றன. குக்கிராமத்தில் பிறந்து கூலி விவசாயியின் பிள்ளைகள் சாதனை புரிகிறார்கள். ஏழை - எளியவர்கள், வறுமையில் வாடுகின்றனர். ஆனால் அறிவுக்குப் பஞ்சமில்லை. நகரின் குடிசையில் வாழும் தினக்கூலி தொழிலாளியின் பிள்ளைகள் கல்விச் செல்வத்தில் பிரகாசிக்கிறார்கள். படிக்கும்போது உழைப்பாளிகளாக - பகுதி நேரத் தொழில்கள் புரிந்து, வறுமையில் வாடும் இவர்களில் பலர், நகர்ப்புற நடுத்தரப் படிப்பாளிக் குடும்பத்து, நல்ல கல்விச் சூழலில் சிறப்புப் பயிற்சி பெறும் பிள்ளைகளோடு போட்டி போட்டு முன்னிலை பெற்றிருக்கிறார்கள்.


ஆனால், இவர்களது எதிர்காலம். எண்ணிப் பார்ப்பதற்கு வேதனையும் கலக்கமுமே எழுகிறது. உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் சாதனை புரிந்த உழைக்கும் மக்களின் பிள்ளைகள் மேல்நிலைப் பள்ளிப் படிப்பைத் தொடர முடியவில்லை. மேல்நிலைப் பள்ளியில் தேறியவர்கள் கல்லூரியை எட்ட முடியவில்லை. தொழிற்கல்வியை அவர்களால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. சாதனை புரிந்த இவர்கள் தொழிற்கல்விக்கு நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பம் வாங்குவதற்குக் கூட வசதி கிடையாது. இன்னும் பலருக்கு நுழைவுத் தேர்வு மையங்களுக்கு போவதற்கான கைச் செலவுக்குக் கூட காசு கிடையாது.

மேல்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் சாதனை படைத்தவர் பெரும்பாலும் பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற்கல்விக் கல்லூரிகளுக்கான சேர்க்கைத் தரப்பட்டியலில் முதல் வரிசையில் இடம் பெறவில்லை. பெரும்பாலும் மெட்ரிக்குலேசன், ஆங்கிலவழிக் கல்வி, சிறப்புப் பயிற்சி போன்ற வசதிகள் காரணமாக நகர்ப்புற மேட்டுக்குடியினரின் பிள்ளைகளே இடம் பிடிக்கின்றனர்.

சென்னை - பொறியியலாளரின் மகன் பாலாஜி, மாநிலத்திலேயே ''தரமான'' பள்ளிகளில் ஒன்றான ''டி.ஏ.வி. மெட்ரிக்குலேசன்'' பள்ளியில் படித்து மருத்துவப் படிப்புச் சேர்க்கைக்கான தரவரிசையில் முதலிடம் பெற்றவன். இங்கே மருத்துவக் கல்லூரியில் தேறி, அமெரிக்காவின் ஜான்ஸ்ஹாவ்கின்ஸ் பல்கலைக் கழகத்தில் நரம்பியல் மருத்துவம் படித்து, அமெரிக்க விண்வெளி நிறுவனம் ''நாசா''வில் பணிபுரிய ஆசைப்படுகிறான். வறுமையிலும் பிரகாசிக்கும் ஏழை எளியவர்களின் பிள்ளைகளுக்கு எதிர்காலம் குறித்துப் போராசை கிடையாது. ஆசிரியர்கள் போன்ற சேவைப் பணிகளுக்குப் படிப்பதற்கே ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் அதற்கும் வழியின்றித் தவிக்கின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com



**சிவகங்கை ராஜாவுக்கு 'இலவச விளம்பரம்' அளிக்கும் தினமணி சுயநிதிக் கல்லூரிக் கொள்ளையர்களுக்கும் சிறப்பு மலர் வெளியிடுகிறது.**

இந்த நிலை, நேர்மையாகவும், நியாயமாகவும் சிந்திப்பவர்களுக்கு ஆத்திரத்தைத்தான் கிளறிவிடும். உயர் கல்வியை தனியாருடைய வியாபாரப் பொருளாக்கி, உயர்கல்வி நிறுவனங்களைப் பகற்கொள்ளைக் காடுகளாக்கி, ஏழை எளிய மக்களின் எட்டாப் பொருளாக்கியுள்ளவர்களுக்கு எதிரான ஆத்திரமாகத்தான் வெடிக்க வேண்டும். அதற்கு மாறாக, அனுதாபமும், இரக்க உணர்வும் கொண்டு தர்ம சிந்தனை மேலோங்கி, பரோபகாரம் செய்ய எண்ணுவது குற்றமாகும்.

குறிப்பாக, தினமணி போன்ற பத்திரிக்கைகள் இதையே ஒரு இயக்கமாக நடத்துகின்றன.

தூத்துக்குடி மாவட்டம் கண்டங்கோட்டை உயர்நிலைப்பள்ளி மாணவி ரீத்தா. பத்தாம் வகுப்பில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்றுத் தேறியுள்ளார். கூலி வேலை செய்து மகளைப் படிக்க வைக்கும் விதவைத் தாய், படிப்பைத் தொடரமுடியாத மாணவி. உதவிக்கு எதிர்பார்த்து நிற்கிறார் என்கிறது தினமணி. இதேபோல, சென்னை கரியப்பா மேல்நிலைப்பள்ளியில் சாதனை படைத்த மாணவ - மாணவியருக்கு கல்வியைத் தொடர உதவி கோருகிறது. நெய்வேலியில், ஆசிரியர்களின் உதவியால் மேல்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்த மாணவரின் கல்லூரிப் படிப்புக்கு உதவுவது யார் எனக் கேட்டுள்ளது?

இப்படித் தொடரும் கோரிக்கைகள் புற்றுநோய், இதய அறுவைச் சிகிச்சை தேவைப்படும் ஏழை - எளிய நோயாளிகளுக்கு உதவி வேண்டி வரும் கோரிக்கைகள் போல அடிக்கடி வருகின்றன. அதையேற்று, சில அறக் கட்டளைகள், ரோட்டரி அரிமா சங்கங்கள், வாரிசில்லாத பணக்காரர்கள், ஓய்வுபெற்ற அரசு அதிகாரிகள், ஒரு சில தொழில் நிறுவனங்கள் முன்வந்து கல்வியைத் தொடர வசதியற்ற வறுமையில் வாடும் மாணவ-மாணவியருக்கு உதவியும் செய்கின்றனர். சினிமா நடிகர்கள் தனது பிறந்த நாளன்று ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குவதோடு ஏழை மாணவர்களுக்கு துணிமணி, பாடப்புத்தகங்கள் என்று உதவி செய்கின்றனர். சிலர் அறக் கட்டளைகள் வைத்து சாதனை மாணவர்களுக்குப் பரிசுகளும் கொடுக்கின்றனர்.

விழுப்புரத்தைச் சேர்ந்த பெற்றோர் ஆதரவற்ற ஏழை மாணவி பாக்கியலட்சுமி. கடந்த ஆண்டே தரவரிசையில் முன்னிலை பெற்றும் வசதியின்றி மருத்துவப் படிப்புக்குச் சேரவில்லை. தினமணியின் இந்த செய்தி அறிந்து தொழுதூரில் உள்ள நாவலர் நெடுஞ்செழியன் பொறியியல் கல்லூரித் தலைவர் கிருஷ்ணசாமி, தனது ஆறுமுக முதலியார் சொர்ணம் கல்வி அறக்கட்டளையின் சார்பாக பாக்கியலட்சுமிக்கு மருத்துவம் படிக்க உதவியளிக்க முன்வந்துள்ளனர். முதல் தவணையாக மருத்துவக் ''கவுன்சிலிங்கிற்காக''ப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்துள்ளார்.

ஆற்காடு, காவனூர் அருகேயுள்ள வண்டிக்கல் கிராமத்து விவசாயக் கூலித் தொழிலாளியின் மகன் ஆனந்தன். உள்ளூர் ஆசிரியரின் உதவியோடு மூன்றாண்டு தனியார் 'பாலிடெக்னிக்கில்' படித்து முதலிடத்தில் தேர்வு பெற்றார். பின்னர் சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிக்கிறார். முதலாண்டு ரூ. 15,000 இரண்டாமாண்டு ரூ. 32,000 கட்டணம் செலுத்திப் படித்தார். இதற்குச் சில புரவலர்கள் உதவினர். இப்போது, மூன்றாமாண்டு ரூ.46,000 கட்டணம் செலுத்த, மீண்டும் புரவலர்களின் ஆதரவை நாடியுள்ளார்.

உயர்கல்விக் கட்டணச் செலவு எப்படி உயர்ந்து கொண்டே போகிறது என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகள். இதோடு நெஞ்சைப் பிளக்கும் இன்னொரு செய்தி. திருவள்ளூர் - செவ்வாய்ப்பேட்டை அருகே உள்ளது பெருமாள்பட்டு கிராமம். அங்குள்ள பொறியியல் கல்லூரி மாணவர் ரமேஷ். இவர் தனது மூன்றாமாண்டு கல்விக் கட்டணம் செலுத்த முடியாது மனமுடைந்து தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இதுதான் நிலைமை. பள்ளி, கலைக் கல்லூரிப் படிப்பே கூட ஏழை, எளிய குடும்பத்துப் பிள்ளைகள் தொடர முடியாமல் உள்ளனர். பொறியியல், மருத்துவப்படிப்போ நினைத்துப் பார்க்கவும் முடியாத தூரத்தில் உயரத்தில் உள்ளது. எல்லாம் தனியார்மயம், பகற்கொள்ளை என்றாகி வருகிறது. அதே சமயம் விவசாயிகளும் தொழிலாளர்களும் அதிகரித்த அளவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளப்படுகிறார்கள். அதாவது அன்றாடம் சோற்றுக்கே அல்லாடுகிறபோது, உயர் கல்வி குறித்துக் கனவுக் காண்பதும் அரிதாகிவிட்டது.

இந்தப் புரவலர்கள் எனப்படும் தரும சிந்தனையாளர்கள் எல்லோரும் படித்தவர்கள்தானே! இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று அறிந்தவர்கள்தானே! இருந்தும், கல்விச் சீரமைப்பு, தாராளமயம் என்கிற பெயரில் தனியார் கல்விக் கொள்ளைக்கு அகலக் கதவு திறந்து விடுவதை இவர்கள் ஆதரிக்கிறார்கள். அனைத்து ஏழை - எளிய மக்களின் கல்வி உரிமையைத் தட்டிப் பறித்துவிட்டு, ஒரு சில சாதனையாளர்களுக்குப் பரோபகாரம் செய்கிறார்கள்.

அரசின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும் ரத்து செய்துவிட்டு, இலவசத் திருமணம், அன்னதானம், கஞ்சித் தொட்டி என்று மக்களைப் பிச்சைக்காரர்களாக மாற்றுகிறது இந்த அரசு. இதையே வேறுவிதமாகச் செய்கிறார்கள் கல்விப் புரவலர்கள். கல்வி உரிமையை மேலும் பரவலாக்கி, ஏழை மக்களுக்கு எளிதில் அடையக்கூடிய தாக்குவதன் மூலம் எத்தனை எத்தனை சாதனையாளர்களைக் காண முடியும். ஆனால், தர்ம சிந்தனையாளர்களோ, கையேந்துபவர்களாக மக்கள் இருந்தால்தான் தாம் வள்ளல்களாக விளங்க முடியும் என்றே சிந்திக்கிறார்கள்.

● **சாத்தன்**



படிப்பகம்

www.padippakam.com

# மராட்டியம்: மராத்தா சாதி வெறியர்களால் உயிருடன் எரிக்கப்பட்ட தலித் இளைஞர்

"சனநாயக உரிமைகள் பாது காப்புக் கமிட்டி, மும்பை'' சார்பில் ஆனந்த் தெல்தும்ப்டே உள்ளிட்ட நால்வர் குழுவின் உண்மையறியும் குழு அறிக்கை ஒன்று வெளியாகியுள் ளது; மகாராட்டிரம் மரத்வாடா மாவட் டத்தில் தலித்துக்கள் மீது கடந்த 6 மாத மாக நடத்தப்படும் வன்முறை பற்றியும் ஆதிக்கச் சாதியான மராத்தாக்களின் உலைக் களனாக மராத்வாடா மாற்றப் பட்டு வருவது பற்றியும் அந்த அறிக்கை ஆய்வு செய்துள்ளது.

அண்மையில் நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்களுக்குப் பலியா னவர்கள் பெரும்பாலும் தலித் மாதங் குகள். மராத்வாடா முழுவதும் வளர்ந்து வரும் மாதங்குகளின் அமைப்புக்கள் ஒருவிதத்தில் இதனை விளக்கி விடுகின் றன. அந்த வட்டாரத்தில் உள்ள ஆதிக்கச் சாதியான மராத்தர்கள் அடக்கி ஒடுக்குவதில் முன் நிற்கி றார்கள். மாதங்குகள் தமிழகத்தில் உள்ள தலித் அருந்ததியர் பிரிவைப் போன்றவர்கள்.

மராத்வாடாவில் பூட்டேகாமில் எரித்துக் கொல்லப்பட்ட மாதங்கான திலீபும், சொன்ன கோட்டாவில் கற்க ளாலும் கோடாரியாலும் அடித்து வெட்டிக் கொல்லப்பட்ட தலித் தாதாராவ் டோங்ரேவும் இரண்டு மாதிரிச் சம்பவங்களின் குறியீடுகள்.

ooo

பூட்டேகாம் கிராமத்தில் ஆதிக்கச் சாதி மராத்தாக்கள் 75 சதம். நிலம் அவர் களுக்கே சொந்தம். தலித்துக்கள் நில மற்ற கூலிகள். தலித் உட்பட இளை ஞர்கள் 7 வகுப்பு வரை நிச்சயம் படித் திருக்கிறார்கள். மராத்தாக்கள் மட்டுமே பட்டப்படிப்பு படித்தவர்கள். சாதி வெறி, பணவெறி இரண்டும் சேர்ந்தி ருக்க கள் குடித்த குரங்கு போல மராத் தாக்கள் கொட்டம் அடிக்கிறார்கள். அவர்களின் வீடுகளில் படிதாண்டி தலித் உள்ளே போகக்கூடாது; கோயில் களிலும் நுழையக் கூடாது.

நிலவுடைமைச் சாதிச் சுரண்ட லுக்கும் அடக்குமுறைக்கும் வறட் சிக்கும் பூட்டேகாம் பேர் பெற்ற இடம். அதனால் சில குடும்பங்கள் மும்பைச் சேரிகளுக்குச் சென்று விட்டன. அப்படி ஒரு குடும்பம் தலித் மாதங்கு ஷெண்ட்கே குடும்பம். ரமேஷ், திலீப் இரு மகன்கள்; லதா ஒரே பெண். நகர மயம் அவர்களுக்குச் செல்வங்களை வாரி வழங்கிடவில்லை. ஜனநாயக உணர்வு கொஞ்சம் கொஞ்சமாக அவர் களுக்குச் சுயமரியாதை ஊட்டியது. அங்கே சமுக ரீதியாகச் சமமாகப் பழகு வதற்கு முதன்முதலாக உரிமை ஏற்பட்டது.

திலீபுக்குத் திருமணம் நிச்சயித் தார்கள். மகிழ்ச்சி இரட்டிப்பானது. ஆனால் அந்த மகிழ்ச்சியெல்லாம் ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு சோத னையால் பறித்துக் கீழே தள்ளப்பட்டது. மும்பை கந்திவிலியில் அவர்களின் குடிசை நகராட்சியால் இடித்துத் தள்ளி 'அப்புறப்படுத்தப்பட்டது'. வேறுவழி யில்லாமல் ஷெண்ட்கே குடும்பம் கிராமம் திரும்பியது.

மே 14 - பூட்டேகாமில் மராத்தா சாதி பூட்டேக்கர் குடும்பத்தில் ஒரு பெண்ணுக்குத் திருமணம். அவர் களுக்குப் போக மீத நேரந்தான் தலித்து களுக்கு தண்ணீர். குழாயடியிலும் அவர் களின் ஆதிக்கம்தான்.

அதேநாளில் குழாயடிக்கு நீர் எடுக்கச் சென்றாள் திலீபன் தங்கை லதா. பூட்டேக்கர் குடும்ப இளைஞர்கள் அவளைத் தடுத்தார்கள். சாதிப் பெயர் சொல்லி வசைகள் வீசினார்கள். (கந்திவிலியில் இப்படிப் பிரச்சினை கிடையாது.) லதா எதிர்த்துக் கேட்டாள்; அதனால் அங்கேயே அவள் தாக்கப் பட்டாள்.

வெறுங்குடத்துடன் வீடு திரும்பிய லதா திலீபிடம் முறையிட்டாள். திலீப் சென்று நியாயம் கேட்டான். திலீப், லதா இருவரையும் மராத்தாக்கள் தாக்கினர். லதா வயிற்றில் அடிக்கப்பட்டு மயக்கம் அடைந்தாள். கோபமுற்ற திலீப் மராத் தாக்களை கைபலம் கொண்டமட்டில் நன்றாக விளாசினான். கேவலம், ஒரு மாதங் தாக்கிவிட்டான். அது மராத்தாக்களுக்கு 'மோசமான' செய்தி. திருமணம் முடிந்து மகள் வண்டியில் அனுப்பப்படும்வரை காத்திருந்த மராத்தா முண்டாசுக்கும்பல் வெறி யோடு பதில் தாக்குதலுக்குக் கிளம்பியது.

விருந்துக்கு வந்த இடத்தில் 'சாதி கவுரவத்'துக்காகச் சண்டை வந்ததும் வெறி தலைக்கேறி கும்பலாக 20 பேர் கிளம்பி திலீப் வீட்டுக்குப் போனது. நாலுபேர் கூரை ஏற மற்றவர்கள் வீடு புகுந்து திலீபை இழுத்து வர, கொஞ்சம் பேர் திலீப் அண்ணன் ரமேஷ், அவன் தந்தை, தாய், உறவினரை மடக்கிப் பிடித்துக் கொள்ள, கட்டையாலேயே திலீபை அடித்தார்கள். ஜால்னாவில் பேராசிரியராகப் பணிபுரியும், ரமேஷ் பூட்டேக்கர் என்ற வெறிமிருகம் திட்ட மிட்டபடி மண்ணெண்ணெயை திலீப் மேல் ஊற்றிக் கொளுத்தியது. தடுக்கப் போன தாய், தந்தைக்குத் தீக்காயம்.

97 சதம் தீக்காயம் பட்டு வெந்துபோய் அரற்றித் துடித்த திலீப் என்ற அந்த மணமகன் ஐந்து நாட்கள் கழித்து இறந்து போனான். உடலில் மிச்சமிருந்த உயிரையே வடித்து வாக்கு மூலமாக்கி எதிரிகளின் பெயர் சொல்லிக் கதறிய திலீபின் குரல் வெளி யிலிருப்பவருக்கெல்லாம் கேட்டது. உள்ளே வாக்குமூலம் எழுதிக் கொண்ட போலீசுக்கு மட்டும் அது கேட்க வில்லை. திலீபின் குடும்பத்திலிருந்து அந்த வாக்குமூலம் கேட்டு வாங்கியவர் களுக்கு அதிர்ச்சி. யார் பெயரையும் போலீசு அதில் எழுதவில்லை; குடும் பத்தார் போலீசிடம் சண்டை போட்ட பிறகு 3 தவணைகளாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் கைது செய்யப்பட் டார்கள். கடைசியாக 13-வது ஆளாகக் கைது செய்யப்பட்டான் கொடூரன் ரமேஷ் பூட்டேக்கர். அந்தக் கைது கூட 9 நாள் கழித்தே நடந்தது.

தலித் கட்சிகள் நினைவுச் சின்னம் எழுப்பின. ஆனால் மராத்தா மகா சங்கமோ நடந்த சம்பவத்தையே பொய் என்று பச்சையாக மறைத்தது; தீண்டாமை வன்கொடுமை அச்சட்டத் தையே நீக்க வேண்டுமென்று பிரச் சாரத்தைத் தொடங்கியது. பூட்டேகாம் தலித்துக்களின் ஆதரவு பெற்ற சிவசேனா எட்டிக் கூடப் பார்க்க வில்லை.

ooo

சொன்ன கோட்டா கிராமம் பூட்டேகாவை விட அளவில் பெரியது. பெரும்பான்மை மராத்தாக்கள். நிலம், கடை, மாவுமில் எல்லாம் அவர்களு டையதே. தலித்துக்கள் நிலமற்ற கூலிகள்.

பூட்டேகாம் போலவே இந்தக் கிரா மத்திலும் தீண்டாமை அச்சு அசலாக ஆட்சி செய்கிறது. மறுபுறம் தண்ணீர்ப் பஞ்சம். டாங்கர் லாரியில் தண்ணீர் வரும். இந்தக் கிராமத்தில் மகர் பிரிவைச் சேர்ந்த தாதாராவ் டோங்ரே குடும்பம் சுயேச்சையாக உழைத்துச் சேர்த்த சொத்து உள்ள குடும்பம். எனவே மராத்தாக்களின் பொறா மைக்கு ஆளானது.


படிப்பகம்

www.padippakam.com

சம்பவ நாளன்று காலை தாதாராவ் டோங்ரேயின் மகள் சீமா நீர்பிடிக்க வரிசையில் நின்றபோது தடுக்கப் பட்டாள். சீமா அங்கிருந்தால் தாங்கள் எடுக்கும் நீர் தீட்டுப்பட்டு விடும் என்று மராத்தா விடலைகள் விளக்கம் கொடுத்தனர். அன்று மாலையே அருண்டோங்ரே (மகர்) என்பவரின் மனைவி சஞ்சீவனி தாக்கப்பட்டாள். (பிற்பகலில் மாவட்ட சிவசேனா தலைவன் சுனில் தண்டே மராத் தாக்கள் மத்தியில் ஆலோசனை நடத் திவிட்டுச் சென்றதாகவும், அதற்குப் பிறகே தாக்குதல்கள் நடந்தன என்றும் டோங்ரே பெண்கள் உண்மை அறியும் குழுவிடம் புகார் சொன்னார்கள்.)

அன்றிரவு தாதாராவ் டோங்ரேயின் வீடு 200 மராத்தாக் களால் முற்றுகையிடப்பட்டது.

வந்த கும்பல் தன்னைக் குறி வைத்து விட்டதை ஊகித்த தாதாராவ் இருட்டைப் பயன்படுத்திக் கொண்டு வெளியேறித் தப்பி ஓடினார். வயல்கள் வழியே ஓடியபோது ஒரு சில மராத் தாக்கள் ஓடிவந்து கட்டைகளால் அடித்து, கற்களால் தாக்கி, கால்கள் பிய்ந்து போகும்படி கோடாரியால் வெட்டி, உடம்பெங்கும் கொத்தி எறிந்தார்கள்.

மராத்தா கும்பல் தாக்கியது என்பது விசேசமான செய்தியே அல்ல; அவர் களுடன் ஜீப்பில் துரத்திவந்து கொலை செய்ய உதவியது 4 டோங்ரே குடும்பங் கள்தான். 'சவர்ணத்தாரைச் சார்ந்து தானே தலித் பிழைக்க வேண்டும்?' என்று சொல்லியே தங்கள் தன்மா னத்தை விலைபேசி சொந்தச் சகோதரர் களையே கொன்றது அவர்கள்தான். தலித் ரெண்டுபட்டால் மராத்தாவுக்குக் கொண்டாட்டம். கொலை செய்து விட்டு, இருட்டில் யாரோ தலித் பையன் களே ஆள் தெரியாமல் தாதாராவைக் கொன்று விட்டார்கள் என்று பொய் களையும் பரப்பியது மராத்தாக் கும்பல்.

கொலைக்குப் பிறகு உள்ளூரில் டோங்ரேக்கள் மீது சமூகப்புறக் கணிப்பை ஏவிவிட்டது ஆதிக்கச் சாதி வெறிக்கூட்டம். டோங்ரேக்கள் வட வாணி நகரில் தங்கலாம் என்றும், தாதாராவ் குடும்பத்துக்கு 5 லட்சம் நட்ட ஈடு என்றும் அரசு அறிவித்தது; மறுபுறம், வடவாணியில் இச்''சலுகை'' களுக்கு எதிராக 12,000 பேர் கொண்ட அனைத்துக் கட்சிப் பேரணி நடத்தவும் அனுமதி கொடுத்தது - தலைமை சிவசேனா; பின்னணி: சரத்பவாரின் தேசிய காங்கிரசும், பா.ஜ.க.வும்.

○○○



நினைவுச் சின்னமாய் - எரிக்கப்பட்ட திலீப். மேல்சாதிவெறிக்கு சமாதி எப்போது?

முடிவில்லாமல் தொடரும் தலித் மக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் படு கொலைகளின் கணக்கில் இவையும் சேர்கின்றன. தலித் இளைஞனைக் கொளுத்திய மராத்தா சாதிவெறியன் ஒரு பேராசிரியர் என்பது பலருக்கு அதிர்ச்சி தரக் கூடும். நகர வாழ்க்கை தலித் பெண்ணான லதாவிடமும், திலீப் பிடமும் ஜனநாயக உணர்வைத் தோற்று வித்திருக்கிறது. அதே நகர வாழ்க்கை பேராசிரியர் மீது ஏற்படுத்திய தாக்க மென்ன? சாதி ஆதிக்கத்தை 'இயல் பாக' அமல்படுத்த முடியாததனால் ஏற்படும் புழுக்கத்தைத்தான் நகரம் அந்த பேராசிரியருக்குத் தந்திருக்கிறது. தன்னுடைய 'சொந்த' இடத்திற்கு வந்த வுடனே அது தீப்பற்றிக் கொண்டு விட்டது.

சாதி அரசியலின் இயக்கமும் இத்த கையதொரு முரண்பட்ட சூழல் குறித்த சித்திரத்தையே நமக்குத் தருகிறது. தலித் வாக்குவங்கியின் பலத்தில் முதல்வர் பதவியைக் கைப்பற்றியி ருக்கும் ஷிண்டே போன்ற பிழைப்பு வாதிகள் இத்தகைய படுகொலைகள் நடந்தவுடன் நிவாரணம், நினைவுச் சின்னம் மற்றும் ராஜினாமா நாடகங் களை அரங்கேற்றுகிறார்கள். பிறகு சங்கராச்சாரி காலில் விழுகிறார்கள். ஜனநாயக வேட்கையால் உந்தப்படும் லதா, திலீப் போன்ற தலித் இளைஞர் களோ சமத்துவத்திற்காகப் போராடு கிறார்கள்; தோற்கிறார்கள். தங்கள் தலைவர்களால் கைவிடப்பட்ட பின்னரும் அவர்களைத் தள்ளவும் முடி யாமல் கொள்ளவும் முடியாமல் தவிக் கிறார்கள்; குழம்புகிறார்கள்.

ஆதிக்க சாதிவெறித் தலைவர்களும் இன்னொரு விதத்தில் இரட்டை வேடம் போடத்தான் செய்கிறார்கள். இத்த கைய படுகொலைகள் நடக்கும்போது ஒற்றுமையை வலியுறுத்தி அறிக்கை விடுகிறார்கள்; ஆதிக்கச் சாதியை வெளிப்படையாக ஆதரித்துப் பேசு வதைத் தவிர்க்கிறார்கள். என்றும் தலித் இளைஞர்களுக்கு தங்கள் பிழைப்புவாதத் தலைவர்கள் குறித்து ஏற்படும் குழப்பமும் தடுமாற்றமும், உள்ளூர் சாதிவெறியர்களுக்கு ஏற்படு வதில்லை. இவை தேர்தல் அரசி யலின் நிர்ப்பந்தங்கள் காரணமாக தமது தலைவர்களால் நடத்தப்படும் நாடகம் என்பதைச் சொல்லாமலே புரிந்து கொள்கிறார்கள். கீழே எல்லா வகையான சாதி ஆதிக்க நடவடிக்கை களும் இயல்பாகத் தொடர்கின்றன.

ஆதிக்கச் சாதி அரசியலின் இந்த இரட்டை வேடம் தேர்தல் அரசியலி லிருந்து பிறந்ததல்ல. 2000 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த பார்ப்பன இந்துச் சிந்தனை முறையில் மரபணுவிலேயே இந்த இரட்டை வேடம் சங்கேதக் குறியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இரட்டை வேடம் சாதி ஆதிக் கத்தை உத்தரவாதம் செய்வது நிரூபிக் கப்பட்டுள்ள காரணத்தினால்தான் அது கீழிருந்து அங்கீகரிக்கப்படுகிறது.

ஆனால் தலித் மக்கள் இந்தச் 'சலு கையை' தங்கள் தலைவர்களுக்கு வழங்க முடியாது. தலித் தலைவர்களின் இரட்டை வேடம் அம்மக்களின் அடிமைத் தனத்தை உறுதி செய்துள் ளதே அன்றி ஒழித்ததில்லை. மகாராட்டி ரத்தில் தலித் மக்கள் என்றால் சிவசேனா எதிர்ப்பாளர்கள் என்றிருந்த நிலை மாறி தற்போது தலித் மக்களில் ஒரு பிரிவினரை நேரடியாகவே தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முயல்கி றது சிவசேனா. ''சிவ சக்தி + பீம் சக்தி = தேச பக்தி'' என்பது தலித் மக்களைத் தனது இந்துவெறிக் காலாட்படையாக மாற்றுவதற்கு சிவசேனா உருவாக்கி யுள்ள புது முழக்கம்.

சாதி ஆதிக்கத்தை மறுத்துச் சமத் துவம் கோரும் தலித் இளைஞர்களுக்கு முசுலீம்களை 'ஆதிக்கம்' செய்யும் உரிமை வழங்குவதாக ஆசை காட்டு கிறது சிவசேனா. குஜராத்தைப் போல இந்துத்துவத்தின் சதிவலையில் மராட் டிய தலித் இளைஞர்கள் சிக்கமாட் டார்கள் என நம்புவோம்! திலீப்பின் மரணம் நிச்சயம் இந்த உண்மையைப் புரிய வைக்கும்.

● குப்பண்ணன்

www.padippakam.com





# பாரதி அவலம்

மருதையன்

**பா**ரதி ஆதரவாளர்களுடைய கருத்துப்படி இந்து மீட்புவாதம் என்பது **'அந்தக் காலகட்டத்துக்குரிய சமூகப் பார்வை.'** ஆனால் நேரெதிரான சமூகப் பார்வை கொண்ட முன்னோடிகளும் சமூக, பண்பாட்டு இயக்கங்களும் பாரதிக்கு சற்றே முன்னரும், பாரதி வாழ்ந்த காலத்திலுமே இருந்தனர் என்பது வரலாற்று உண்மை.

பாரதியின் அபிமான தலைவரான திலகரின் மராட்டியத்திலும், திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும்தான் இந்த பார்ப்பன எதிர்ப்பு, சாதி ஒழிப்பு சீர்திருத்த இயக்கங்கள் வலிமையாகத் தோன்றி வளர்ந்தன.

பேஷ்வா ஆட்சியின் விளைவாகப் பார்ப்பனக் கொடுங்கோன்மை தலைவிரித்தாடிய மராட்டியத்தில் தோன்றிய மகாத்மா **ஜோதிராவ் பூலே** (1827-1890). பார்ப்பன ஆதிக்கம், அவர்களது சாத்திரங்கள், புராணங்கள் அனைத்தையும் கேள்விக்குள்ளாக்கினார். சாதி ஒழிப்பை முன்வைத்துப் போராடினார். பெண் கல்வி, உழைக்கும் வர்க்கத்தின் நலன் என்று அவரது பார்வை விரிந்து சென்றது.

19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியும், 20-ஆம் நூற்றாண்டின் துவக்கமுமான அதே கால கட்டத்தில்தான் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் சாணார் பிரிவு மக்களின் தோள்சீலைப் போராட்டம் உக்கிரமாக நடந்திருக்கிறது. இந்த வரலாற்றுப் பின்புலத்தில் தோன்றிய **நாராயண குரு**, சாதி மறுப்பை முன்வைக்கிறார். ஈழவ சாதி மக்களின் நலனுக்கு மட்டுமின்றி ஒடுக்கப்பட்ட அனைத்துச் சாதியினருக்காகவும் குரல் கொடுக்கிறார்; மாற்று வழிபாட்டு முறையை உருவாக்குகிறார்.

சாணார் போராட்டப் பின்புலத்தில் தோன்றிய **ஐயா வைகுந்தரின் வழிபாட்டு முறை** பார்ப்பன சாத்திரங்களையும், சம்பிரதாயங்களையும் நேரடியாகக் கேள்விக்குள்ளாக்குவதாகவும், எள்ளி நகையாடுவதாகவும் அமைந்தது.

சாதிக் கொடுமைக்கெதிராகக் கிறித்தவர்களாக மதம் மாறிய பின்னரும், சாணார் குலப் பெண்கள் மாற்றுத் துணி போடக்கூடாது என்றும் அது தங்கள் மத உணர்வைப் புண்படுத்துவதாகவும் கூறி திருவிதாங்கூர் நம்பூதிரிகளும் மேல் வருணத்தாரும் பிரிட்டிஷ் அரசியிடம் முறையிட்டதும் இதே காலகட்டம்தான்.

**1903 முதல் 1908 வரை வங்கப் பிரிவினைக்கு எதிராகத் தோன்றிய கிளர்ச்சி நசுக்கப்பட்ட பின், அரவிந்தரும் அவரையொட்டி பாரதியும் மாயாவாதத்தில் சரணடையத் தொடங்கினர். இதே கால கட்டத்தில்தான் நாடெங்கும் வெள்ளையனுக்கு எதிரானப் புரட்சிகர பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கின. நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் மரண தண்டனை விதிக்கப் பட்டார்கள். இவை பாரதியின் கவியுள்ளத்தில் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.**

வாசகர்கள் அறிந்திருக்கக் கூடிய இந்த வரலாற்று விவரங்களை தேவை கருதி இங்கே நினைவூட்டுவதற்கு மேல் விவரிக்கத் தேவையில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் விமோசனத்துக்காகக் குரல் கொடுத்த இந்த இயக்கங்களின் தலைவர்கள் யாரும் **ஆரிய மேன்மை, அகண்டபாரதம், வேதப் பொற்காலக் கனவு** என்று எதையும் முன்வைக்கவில்லை. மாறாக இவையனைத்திற்கும் எதிராக இருந்தார்கள்.

மேற்கூறிய வரலாற்று நிகழ்வுகள் குறித்து பாரதிக்கு எதுவும் தெரிந்திருக்க முடியாதென்று யாரும் வாதிட முடியாது.

●●●

**ச**மூகச் சீர்திருத்தம் என்பது பாரதிக்கு வெளியில் இருந்ததைப் போலவே, தேச விடுதலைப் புரட்சியாளர்களும் பாரதிக்கு வெளியில்தான் இருந்தனர். பாரதியை சாதகமாகவே மதிப்பிடும் முனைவர் **கோ. கேசவனின்** கூற்றுப்படியேகூட பாரதியின் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது 1905-இல் தொடங்கி 1911-இல் முடிந்து விடுகிறது. ஆனால் பாரதிக்கு வெளியே ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் தொடர்ந்து கொண்டுதானிருந்தது.

1903 முதல் 1908 வரை வங்கப் பிரிவினைக்கு எதிராகத் தோன்றிய கிளர்ச்சி நசுக்கப்பட்ட பின், அரவிந்தரும் அவரையொட்டி பாரதியும் மாயாவாதத்தில் சரணடையத் தொடங்கினர். இதே கால கட்டத்தில்தான் நாடெங்கும் வெள்ளையனுக்கு எதிரானப் புரட்சிகர பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கின. நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள். இவை பாரதியின் கவியுள்ளத்தில் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

ஆனால், புலம்பெயர்ந்த கூலித் தொழிலாளர்களாக வட அமெரிக்காவில் வாழ்ந்து வந்த சீக்கியர்களுக்கு இது உத்வேகமூட்டியது. 1913-இல் அங்கே தோற்றுவிக்கப்பட்ட **கத்தார் கட்சி**யின் நிறுவனர் **லாலா ஹர்தயாள்** பிறப்பால் இந்து; சீக்கியர்களும் முசுலீம்களும் திரண்டிருந்த கத்தார் கட்சி, தனது கொள்கையிலும் நடைமுறையிலும் உண்மையான மதச்சார்பின்மை மற்றும் ஜனநாயகத்துக்கான கூறுகளைக் கொண்டிருந்தது.

பஞ்சாப் மக்களிடையே மதச்சார்பின்மை உணர்வைத் தோற்றுவிக்க உணர்வுபூர்வமாக முயன்றது கத்தார் கட்சி. சீக்கியர்கள் பெரும்பான்மையாக இக்கட்சியில் இருந்தபோதிலும், 1857 முதல் சுதந்திரப் போரை ஒடுக்குவதில் பஞ்சாப் சிப்பாய்கள் வெள்ளையனுக்கு துணை நின்றதை கத்தார் கட்சி பகிரங்கமாகச் சாடியது. அடாவடித்தனமான நடத்தையைக் குறிப்பதற்கு பஞ்சாபி மொழியில் பயன்படுத்தப்பட்டு வந்த துர்க்கா சாஹி (துலுக்கன் நடத்தை) என்ற சொல்லையே



படிப்பகம்

www.padippakam.com

தடை செய்து இந்து, முசுலீம், சீக்கிய ஒற்று மையைப் பிரகடனம் செய்தது. **''நமக்குப் பார்ப்பானும் வேண்டாம், காஜியும் வேண்டாம். வழிபடும் காலமெல்லாம் முடிந் தது; இது வாளெடுக்கும் காலம்''** என்று முழங் கியது.

இந்த விடுதலைப் போர் வீரர்கள் கம்யூனிஸ் டுகள் அல்லர்; நாத்திகர்களும் அல்லர்; எனினும் இவர்களிடம் இந்து மீட்புவாதக் கனவு இல்லை. பாரதியின் 'ஆரியன், மிலேச்சர், புலையன்' என்ற சொற்பிரயோகங்களுக்கெல்லாம் கொண்டு காட்டிப் பொருள் கூறும் பேராசிரியப் பெரு மக்கள், அதேகால கட்டத்தில் பஞ்சாபில் செல்வாக்கு பெற்றிருந்த இந்த இயக்கம் மட்டும் பாரதியின் சமூகக் கண்ணோட்டத்தைப் பெற்றிரா தது ஏன் என்று விளக்க வேண்டும். வேதகால மீட்புக் கனவை முன்தள்ளிய ஆரிய சமாஜம் தோன்றிய அதே மண்ணில்தான் கத்தார் கட்சியும் தோன்றியது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

**''நாங்கள் சீக்கியர்களோ, பஞ்சாபிகளோ அல்ல; நாட்டுப் பற்றுதான் எங்கள் மதம்'' என்று கூறினார் கத்தார் கட்சியின் முன்னணி யாளர்களில் ஒருவரான சோகன் சிங் பக்னா. ''விடுதலை வேட்கையே அவனது மதமாக அமைந்தது'' என்று பாரதியின் மதவுணர் வுக்கு விளக்கம் தருகிறார் பேரா. சிவத்தம்பி. இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!**

கத்தார் கட்சியினரின் தேசிய உணர்வு மத உணர்வைப் புறந்தள்ளியது. பாரதியிடமோ மத வுணர்வே தேசிய உணர்வாகத் தன்னை மறுஉறுதி செய்து கொண்டது. பிரிட்டிஷ் கொடுங்கோன் மையால் கத்தார் கட்சி அழிக்கப்பட்டபின் எஞ்சி யிருந்த அதன் முன்னணியாளர்கள் பொதுவு டைமைக் கட்சியின் செயல்வீரர்கள் ஆனார்கள். பாரதியின் அபிமானம் பெற்ற அரசியல் தலைவர் களான திலகர், காந்தியின் வாரிசுகளுடைய பரி ணாம வளர்ச்சி வாசகர்கள் அறிந்ததுதான்.

1914-15-இல், கத்தார் கட்சியின் நூற்றுக் கணக்கான சிப்பாய்களை ஏற்றிவந்த **'காமகாட்டு மாடு'** என்ற கப்பல் வழிமறிக்கப்பட்டு, அதன் வீரர்கள் 40 பேர் தூக்கிலேற்றப்பட்டதற்கும், 200 பேர் ஆயுட்தண்டனை விதிக்கப்பட்டதற்கும் பார தியின் கவியுள்ளம் குமுறவில்லை; தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைஞர்களையே பாட்டெழுத வைத்த **ஜாலியன் வாலாபாக் படு கொலைக்குக்** கூட பாரதி ஆவேசப்படவில்லை.

வெள்ளை ஆதிக்கத்தைக் கண்டு பாரதிக்கு வராத ஆவேசம் பார்ப்பனரல்லாதார் கிளர்ச் சியைக் கண்டவுடன் வருகிறது.

''ஒன்றோடொன்று சம்பந்தம், பந்தி போஜனம் செய்து கொள்ள வழக்கப்படுத்தாத ஆயிரக்கணக்கான வகுப்புகள் இந்துக்களுக் குள்ளே நெடுங்காலமாய் இருந்து வருகின்றன. **இவற்றுள் பிராமணர் ஒரு வகுப்பினர்.** இங்ஙனம் வகுப்புகளாகப் பிரிந்திருத்தல் குற்ற மாயின் அக்குற்றம் பிராமணரை மட்டுமே சார்ந்த தாகாது'' (அழுத்தம் எமது).

இந்த மேற்கோளை எடுத்தாளும் பேரா. பார திபுத்திரன், இன்று திராவிட இயக்கத்தின் வேளாள மேல்சாதிப் பின்புலம் கேள்விக்குள் ளாக்கப்படுவதை பாரதி அன்றே உய்த்துணர்ந்து விட்டான் என்று மகிழ்கிறார்.

படிநிலைச் சாதியமைப்பில் ஒடுக்கப்பட்ட சாதிகளை, ஒடுக்கும் சாதியினர் - குறிப்பாக மூன்று மேல் வருணங்களைச் சேர்ந்த சாதியினர் சுரண்டினர், ஒடுக்கினர். ஆனால் பார்ப்பனர்கள் இந்தச் சாதிய ஒடுக்குமுறை நிறுவனத்தின் சித்தாந் தத்தை உருவாக்கி, புதுப்பித்து, பாதுகாத்து வளர்ந் தவர்கள்; அதற்கு மதப் புனிதம் கற்பித்து நிலை நாட்டியவர்கள்; ''2000 சாதிகளில் பிராமணரும் ஒரு வகுப்பினர்'' என்ற பாரதியின் கூற்று ''கூட்டத்தோடு கோவிந்தா போட்ட இன்னு மொரு சாதி'' என்ற அளவிற்கு பார்ப்பன சாதியின் குற்றத்தைக் குறைக்கிறது.

வேறு வார்த்தைகளில் சொன்னால் திராவிட இயக்கத்தின் பார்ப்பன எதிர்ப்புக்கு சோ, இந்தியா டுடே முதல் சராசரிப் பார்ப்பனன் வரை என்ன மறுப்பு கூறுகிறார்களோ அதைத்தான் பாரதியும் கூறுகிறார். ''நாங்கள் மட்டுமா பொறுப்பு?'' என்ற இந்த எதிர்க் கேள்வியின் மூலம்தான் ஒரு சாதி என்ற முறையில் பார்ப்பனர்கள் தம்மை குற்றத்தி லிருந்து விடுதலை செய்து கொள்கிறார்கள்.

ஆகவே, ''பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை பாரதி அன்றே அம்பலப்படுத்தினார்'' என்று புள காங்கிதம் அடைவதற்கு முன் அவர் எந்த இடத்தில் நின்றுகொண்டு அதைச் செய்தார் என்று ஆராய்வது நாணயமானதாக இருக்கும். இந்துமத ஒழிப்பு - சாதி ஒழிப்பு நிலையில் நின்றோ, பொது வுடைமைக் கருத்தியலில் நின்றோ பாரதி இதைப் பேசவில்லை. சித்தாந்த ரீதியாக இந்து மீட்புவாத நிலையிலும், அரசியல் ரீதியாக காங்கிரசு, அன்னி பெசன்ட் ஆதரவு நிலையிலும் இருந்த பாரதி, பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை இந்தக் கோணத் திலிருந்து விமரிசிப்பதில் வியப்பொன்று மில்லை.

''பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக் கையை தேசிய நலனுக்கு ஆபத்து என்றும், தேசிய முன்னேற்றத்தின் எதிரிகளுக்குத் துணை போவது'' என்றும் அன்றைக்குச் சாடியது **இந்து** பத்திரிகை. அன்னிபெசன்டின் **'நியூ இந்தியா'** பத்திரிகையோ இதை விஷமத்தனமான இயக்க மென்றும் இவர்களை தேசத்தின் நண்பர்களாகக் கருத முடியாதென்றும் சாடியது. ஆனால் இதே காலகட்டத்தில் காந்தி அறிவித்த ஒத்துழையாமை இயக்கத்தை சத்தியமூர்த்தி உள்ளிட்ட 'தேசபக் தர்கள்' எதிர்த்தனர். கல்வி, நீதிமன்றம், சட்ட

**1914-15-இல், கத்தார் கட்சியின் நூற்றுக்கணக்கான சிப்பாய்களை ஏற்றிவந்த 'காம காட்டு மாடு' என்ற கப்பல் வழிமறிக்கப் பட்டு, அதன் வீரர்கள் 40 பேர் தூக்கிலேற்றப் பட்டதற்கும், 200 பேர் ஆயுட் தண்டனை விதிக்கப் பட்டதற்கும் பாரதியின் கவியுள்ளம் குமுறவில்லை; தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைஞர்களையே பாட்டெழுத வைத்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குக் கூட பாரதி ஆவேசப்படவில்லை.**





படிப்பகம்

www.padippakam.com

மன்றம் ஆகியவற்றைப் புறக்கணித்தால் அதிகாரம் பார்ப்பனரல்லாதார் கைக்குப் போய்ச் சேர்ந்து விடும் என்ற தனது அச்சத்தை 'இந்து' பகிரங்கமாகவே எழுதியது.

அன்று காந்தியை ஆதரித்து வந்த பாரதியும் ஒத்துழையாமையை எதிர்த்தார். ''பதவிகளைப் புறக்கணித்தல் சாத்தியமில்லையென்றும் அதில் குறிப்பிட்ட அளவு கூடப் பயனிராது'' என்றும் பாரதி சுதேசிமித்திரனில் எழுதியதாகவும், ''அந்தப் பத்திரிகையின் உரிமையாளர் ரங்கசாமி அய்யங்காரின் கருத்தும் இதுவாகவே இருந்தது'' என்றும் குறிப்பிடுகிறார் முனைவர் கேசவன். இது 'இந்து' பார்வையல்லாமல் வேறெந்தப் பார்வை?

பதவிகளைப் புறக்கணித்தல் சாத்தியமில்லை என்று பாரதி கூறிய அதே காலகட்டத்தில்தான் பெரியார் காங்கிரசுக்குள் நுழைகிறார். நகராட்சித் தலைவர் பதவியைத் துறக்கிறார்; நீதிமன்றத்தையும் அவர் புறக்கணித்ததன் காரணமாக, வியாபாரத்தில் வரவேண்டிய 50,000 தொகையையும் இழக்கிறார்; ''வழக்கை வேறு பெயருக்கு மாற்றிக் கொடும். நான் இனாமாகவே வாதாடி வசூலித்துத் தருகிறேன்'' என்று சேலம் விஜயராகவாச்சாரியார் என்ற வக்கீல் சொன்னபோது அது நெறியற்ற செயல் என்று நிராகரிக்கவும் செய்தார்.

இங்கே பாரதியை, பெரியாருடன் ஒப்பிட்டுப் பார்க்காமலிருக்க முடியவில்லை. 1918-இல் பாரதியை கடலூர் சிறையிலிருந்து (சுமார் 20 நாள் சிறைவாசம்) மீட்பதற்கு முயன்றவர்களில் முக்கியமானவர் சர். சி.பி. ராமஸ்வாமி அய்யர். திருவிதாங்கூர் திவானாக இருந்து பார்ப்பனக் கொடுங்கோன்மையை வழிநடத்தியது, ஆங்கில அடிவருடியாக இருந்து சர் பட்டம் பெற்றது, உறவினர்களுக்கு நீதிபதி பதவி வாங்கியது - என ஏகாதிபத்தியக் கைக்கூலித்தனத்திலும் பார்ப்பன வெறியிலும் முதலிடம் பெற்றிருந்த ராமசாமி அய்யரின் உதவியை நாடிய இந்தக் கவியுள்ளத்தை எந்தக் கணக்கில் சேர்ப்பது? இத்தகைய பின்புலங்கள் எதையும் கணக்கில் கொள்ளாமல் ஒரு மனிதனை அல்லது ஒரு கவிஞனைப் பரிசீலிப்பதுதான் வரலாற்றுப் பொருள்முதல்வாத ஆய்வு முறையோ!

மராட்டியத்தில் தோன்றிய பூலேயின் பார்ப்பன எதிர்ப்பு இயக்கத்துக்கு எதிர் வினைதான் ஆர்.எஸ்.எஸ் என்கிறார் பேரா. அஜாய் அகமது. ஏற்கெனவே ஆண்ட (பேஷ்வா) பரம்பரை என்ற முறையில் அரசு அதிகாரத்தை இழந்ததன் விளைவாகத் தோன்றிய மூர்க்கத்தனம் இந்த பார்ப்பன எதிர்ப்புரட்சிக் கும்பலின் விசேடத் தன்மையாக இருந்தது. இசுலாமிய வெறுப்புக்கான வரலாற்று ரீதியான காரணங்களும் இந்த பேஷ்வா பரம்பரைக்கு உண்டு.

இந்த மூர்க்கத்தனமும் முசுலீம்கள் மீதான வெறுப்பும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டால் மட்டும்தான் அது இந்து மீட்புவாத சிந்தனை என்று பாரதி அபிமானிகள் வாதிடுவதுதான் வரலாற்றுக் குருட்டுத்தனம். கல்வி, அதிகார வர்க்கப் பதவிகள் ஆகியவற்றைக் கைப்பற்றி அனைத்திந்திய அளவிலேயே பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கைப் பெற்றிருந்த பார்ப்பனர்கள், மராத்திய பேஷ்வா பரம்பரையைப் போல நடந்து கொள்ளாததில் வியப்பில்லை. பழைய முறையிலான அரசு அதிகாரத்தை இனி நிறுவ இயலாதென்பதையும், புதிய அரசதிகாரத்தை (பிரிட்டிஷ் ஆட்சி மற்றும் காங்கிரசில்) கைப்பற்றுவதுதான் ஆகக்கூடிய வழி என்றும் உணர்ந்திருந்த 'தொலைநோக்கு'ப் பார்வை கொண்ட தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் அதற்குப் பொருத்தமான மிதவாத அணுகுமுறையைக் கடைப்பிடித்தனர். தீவிரமான இசுலாமிய வெறுப்புக்கான வரலாற்றுப் பின்புலமும் தமிழகத்தில் இல்லை.

இந்த மிதவாத - தீவிரவாத வேறுபாடு பார்ப்பன தேசியம் எனும் சித்தாந்தத்தில் ஏற்பட்ட வேறுபாடு அல்ல; நீதிமன்ற உத்தரவை மீறி அயோத்தியில் கோயில் கட்டவேண்டுமெனச் சொல்லும் அசோக் சிங்காலுக்கும், அதே காரியத்தை சட்டப்படி செய்ய வேண்டும் என்று கூறும் சங்கராச்சாரிக்கும் உள்ள 'கொள்கை' வேறுபாடுதான்.

பாரதியிடம் நாம் காணும் பார்ப்பன தேசியம் என்பது வெறும் சாதிப் பார்வை மட்டுமல்ல; பாரதியின் வர்க்கப் பார்வையிலும் அது வெளிப்படுகிறது. ஐரோப்பாவில் நிலவிய வர்க்க ஏற்றத்தாழ்வுகளைக் காட்டிலும் இந்து சாதி முறை எவ்வளவோ மேலானது என்றும் நம்முடைய சாதி முறையை அவர்கள் கேலி செய்வது மயிலைக் காகம் கேலி செய்வதற்கு ஒப்பானதென்றும் கூறுகிறான். ஆர்.எஸ்.எஸ். குருமூர்த்தி இன்று கூறிவருவதும் இதுதான்.

ரசியப் புரட்சியை அதன் வன்முறை காரணமாக எதிர்ப்பதாகக் கூறும் பாரதி, பாஞ்சாலி சபதத்தின் வன்முறையைக் கொண்டாடுவதைச் சுட்டிக் காட்டி பொருத்தமாகவே கேலி செய்கிறார் மதிமாறன். பாரதியின் முரண்பாடு வன்முறைப் பாதையில் இல்லை; உடைமை வர்க்கத்துக்கு எதிரான வன்முறைதான் அவனுக்கு திகிலூட்டுகிறது. ஐரோப்பாவைப் போல இங்கே வர்க்க முரண்பாடுகள் தோன்றுவதைக் கண்டவுடன் அவற்றை முளையிலேயே கிள்ளி விட வேண்டும் என்கிறான் பாரதி.

பாரதி அன்பர்களில் அதிகம் முற்போக்கானவர்கள் எனப்படுவோர் ''பாரதி சோசலிசத்தை ஆதரிக்கவில்லை'' என்பதைப் பெருந்தன்மையுடன் ஒப்புக் கொள்கிறார்கள். அதுவல்ல நாம் எழுப்பும் பிரச்சினை. வானமேறி வைகுந்தம் போவது இருக்கட்டும், கோழி பிடித்த கதையைப் பார்ப்போம்.

**பாரதியிடம் நாம் காணும் பார்ப்பன தேசியம் என்பது வெறும் சாதிப் பார்வை மட்டுமல்ல; பாரதியின் வர்க்கப் பார்வையிலும் அது வெளிப்படுகிறது. ஐரோப்பாவில் நிலவிய வர்க்க ஏற்றத்தாழ்வுகளைக் காட்டிலும் இந்து சாதி முறை எவ்வளவோ மேலானது என்றும் நம்முடைய சாதி முறையை அவர்கள் கேலி செய்வது மயிலைக் காகம் கேலி செய்வதற்கு ஒப்பானதென்றும் கூறுகிறான். ஆர்.எஸ்.எஸ். குருமூர்த்தி இன்று கூறிவருவதும் இதுதான்.**





படிப்பகம்

www.padippakam.com

1921-இல் சென்னை மாகாண நிலப்பிரபுக்களுக்கு நிலத்தீர்வையைக் கூட்டியவுடனே "இது லெனினுடைய கொள்கையில்தான் போய் முடியும். பூஸ்திதிகளை (நிலங்களை)யெல்லாம் பறித்துக் கொண்டு உடையவரைத் தெருவில் விட வேண்டும் என்ற கொள்கை" என்று சாடுகிறான் பாரதி.

உழைக்கும் வர்க்கத்தின் விடுதலை, சோசலிசம் பற்றி ஒரு கவிஞன் (அல்லது யாரும்) போடும் வாய்ப்பந்தலிலிருந்து அவர்களது வர்க்கக் கண்ணோட்டத்தைக் கண்டுபிடிக்க முடியாது. உழைக்கும் வர்க்கத்துக்கு 'வழங்க' இருப்பதாக கவிஞன் அளிக்கும் வாக்குறுதிகளில் அதைத் தேடுவதை விட, ஆளும் வர்க்கத்தின் உடைமை பறிக்கப்படும்போது அவன் காட்டும் எதிர்வினையில்தான் அவனது வர்க்கப் பார்வையைத் துலக்கமாக அறிய முடியும்.

நிலப்பிரபுக்கள் மீதான வரிவிதிப்பு கூட்டப்பட்டதற்குக் குமுறும் பாரதி, சோசலிசத்துக்கு மாற்றாக இந்தியா வழங்கவிருக்கும் கிருதயுக சமூகத்தின் மாதிரியையும் ஒரு கட்டுரையில் எழுதுகிறான்.

**உடைமையாளர்களெல்லாம் சேர்ந்து உழைப்பாளர்களைக் கூட்ட வேண்டுமாம். "இந்த சொத்து எப்படியோ எங்களுக்கு வந்து விட்டது. எப்படி வந்திருந்தாலும் அதை நீங்கள் அடித்துப் பிடுங்குவது சரியல்ல.... உங்களுக்கு நாங்களும் எங்களுக்கு நீங்களும் தேவை. நாங்கள் உங்களுக்கு வயிறார சோறு போட்டு விடுகிறோம். நீங்கள் வேலை செய்யுங்கள்."**

இதுதான் பாரதி எழுதும் அந்த நீண்ட கட்டுரையின் சாரம். சோசலிசத்துக்கு மாற்றாக பாரதி உயிர்ப்பிக்கும் கிருதயுகம் இதுதான். பின்னாளில் காந்தி முன்வைத்த அரங்காவலர் கோட்பாடு, ஆர்.எஸ்.எஸ். அமைக்க விரும்பும் இந்து ராச்சியம், நாம் கண்முன்னே கண்டிருக்கும் கிராமப்புற சாதிப் பஞ்சாயத்து ஆகிய அனைத்துமே இதுதான். பாரதியின் மீட்புவாதக் கனவை அவனே மொழி பெயர்த்து எழுதிய கட்டுரை இது.

ஆனால் பேரா. கைலாசபதியோ "வர்க்க முரண்பாடுகள் கூர்மையடையாத கால கட்டத்தில் அவன் வாழ்ந்தான்" என்று பாரதியின் 'தெளிவின்மைக்கு' விளக்கம் தருகிறார். "39 வயதிலேயே அவன் இறந்துவிட்ட படியால் அவனது நிலைப்பாடுகள் பூரண முதிர்வு பெற்றிருக்கவில்லை" என்கிறார் பேரா. சிவத்தம்பி.

'முதிர்ச்சி'யடையாத பாரதியிடமிருந்து சிதறிய சில முத்துக்களை மதிமாறன் தனது நூலில் மேற்கோள் காட்டியிருக்கிறார். பாரதி அன்பர்கள் இதற்குப் பதிலளிக்காமல் தவிர்த்ததில் வியப்பில்லை.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் சில பார்ப்பனர்களைத் தாக்கியதாகக் கேள்விப்பட்டவுடனே கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் பாரதி:

"என்னடா இது? ஹிந்து தர்மத்தின் பகிரங்க விரோதிகள் பறையரைக் கொண்டு பிராமணரை அடிக்கும்படி செய்யும் வரை சென்னைப் பட்டணத்து இந்துக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்? அடே! பார்ப்பானைத் தவிர மற்ற சாதியாரெல்லாம் பறையனை அவமதிப்பாகத்தான் நடத்துகிறார்கள். எல்லோரையும் அடிக்க பறையரால் முடியுமா?...."

"பறையருக்கு நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முழு முதற் கடமை.... அவர்களையெல்லாம் ஒன்று திரட்டு, உடனே விபூதி நாமத்தைப் பூசு; பள்ளிக்கூடம் வைத்துக் கொடு; கிணறு வெட்டிக் கொடு; இரண்டு வேளை ஸ்நானம் பண்ணச் சொல்லு. அவர்களோடு சமத்துவம் கொண்டாடு... நம்முடைய பலத்தைச் சிதற விடாதேயுங்கள். மடாதிபதிகளே, நாட்டுக் கோட்டை செட்டிகளே, இந்த விஷயத்தில் பணத்தை வாரிச் செலவிடுங்கள்..."

தாக்கியவர்கள் கிறித்தவர்களோ, முசுலீம்களோ அல்ல; பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்; அவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்களும் நாத்திகர்களல்ல; அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களை மதம் மாறுமாறு சொல்லவுமில்லை.

பிறகு யாருக்கு எதிராக "விபூதியைப் பூசு, நாமத்தைப் போடு" என்று பதறுகிறார் பாரதி? "நம்முடைய பலம்" என்கிறாரே அந்த "நாம்" யார்? பாரதி பஜனை மண்டலியைச் சேர்ந்தவர்கள்தான் விளக்கம் சொல்ல வேண்டும்.

"பாரதியின் நிலைப்பாடு முதிர்ச்சியடையவில்லை" என்று வருத்தப்படுகிறார் சிவத்தம்பி. அவனோ பார்ப்பன தேசியத்தின் தீர்க்கதரிசியாகத் தன்னை நிரூபித்துக் கொள்கிறான். அவனுடைய உத்தரவுகளை நிறைவேற்றாமல் 80 ஆண்டுகளாகத் தூங்கிவிட்டு, இப்போது அவசர அவசரமாகச் சேரிகளுக்கு 'விஜயம்' செய்யும் சங்கராச்சாரிதான் பாரதியை ஒப்பிடும்போது தொலைநோக்கற்ற முண்டமாகத் தெரிகிறார்.

**(இந்த இதழில் முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்த இந்தக் கட்டுரை அடுத்த இதழில் முடியும்).**

**உடைமையாளர்கள் எல்லாம் சேர்ந்து உழைப்பாளர்களைக் கூட்ட வேண்டுமாம். "இந்த சொத்து எப்படியோ எங்களுக்கு வந்து விட்டது. எப்படி வந்திருந்தாலும் அதை நீங்கள் அடித்துப் பிடுங்குவது சரியல்ல.... உங்களுக்கு நாங்களும் எங்களுக்கு நீங்களும் தேவை. நாங்கள் உங்களுக்கு வயிறார சோறு போட்டு விடுகிறோம். நீங்கள் வேலை செய்யுங்கள்." — சோசலிசத்துக்கு மாற்றாக பாரதி உயிர்ப்பிக்கும் கிருதயுகம் இதுதான்.**



## அறிவிப்பு

**தவிர்க்கவியலாத காரணத்தால் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் இதழ், ஒரே இதழாக வெளிவருகிறது.**



படிப்பகம்

www.padippakam.com

*பாகிஸ்தான் :*

# இராணுவத்தை எதிர்த்து விவசாயிகள் போராட்டம்

''எங்கெல்லாம் ஒடுக்குமுறை நிலவுகிறதோ, அங்கெல்லாம் அதற்கு எதிரான கலகம் வெடிக்கும்.'' மதவெறி தேசியவெறி போன்ற உணர்வுகளால் அப்படிக் கலகம் வெடிப்பதைத் தடுத்துவிட முடியாது. இது மண்ணுக்குள் புதைக்கப்பட்ட விதையைப் போன்று தகுந்த ஈரமிருந்தால் மண்ணைப் பிளந்து கொண்டு வெளியே வருகிறது.

நீண்டகாலம் மதவெறியும் பாசிசத் தன்மையும் கொண்ட இராணுவ ஆட்சியில் சிக்குண்டிருக்கும் பாகிஸ்தானிலும் அத்தகைய கலகங்கள் வெடிக்கத்தான் செய்கின்றன. பாகிஸ்தான் அரசுக்கெதிராக - அதன் அமெரிக்கக் கைக்கூலித் தனத்துக்கு எதிராக அவ்வப்போது வெடிக்கும் அல்-கொய்தா போன்ற இசுலாமிய அடிப்படைவாதிகளின் தீவிரவாதத் தாக்குதல்களை இங்கே குறிப்பிடவில்லை. அடிப்படை உரிமைக்காக உழைக்கும் மக்கள் எழுச்சியுற்று நடத்தும் போராட்டங்களையே குறிப்பிடுகிறோம்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத் தலைநகர் லாகூர். அதற்குத் தெற்கே சுமார் 100 கி.மீ தூரத்தில் உள்ளது ஒக்காரா பகுதி. இங்கும் ஒரு தாழ்நிலைப் போரில் ஈடுபட்டிருக்கிறது பாகிஸ்தான் இராணுவம். அது போரிடுவது ஒன்றும் எதிரி நாட்டுப் படையோடு அல்ல. சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக. அதுவும் நிராயுதபாணிகளான விவசாயிகளை எதிர்த்து. அதிலும் குறிப்பாக, அந்நியனின் பார்வைக்கு இலக்காகிவிடக் கூடாது என்பதற்காக ''பர்தா''வால் பாதுகாக்கப்படும் இசுலாமிய விவசாயிப் பெண்களை இழுத்துக் கொண்டு போய் சித்திரவதை செய்கிறது பாகிஸ்தான் இராணுவம்.

வங்க தேசத்து தஸ்லிமா நஸ்ரீன் விவகாரத்தில் இசுலாமிய அடிப்படைவாதிகளின் பிற்போக்குத்தனத்தை விமரிசித்து நாம் எழுதியபோது கொதித்துப் போனார்கள், சில இசுலாமிய வாசகர்கள். இந்திய அரசின் பாகிஸ்தான் எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு எதிர்வினையாகவோ, பாகிஸ்தான் அரசின் இசுலாமிய அடிப்படைவாத மாய்மாலங்களால் மயங்கியோ அந்நாட்டு இராணுவ ஆட்சியைக் கூடப் பாராட்டும் சில வாசகர்களும் உண்டு. ஆனால் அங்கு என்னதான் நடக்கிறது என்பதற்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு.

''1971-இல் வங்காளிகள் மீது பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தியதைப் போலவே எங்கள் மீதும் கடந்த மூன்றாண்டுகளாக பாகிஸ்தான் இராணுவம் பயங்கரவாதத் தாக்குதல் நடத்துகிறது. இதுவரை எங்களுடைய இயக்கம் அமைதியாகவே இருக்கிறது. ஆனால், இராணுவம் தனது அட்டூழியங்களை நிறுத்தாவிட்டால் எங்கள் உரிமைகளுக்காக நாங்கள் ஆயுதங்களைக் கையிலெடுப்போம். அல்லது தற்கொலைத் தாக்குதல்களில் இறங்குவோம்.'' இது பாகிஸ்தானில் உள்ள அஞ்சுமான் மஜாரின் பங்சாம் என்னும் இயக்கத்தின் தலைமை அமைப்பாளர் அன்வார் ஜாவத் தோக்கரின் எச்சரிக்கை.

ஒக்காரா பகுதியில் 17,013 ஏக்கர் அடர்ந்த ஒரு காட்டுப் பூமியை 1908-ஆம் ஆண்டு விவசாயிகளிடம் ஒப்படைத்தது, ஆங்கிலேய அரசு. அப்போது பஞ்சாப் வருவாய் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இருந்த அந்நிலம் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு விவசாயிகளுக்குச் சொந்தமாக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. காடு திருத்திக் கழனியாக்கினார்கள் விவசாயிகள்.

ஆனால், 1913-ஆம் ஆண்டே பஞ்சாப் அரசாங்கத்துடன் ஒரு அடமான ஒப்பந்தம் போட்டுக் கொண்டு இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் அந்நிலத்தை எடுத்துக் கொண்டு விட்டது. ஒருமுறை புதுப்பிக்கப்பட்ட அந்த அடமான ஒப்பந்தம் 1938-ஆம் ஆண்டோடு காலாவதியாகிவிட்டது. ஆனாலும், அதன்பிறகும் அந்நிலத்தை ஆங்கிலேய இராணுவமும், 1947-க்குப் பிறகு அதன் வாரிசான பாகிஸ்தான் இராணுவமும் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அரசு வாக்களித்தபடி நிலம் விவசாயிகளுக்குச் சொந்தமாக்கப்படாமல், குத்தகைக்கு விடப்பட்டு, இராணுவம் குத்தகை வசூல் செய்து வருகிறது. குத்தகை வசூலில் இருந்து பஞ்சாப் அரசாங்கத்துக்குரிய பங்கையும் செலுத்தவில்லை.

திடீரென்று மூன்றாண்டுகளாக, குத்தகை முறைக்குப் பதிலாக ஒப்பந்த முறையை ஏற்றுக் கையொப்பமிடும்படி ஒக்காரா விவசாயிகளை இராணுவம் நிர்பந்தித்து வருகிறது. ஒப்பந்த முறைக்கு மாறிவிட்டால் அடுத்த நாளே நிலத்தைப் பிடுங்கிக் கொண்டு விவசாயிகளை விரட்டிவிடலாம் என்று பாக். இராணுவம் எத்தனிக்கிறது.

20,000-க்கும் மேற்பட்ட இராணுவ மற்றும் காட்டிலாகா அதிரடிப்படையினரைக் குவித்து, நிலத்துக்குச் சொத்துரிமை கோருவதைக் கைவிட்டு, ஒப்பந்தப் பத்திரங்களில் கை நாட்டுப் போடும்படி விவசாயிகள் மிரட்டப்படுகிறார்கள். ஆண்களையும் பெண்களையும் சித்திரவதை முகாம்களுக்கு இழுத்துக் கொண்டு போய்த் துன்புறுத்துகிறார்கள். இல்லையென்றால், விவசாயிகளின் மகள்களையும் சகோதரிகளையும் இழுத்துக் கொண்டுபோய்க் கற்பழிப்போம் என்று மிரட்டுகிறார்கள்.

''எங்கள் பெண்கள், குழந்தைகள், முதியோர்களை இராணுவம் சித்திரவதை செய்கிறது. இதுவரை எங்கள் மக்கள் பதினோரு பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1947-இல் இருந்து இராணுவம் எங்கள் நிலத்தை பறித்துக் கொண்டிருக்கிறது. எங்களுக்கு சாவு அல்லது சொத்துரிமை வேண்டும்'' - சிறையிலடைக்கப்பட்டிருந்த தோகரா இப்படிச் சபதமேற்கிறார். அவர் நிலத்துக்கான போராட்டத்தை இவ்வளவு உறுதியாகத் தலைமை ஏற்பதால் கொலை, பயங்கரவாதம் போன்ற பல வழக்குகளும் அவர்மீது புனையப்பட்டிருக்கின்றன.

முதலில் பஞ்சாப் மாநில ஆளுநர் முகமது சஃப்தார், பின்னர் அம்மாநில முதலமைச்சர் என்று அடுத்தடுத்து மனுப் போட்டு, முறையீடு செய்திருக்கிறார்கள், ஒக்காரா விவசாயிகள். ஒன்றும் பலிக்கவில்லை. ''ஒக்காரா நிலத்தை இராணுவம் சட்டவிரோத ஆக்கிரமிப்பு செய்துள்ளது; எனவே அது எப்படி விவசாயிகளுக்குக் குத்தகைக்கு விட்டிருக்க முடியும்; ஆகவே, நீங்கள் குத்தகை விவசாயிகள் என்று அங்கீகரிக்கவே முடியாது'' இப்படிச் சொல்கிறது பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் வருவாய் வாரியம்.

மேலும் கடந்த 55 ஆண்டுகளாக, விவசாயிகளிடம் இருந்து இராணுவம் குத்தகை வசூலித்ததற்கான ஆவணங்கள் எதுவுமே கிடையாது. இவ்வளவு காலமும் விவசாயிகளிடமிருந்து

**''ஒன்று, இராணுவம் தனது சட்டவிரோத ஆக்கிரமிப்பைக் கைவிட வேண்டும்; அல்லது எங்களைக் கொன்று போடவேண்டும். எங்களுடைய இளைஞர்கள் விரைவில் இராணுவத்தோடு மோதுவார்கள் என்று நம்புகிறேன். நாங்கள் பல பத்து இலட்சம் பேர். அவர்கள் சில ஆயிரம் பேர்.''**



படிப்பகம்

www.padippakam.com

வசூலிக்கப்பட்ட குத்தகையை இராணுவம் கபளீகரம் செய்துள்ளது. ஒரு பண்ணைக்கு 2000 கோடி ரூபாய் வரை விழுங்கி ஏப்பம் விட்டிருக்கிறது. பஞ்சாப் முழுவதும் ஒக்காரா பண்ணையைப் போன்று 25 பண்ணைகள் உள்ளன. இவ்வளவு பெரிய ஊழலில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபட்டுள்ளது. குத்தகை முழுவதும் தனக்கே வரவேண்டும் என்று பஞ்சாப் வருவாய் வாரியம் கோரியபோது அதை இராணுவம் அலட்சியப்படுத்தி விட்டது. குத்தகை முழுவதையும் இராணுவம் சுருட்டிக் கொண்டதை அறிந்த விவசாயிகள் குத்தகை செலுத்துவதை நிறுத்திவிட்டார்கள். ஆத்திரமடைந்த பாகிஸ்தான் அதிபர் ஒக்காரா நிலத்தை வளைத்துக் கொள்ளும்படி இராணுவத்துக்கு உத்திரவிட்டார்.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உசைன் மெகதியை விவசாயிகள் சந்தித்தனர். ''அது ஒரு துப்பாக்கி முனையில் நடந்த சந்திப்பு. ஒப்பந்தத்தில் நாங்கள் கையொப்பமிடாவிட்டால் எல்லையில் உள்ள கொலைத் தண்டனைக் குழுவிடம் ஒப்படைத்துவிடுவேன். அது இந்திய உளவாளிகளையோ, அல்கொய்தா பயங்கரவாதிகளையோ சுட்டுக் கொல்வதைப் போலச் செய்து விடும் என்று மிரட்டினார் தளபதி.''

''இராணுவம் ஊழல் புரிகிறது உண்மைதான். ஆனால் ஒக்காரா விவசாயிகள் அதைத் தட்டிக் கேட்க முடியாது. ஏனென்றால் நாடு முழுவதுமே இராணுவத்திடம் அடிமைப் பட்டுக் கிடக்கிறது என்றார் தளபதி.''

ஒக்காரா விவசாயிகள் இயக்கத்தின் தலைவரைப் பிடித்துக் கொண்டு போய் ஆறு மாதங்கள் சித்திரவதை செய்தது, இராணுவம். பல பொய் வழக்குகள் புனைந்தது. அவரது பார்வையே கெட்டுப் போனது. ''இராணுவம் மின்சாரம், தொலைபேசி, குடிநீர்த் தொடர்புகளைத் துண்டித்துவிட்டது. உணவுப் பண்டங்கள் வரத்தையும் தடை செய்து விட்டது. நாங்கள் உண்மையில் ஒரு யுத்த நிலைமையில் இருக்கிறோம்'' என்கிறார் அவர்களின் தலைவர்.

விவசாயிகள் விளைச்சலைப் பங்கு போட்டுக் கொள்ள மறுக்கிறார்கள். ''சாவு அல்லது நிலம்'' என்று அவர்களின் குழந்தைகள் பாடுகிறார்கள். படிப்பறிவே இல்லாத பெண்கள் தமது உரிமைகள் பற்றிப் பிரசங்கமே செய்கிறார்கள்.

''சமீபத்தில் எங்கள் பெண்களிடம் முறைகேடாக நடப்பதற்கு இராணுவத்தினர் எத்தனித்தனர். அந்தப் பெண்களோ, அவர்களிடமிருந்து துப்பாக்கிகளைப் பிடுங்கிக் கொண்டு, செமையாக அடித்துப் போட்டார்கள்'' என்கிறார் அடக்குமுறைகளுக்கு அஞ்சாத தோகரா. மேலும் அவர் கூறுகிறார்:

''ஒன்று, இராணுவம் தனது சட்டவிரோத ஆக்கிரமிப்பைக் கைவிடவேண்டும்; அல்லது எங்களைக் கொன்று போட வேண்டும். எங்களுடைய இளைஞர்கள் விரைவில் இராணுவத்தோடு மோதுவார்கள் என்று நம்புகிறேன். நாங்கள் பல பத்து இலட்சம் பேர். அவர்கள் சில ஆயிரம் பேர். இராணுவத்தை வெல்லுவது மிகவும் கடினமானதாக இருக்காது.''

*உண்மைதான்!*

● **புதூர் இராசவேல்**

---

## பண்பலையைக் கீறுவது எப்படி?
## ஒரு வாசகரின் முன்முயற்சி

> **ஜூ**லை'03 இதழில் வெளியான 'பண்பலையைக் கீறுவது எப்படி?' சமகாலத்திற்குத் தேவையான அருமையான கட்டுரை.
>
> நான் சிறிது காலம் காலை 7.30 முதல் 8.45 வரை கொடைக்கானல் பண்பலையைக் கேட்டுக் கொண்டிருந்தேன். கடந்த இரண்டு மாதங்களாக சுத்தமாகத் தவிர்த்தாயிற்று. காரணம், காலை நேரத்தில் அன்றைக்குச் செய்ய வேண்டிய வேலை, நபர்கள் பற்றிய சிந்தனை, பாடல் கேட்பதால் அடைபட்டு விடுகிறது. இந்த நேரத்தில் எரிச்சலை உண்டாக்கிய சில விசயங்களுக்கு கொடைக்கானல் வானொலி நிலையத்திற்கு கடிதங்கள் எழுதினேன். இணைத்திருக்கிறேன்.
>
> **— சாக்ரடீசு, மதுரை**

பெறுநர்

நிலைய இயக்குனர்
கொடைக்கானல் வானொலி நிலையம்
கொடைக்கானல்

*மதிப்பிற்குரிய நிலைய இயக்குனர் அவர்களுக்கு,*

*வணக்கம். இன்றைய 'மனம் விரும்புதே' குழந்தைகளுக்கான நிகழ்ச்சியில் முயற்சி, தன்னம்பிக்கை, தேசப்பற்று என நல்லெண்ணம் ஊறும்(!)படியான பாடல்களைக் கேட்க வலியுறுத்துகிறீர்கள். நல்லெண்ணம்தான். ஒரு புகழ் பெற்ற சொற்றொடர் உண்டு: ''செயலற்ற வெறும் நல்லெண்ணம் நரகத்திற்குத்தான் இட்டுச் செல்லும்''*

*குழந்தைகளின் இயல்பு, தான் என்ன கேட்கிறதோ, பார்க்கிறதோ, பெரியவர்கள் என்ன செய்கிறார்களா அதைத்தான் பின்பற்றும்.*

*வாரம் முழுவதும் அப்பா, அம்மா, பெரியப்பா, அத்தை, மாமாவெல்லாம் என்ன பாடல்களை 'மனம் விரும்புகிறதே' நிகழ்ச்சியில் விரும்பிக் கேட்கிறார்களோ, குறிஞ்சி தென்றல் மற்றும் இதர நிகழ்ச்சியில் என்ன பாடல் ஒலிபரப்புகிறார்களோ, அவைகளைத்தான் இயல்பாக குழந்தைகளும் விரும்பிக் கேட்கும். எடுத்துக் காட்டாய்... இன்று 'மனம் விரும்புதே' நிகழ்ச்சி முடிந்ததும், கார்த்திகாவின் நேயர் விருப்பத்தில் 'வாடி! வாடி! நாட்டுக்கட்டை! வசமா வந்து மாட்டிகிட்ட' - ஈவ் டீசிங் பாடல். 'மச்சான் மீசை வீச்சருவா! மச்சினி எல்லாம் ஏங்கிடுவா' - காமம் கலந்த உதிரித்தனமான பாடல் போன்ற கருத்துள்ள பாடல்களை பெரியவர்கள் அன்புடன் விரும்பிக் கேட்டதற்கிணங்க தவிர்க்க முடியாமல் ஒலிபரப்பினீர்கள்.*

*இப்படி வாரம் முழுவதும் ஒலிபரப்பிவிட்டு, குழந்தைகளுக்கு மட்டும் கட்டுப்பாடு விதித்தீர்கள் எனில்... எனக்குச் சில சந்தேகங்கள் வருகிறது.*

*பெரியவர்கள் நாம் எப்படி வேண்டுமென்றாலும் ஒழுக்கக் கேடாய், கட்டுபாடில்லாமல் சிந்திக்கலாம், செயல்படலாம். ஆனால், குழந்தைகள் கட்டுப்பாடாய் இருக்க வேண்டும். அல்லது, நம்மை மாதிரியே மிகுந்த வக்கிரத்துடன் நம் குழந்தைகளும் சிந்திக்கிறார்களே என்ற பொறாமை.*

*பெரியவர்கள்தான் மாதிரிகள். அவர்களின் பிரதிகள்தான் குழந்தைகள். உடலிலும், உணர்விலும் அவர்கள் மட்டும் வேறு கிரகத்திலிருந்து குதித்தவர்கள் இல்லை. மொட்டு அழகாய், இயல்பாய் மலர்வதற்கும், காய் பிஞ்சிலே பழுப்பதற்கும் அதனுடைய புறச்சூழலும், அதனுள் உள்ளே உள்ள இயக்கமுமே காரணம்.*

*பெரியவர்களை முதலில் திருத்துங்கள். பின்பு குழந்தைகள் அவர்களாகவே திருந்திவிடுவார்கள்.*

*வார்த்தைகள் காயப்படுத்தியிருக்கும். அது நல்ல செயலூக்கத்திற்கு வித்திட்டால், சமூகம் மொத்தத்திற்கும் நல்லது தானே!*

வணக்கங்களுடன்
**சாக்ரடீசு**

www.padippakam.com

# சிலோன் ரேடியோவும் சிதறிய பருக்கைகளும்

முதலாளித்துவத்தின் மோசமான குணம் அது மனிதர்களைக் கேவலப் படுத்தி விடுகிறது. பொருளாதாரச் சுரண்டல் மட்டுமல்ல, மனித குலத்திடம் விளைய வேண்டிய நல்ல குணங்களை யெல்லாம் மிச்சம் மீதி இல்லாமல் சுரண்டி எடுத்து விடுகிறது. இருப் பவன், இல்லாதவன் என்ற நிலை ஏற்பட்ட உடனேயே, இருப்பவன் இல்லாதவன் மேல் கட்டவிழ்த்து விடுகிற சோதனை இருக்கிறதே, அப்பப்பா...! அது திருவிளையாடற் புராணத்தில் முருகனுக்கும், பக்தர் களுக்கும் ஈசன் வைத்த சோதனையை விடவும் ஈனத்தனமானது.

முருகனாவது கோபித்துக் கொண்டு பழனி மலை ஏறிவிடலாம். பாலும் பழமும் கொண்டுவந்து கொடுக்க பக்தர்கள் இருக்கிறார்கள். தொழிலாளி களுக்கோ கழுநீர்த்தண்ணிக்கும் வழி யில்லை, மீண்டும் மீண்டும் மூலத னத்தின் சுழலிலேயே வந்து விழ வேண்டியிருக்கிறது. இதைத்தான் நாட்டுப்புறத்து ஆட்கள் 'சிரிப்பா சிரிப்பு' என்பார்கள். அதாவது மேலோட்டமாகப் பார்த்தால் சிரிப்பு வரும். ஆழ்ந்து கவனித்தால் வேதனை யாக இருக்கும். இப்படி தொழிலாளர் களைச் சிரிப்பா சிரிக்கடிப்பதில் சிறு உடைமை வர்க்கமாகிய வணிகர்கள் ஏஜன்ஸி நடத்துபவர்கள் வல்லவர்கள். இவர்கள் சுரண்டும் தன்மைகளைக் கூர்ந்து கவனித்தால் அது கடந்தகால மனிதர்களின் இதிகாச, புராண, இலக் கியக் கற்பனைகளையும் விஞ்சக் கூடியதாய் இருக்கும். இவர்களிடம் மாட்டிக் கொண்டும், பார்த்தும் நான் பட்ட அனுபவங்களை கொஞ்சம் படலம் படலமாகப் பார்ப்போமா!

***படித்து முடித்து விரக்தியின் விளிம் புக்குப் போன இளைஞனை பார்ம சூட்டிகல்ஸ் முதலாளி தடுத்தாட் கொண்ட படலம்:***

பலரிடமும் வேலை கேட்டு நான் அலைந்து கொண்டிருந்த நேரம். தெரிந்த ஒருவர் கணேஷ் பார்மசூட் டிகல்ஸ் போங்க நான் சொல்றேன் என்று அனுப்பி வைத்தார். நான் போய் ஆபீஸ் வாசலில் தயங்கியபடி நின்றேன். சோடா புட்டி கண்ணாடி இடுக்கு வழியே என்னைப் பார்த்த ஒரு வயதான மேனேஜர் நான் நிற்பதைக் கவனிக்காததுபோலவும் அக்கவுண்ட் நோட்டுக்குள் தீவிரமாக நோட்டம் விடுபவர் போலவும் பாவ்லா பண்ண ஆரம்பித்தார்.

திடீரெனக் குரலை உயர்த்தி ''ஏய் முருகேசா மசமசன்னு நிக்காத கீழ போயி தூக்கிக்கிட்டு வந்து அந்த பாக்ஸெல்லாம் மாடில அடுக்கு. ஏய் ரெங்கசாமி உன்னையுந்தாண்டா, உனக்கு மட்டும் தனியா சொல்லணுமா ஒன்னாந்தேதி ஆனா மட்டும் காலு கைய கரெக்டா நீட்டுங்க வேலைக் குன்னா வணங்காது. முண்டங்க'' அவர் திட்டியதற்குப் பதில் பேச்சில்லை. ஆட்களும் யாரும் கண்ணுக்குத் தென்ப டவில்லை. வேலைக்குச் சேர்ந்த பிற்பா டுதான் தெரிந்து கொண்டேன், அது புதி தாக வேலைக்குச் சேர்பவர்களிடம் எடுத்த எடுப்பிலேயே ஒரு பய பக்தியை ஏற்படுத்தும் டெக்னிக் என்று.

ஆளே இல்லாமல் திட்டி முடித்து விட்டு எதேச்சையாய் என்னைக் கவ னித்த மாதிரி ''யாருப்பா, என்ன வேணும்?'' என்று பார்த்த மாத்திரத்தி லேயே முகத்தை அக்கவுண்ட் நோட்டுப் பக்கம் திருப்பிக் கொண்டு கேட்டார்.

''தாராசுரம் முத்து பார்மசி ரவி அனுப்பிச்சார் சார். இங்க வேலை இருக் குன்னு.''

உதட்டைப் பிதுக்கி தனக்குத்தானே தலையை ஆட்டிக் கொண்டவர் ''ஆங்... முன்னாடி சொன்னது இப்ப வந்திருக்கியேப்பா... இப்பதான் நாலு பேர சேத்தோம். தேவையில்லையே.'' ''உம்...'' தலையை வேகமாக ஆட்டிக் கொண்டே ''எந்தத் தெரு... யாரு வீடு...'' தேவையான கேள்விகளைக் கேட்டுக் கொண்டார்.

''பாத்தா நல்ல பையனா தெரியிற... ஒனக்காக நான் ரிஸ்க் எடுத்து கொஞ்சம் மொதலாளிய கேட்டுப் பாத்துட்டு வர்றேன். என்ன, கொஞ்சம் வெயிட் பண்ணு.'' கண்ணை ஒரு சிமிட்டுச் சிமிட்டிவிட்டு கீழேயே குடி இருக்கும் முதலாளி வீட்டுக்குப் போய்விட்டுச் சிறிது நேரம் கழித்து வந்தார்.

என்னை மேலிருந்து கீழ் வரை ஒரு முறை ஏற இறங்க உற்றுப் பார்த்தார். நான் சற்று குழப்பமாக யோசிப்பதைக் கவனித்தவர் ''அதுக்கில்ல தம்பி இந்த வேலைக்கி காலு கையி நல்லா இருக் கணும். சைக்கிள் மிதிக்கணும், சலைன் பாக்ஸ் கட்டிக்கிட்டுப் போவணும். வேலைக்குச் சேர்ந்துட்டு பிறகு வாதம், கீதம்னு என்னால சைக்கிள் ஓட்ட முடி யாதுன்னு சமாளிக்கக் கூடாது. அப்புறம் எம்மேல வருத்தப்படாத. ஒனக்கு இதெல்லாம் தோதுன்னா சொல்லு. அதுவும் மொதலாளி யோசிக் கிறாரு. நான் என் சொந்த ரிஸ்குலதான் ஒன்னச் சேத்துக்கணும். இருவத்தைஞ்சு வருசமா நானும் இந்தக் கம்பனில வேலை செஞ்சி நல்ல பேரு எடுத்துருக் கிறேன். என் பேர கெடுக்காம நடந்துக் கப்பா. அப்படியே இருந்தின்னா பிற்பாடு மொதலாளி ஒரு கவனிப்பு கவனிப்பாரு புரியுதா?'' ஏதோ தற்கொ லைக்குப் போனவனைத் தடுத்தாட் கொண்ட பரம்பொருளாய் அவரது பேச்சில் கிறங்கி வேலையில் சேர்ந்தேன்.

அடுத்த நாளே ''தம்பி கீழே லோடு வந்திருக்கு, அந்த டிஞ்சர் கேன மாடிக்கு தூக்கிக்கிட்டு வாங்க. ஏய் முருகேசா கூட போயி தம்பிக்கு எடத்த காட்டு. தம்பி இன்னம இந்த சட்டையெல்லாம் கழட்டி அங்க மாட்டிடுங்க.''

''அந்த சட்டையெல்லாம்'' என்ப தற்குப் பல பொருள் உண்டு என்பது பழகப் பழக புரிய ஆரம்பித்தது. அதா வது இனிமேல் மானம், மரியாதை அனைத்தையும் கழட்டி வைத்து விடுவது நல்லது என்று அதற்கு அர்த்தம். அப்படித்தான் நடந்தது. போன ஆரம்பத்தில் வாங்க தம்பி, அடுத்து வாய்யா, அடுத்து வா, அடுத்து வாடா என கிடுகிடுவென மரியா தைக்கு புரமோசன் கிடைத்தது.

வியாபாரம் சரியாக இல்லாத நேரத்தில் மொதலாளியின் மொகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். இது வெறும் கோவம் மட்டுமல்ல மொதலா ளிக்கு ஒரு பாதுகாப்பான கவசமும் கூட. ஏனென்றால் ஒருநாள் என்னுடன் வேலை செய்த ராஜாமணி சாயங்காலம் போகும் போது ''ஒரு நூறு ரூபாய் அட்வான்ஸ் வாங்க வேண்டும், குழந் தைக்கு உடம்பு சரியில்லை'' என்று பேசிக் கொண்டிருந்தார். சாயங்காலம் மேனேஜரிடம் போய்க் காதைக் கடிக்க ''நல்ல கதைய கெடுத்த ராஜாமணி. காலைலேர்ந்து நானே நெருங்க முடி யல. மொதலாளிக்கு மூடே சரியில்ல. நானே ஒரு அம்பது ரூவா அட்வான்ஸ் கேக்கலாம்னு நெனச்சேன் இருக்குற கோவத்துல போடா வேலையவுட் டுன்னு சொல்லிட்டார்னா நீ வேற''


படிப்பகம்

www.padippakam.com

என்று கையை ஆட்டிக் காண்பித்தார்.

மேனேஜர் போட்ட போடில் ராஜா மணி தலை தப்பினால் போதுமென்று இச்சு கொட்டியபடியே நகர்ந்து சென்றார். தொழிலாளர்களிடமிருந்து வரக்கூடிய சில்லறைத் தொந்தரவு களைச் சமாளிக்க நிர்வாகத்தில் அடிக் கடி நடக்கும் நாடகம் இது. இதில் முத லாளியைவிடவும் மேனேஜர் செய்யும் தந்திரம் விகாரமானதாக இருக்கும்.

அதுவும் தஞ்சை, கும்பகோணம் பகுதிகளில் பெரும்பாலான மருந்துக் கம்பெனிகளை செட்டியார் சாதியினர் நடத்துவார்கள். அங்கெல்லாம் மேனேஜர், அக்கவுண்டண்ட் என்ற நிலையில் பெரும்பாலும் பார்ப்பனர் களே இருப்பார்கள். மொத்தச் சமூகத் திலும் அந்தப் பார்ப்பன ஆதிக்க சாதிக் கூட்டு என்னென்ன லீலைகள் புரிகி றதோ அத்தனைத் தன்மைகளும் வியா பாரத்திலும் நிலவும். இந்த சுரண்டல் தாங்காமல் யாராவது ''நின்னுக்குறேன் மொதலாளி'' என்று ஆரம்பித்தால் முதலில் நயமான பேச்சு வரும்.

''ஆறுமுகம் ஒரு மொறைக்கு பத்து மொறை யோசி. தீபாவளி வரப் போற நேரத்துல நின்னுகிறேங்குற... ரொம்ப வருஷமா இருங்குறங்குறதால மொத லாளி எதும் போனஸ் தந்தாலும் தரலாம். அவசரப்பட்டுக் கெடுத்துக் காத... இத்தனை வருசமா புள்ள மாதிரி வெச்சிருந்தாரு. எனக்குன்னு சொல்லாத... ஒன்ன வீட்டு வரைக்கும் உள்ளார விட்டாரு. அத வுடு, இருவத் தஞ்சு வருசமா இருக்குறேன். எங்கிட் டேயே கம்பெனிச் சாவிய தந்தது கெடையாது. ராத்திரி வூட்டுக்குப் போறப்ப ஒங்கைல தர்றாரு. சும்மா பத்து அஞ்சுக்கு ஆசப்பட்டு இந்த மரி யாத நம்பிக்கை எல்லாம் கெடுத்துட்டுப் போயிடாத. ஏதோ அவருக்காகப் பேசு றேன்னு நெனக்காத. ஒனக்காயிரம் மொதலாளி - அவருக்கு ஆயிரம் தொழிலாளி, யாருக்கும் ஆளு கெடைக் காமப் போவப்போறது கெடையாது. அப்புறம் போய்ட்டு வந்தின்னா பழைய மரியாதையெல்லாம் கெடைக் காது. அப்புறம் ஒன் இஷ்டம். ஒன் நல்ல துக்குதான் சொல்றன். பல வருசம் பழ கிட்டோமேன்னுதான் சொல்றேன். இதே வேற ஒருத்தரா இருந்தா சொல்லக்கூட மாட்டேன்.''


இருக்கும்போது வாடா, போடா, திருட்டுப் பயலே என்று வைதுவிட்டு ஏதோ மரியாதையாக வைத்திருந்தது போல பாவ்லா காட்டி அனுபவமுள்ள தொழிலாளிகளை இப்படிச் சுரண்ட லுக்கு உட்படுத்துவது ஒரு ரகம். அப்படி மீறி வேறு இடத்திற்கு வேலைக்குப் போனாலும் அந்த மாவட் டத்துக்குள்ளேயே மாமன் மச்சான் என்று சாதிக்காரர்களே ஏஜென்ஸி வைத்திருப்பதால் போன் செய்து வேலையைக் காலி செய்து விடுவார்கள்.

''யாரு... அழகப்பனா... நீ ஆபீஸ்ல இல்லன்னாலும் ஒங்க சீனாதானாகிட்ட சொல்லி வைய்யி. ஆறுமுகம்ன்னு ஒருத்தன் வேலைகீல கேட்டு வந்தா தட்டிவுட்டுறு என்ன..''

இப்படி சிலந்தி வலைக்குள் மீண்டும் அந்த தொழிலாளி வந்து விழு வது தவிர்க்க இயலாமல் போய்விடும்.

***மூளையைச் சிதறடித்து மோட்சம் அளித்த படலம்:***

முதலாளிகளின் சுரண்டல் நுட்பம் கவனிக்கத்தக்கதாய் இருக்கும். அந்தக் காட்சியை உங்கள் கண் முன்னே விரிக்



கிறேன். நீங்களே பாருங்கள். ஒரு சனிக்கிழமை வீட்டுக்குப் புறப்படும் நேரம் முதலாளி கனிவான பார்வையுடன் அருகே வந்தார்.

''தம்பி நாளைக்கு லீவு என்ன பண்ணப் போறீங்க?'' நமக் குத்தான் தந்திரம் வராதே, ''சும்மாதான் சார் வீட்ல ரெஸ்ட் எடுப்பேன்''. ''என்ன தம்பி இந்த வயசுல ஒழைச்சு முன்னே றாம பின்ன எந்த வயசுல ஒழைச்சு முன்னேர்றது. ஏழு வயசுல நான் எங்க ஐத்தானோட போய் கருவமரம் ஒடைப்பேன். அப்படியே ஒழைச்சு ஒழைச்சு இன்னக்கி மருந்து கம்பெனி வரைக்கும் வந்துருக்கேன். வயசுல சுகமா படுத்துக் கெடந்தா வளர முடியுமா?''

''லீவுல கண்ட பசங்களோட வெயில்ல சுத்தி ஒடம்ப கெடுத்துகிட்டு நிப்பீங்க... பேசாம காலைல கம்பெனி பக்கம் வாங்க. நம்ம மேனேஜர் கூட இருப்பாரு. வந்து அப்படியே பாக்ச கீக்ஸ அடுக்கி பாத்துகிட்டீங்கன்னா ஒரு நாலு மருந்து பேரத் தெரிஞ்சிக்கலாம். கம்பெனி அயிட்டம், காமன் அயிட்டம் அப்படியே பிரிச்சி போட்டீங்கன்னு வச்சிக்கங்க, பல விசயம் தெரிஞ்சிகிட்டா, பின்னால ரான் பாக்ஸி மாதிரி பெரிய கம்பெனிக்குப் போலாம் பாருங்க.''

''காலத்துக்கும் கணேஷ் பார்மசூட்டிகல்ஸ்லேயே கெடக் கணுமா என்ன? நான்ல்லாம் மத்த மொதலாளி மாதிரி கெடையாது. நமக்குக் கீழ இருக்கிறவன் அப்படியே இருக்க ணும்னு நெனக்க மாட்டேன். ஒரு சான்ஸ் கிடைச்சு பெரிய இடத்துக்குப் போனான்னா, 'பாரு இந்த மொதலாளிகிட்டே இருந்தோம். நமக்கு ஒரு நல்லவழி பொறந்துச்சி'ன்னு அவனும் நெனக்கணும். எனக்கும் கண்ணுக்கு அழகு.''

''ஆஃப் டேதான் வந்துருங்க. குடோன்லதான் ரேடியோ இருக்கு. அப்படியே சிலோன் வச்சீங்கன்னா வசந்த கீதம், கதம்ப மாலை, ஜோடி மாற்றம்னு நேரம் போறதே தெரியாது. இந்தாங்க சாவி,'' என்று பேச்சுக்கே வழியின்றி முடிவுக்குக் கட்டுப்படச் சொல்லிவிட்டுப் போனார்.

அடுத்த நாள் போனால் ஒரு கூடம் நிறைய மருந்து டப்பிகள் கொட்டிக் கிடந்தன. என்ன சார் இவ்ளோ இருக்கு. 'மத்தியானத்துக்குள்ள வேல முடியாது போல இருக்கே' என்று மேனேஜரிடம் கேட்டேன்.

''என்னப்பா கல்யாணம் ஆயி புள்ள குட்டின்னு வுட்டுட்டு வந்த நாங்களே பறக்குறதுல்ல. இந்தக் காலத்துப் புள்ளங்க வீடு வீடுன்னே பறக்குறீங்க. வந்தமா நாலு விசயம் தொழில்ல கத்துக்குவமான்னு முன்னேறப் பாக்குறியா... பாரு.. தலைல் அடிச்சுத் தொறத்தி விட்ட மாதிரி நான் இப்ப வீட்டுக்குப் போய்த்தான் சாப்பிடணும். ஒனக்கு அப்டியா... மொதலாளி 'ஆறுமுகத்த இன்னக்கி இங்க சாப்ட சொல்லு'ன்னு சொல்லிட்டாரு. ஒனக்கு குரு பார்வ கெடச்சி ருக்குய்யா... அப்புறம் என்ன அப்படியே நாலு மணி வரைக்கும் நேரு சீரா வேலையப் பாத்திட்டீன்னா... அப்ப டியே சாயங்காலம் டி.வியில சூப்பர் படம், நினைத்தாலே இனிக்கும்... அனுபவிச்சிட்டுப் போறியா. ஒன்ன மாதிரி எனக்கு அமையலேயேன்னு நான் நெனச்சிட்டுப் போறேன், நீ என்னமோ வருத்தப்படுறே''

கர்ணனை அடித்துக் கொன்றுவிட்டு, அடித்துக் கொன்ற வனே மோட்சம் கொடுக்க எதிரே வந்து ஆசி கொடுக்கும் கிருஷ்ண பரமாத்மா நினைவுக்கு வருவார் அப்போது. மூல தனத்தில் காரல் மார்க்ஸ் சொல்வது போல ''அவர்கள் சிந்திக்கும் முன்னரே செயல்படுகிறார்கள்; உள்ளுணர்வுத் தூண்டலால் சரக்கின் இயல்பிலிருந்து எழும் விதிகளை அனுசரிக்கின்றனர்.''

● **துரை. சண்முகம்**

# தோழருக்காக ஒரு உதவி

● **துரை. சண்முகம்**

ஒரு காந்தியால் ஏற்பட்ட
அகிம்சையின் இரணமே ஆறவில்லை,
ஆயிரம் காந்தி அமைதி ஊர்வலமா?
பகத்சிங் படையல்லவா
பாட்டாளி வர்க்கத்திற்குத் தேவை என்றேன்.
இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்
வர்க்க ஸ்தாபனம் இல்ல தோழர்
என்றார் அந்த மார்க்சிஸ்டு கட்சி ஊழியர்

மதவெறியை மாய்ப்போம்,
மனித நேயம் காப்போம் என
தட்டிக்குத் தட்டி கதை கட்டிவிட்டு
விநாயகர் சதுர்த்திக்குச் செட்டு போட்டு
இந்துவெறிக்குச் சிவப்புக் கொடி கட்டுவதுதான்
கம்யூனிசமா? என்றேன்.
தோ...ழ...ர் சி.ஐ.டி.யு. வர்க்க ஸ்தாபனம் இல்ல
என்றார் அழுத்தமாக.

அயல்நிதி வாங்கும் தன்னார்வக் குழுக்களுடன் சேர்ந்து
சுயநிதிக் கல்லூரி எதிர்ப்புப் பிரச்சாரமா?
மாணவர் சங்கம் உருப்படுமா என்றேன்,

மனப்பாடம் செய்தவர் போல
எஸ்.எஃப்.ஐ. வர்க்க ஸ்தாபனம் இல்ல
என்றார் திருத்தமாக

மீன் குழம்புக்கும் விலைமாதருக்கும்
சோரம் போகிறவர்கள் தோழர்கள் என்று படமெடுக்கும்
குருதிப்புனல் கமஹாசனுக்கும்
தேவர்மகன் பாரதிராஜாவுக்கும்
திரைப்பட விருதா என்றேன்.
த.மு.எ.ச. வர்க்க ஸ்தாபனம் இல்ல
என்றார் தயக்கமின்றி.

தீபாவளி, திருவண்ணாமலை தீபத்திற்குச் சிறப்பிதழும்
ஆடிக் கிருத்திகைக்கு அழைப்பிதழுமாய்
தீக்கதிர் வந்து விழுகிறதே என்றேன்.
அது என்ன வர்க்க ஸ்தாபனமா,
வெகுஜன பத்திரிக்கை தோழர் என்றார்
தனித்த சிரிப்புடன்.

'நானொரு பாப்பாத்தி' என்று
கோட்டையிலேயே சொன்ன
ஜெயலலிதாவுடன் கூட்டணி சேர்ந்து கொண்டு
மதச்சார்பற்ற... ஜனநாயக... முற்போக்கு என்றீர்களே
கனவு என்னாயிற்று என்றேன்.
தோழர் உங்களுக்குச் சொன்னா புரியாது
என்பது போல
கன்னாபின்னாவென முகத்தைச் சுழித்தார்.
இந்த முறை அந்தத் தோழருக்காக நாம் சொல்லுவோம்:

**''மார்க்சிஸ்டு கட்சி என்பதே**
**தொழிலாளி வர்க்க அமைப்பு (ஸ்தாபனம்) அல்ல''**

●

www.padippakam.com





## முந்திரித் தோப்பு

விலை ரூ. **50** பக்: 120

இந்நூலின் ஆசிரியர்கள் பண்ருட்டிக்கு அருகேயிருக்கும் தமது கிராமத்தின் இளமைக்கால நினைவுகளை அப்படியே கொண்டு வருகிறார்கள். வெளியுலகோடு தொடர்பற்றுக் கிடக்கும் நமது கிராமங்களின் இத்தகைய மண்வாசனைக் கதைகள் பொதுவில் ஒரு சுவாரசியத்தைத் தந்தாலும் அவ்வ இதயத்தைத் தைப்பதில்லை. இன்றைய அரசியல் சமூக - பொருளாதார மாற்றங்களில் நமது கிராமங்கள் எதைப் பெற்றன எதை இழந்தன என்ற உண்மையைக் கண்டுபிடிப்பதே மிகவும் தேவையானது. ஆசிரியர்கள் இந்தச் சவாலை ஏற்கவில்லை. இருப்பினும் அந்தக் கிராமத்தின் விதவிதமான மனிதர்களை வாசகர்கள் சந்திப்பது பயனளிக்கும்.

ஆசிரியர்கள் : ***அமலோர், அமலநாயகம்***

வெளியீடு :
செம்புலம், 50, 5-வது தெரு,
அச்சுதன் நகர், ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை - 600 097.
தொலைபேசி: 22346473




## எழுத்தாளர் - சமுத்திரமும் கடலூர் - வீரமணியும்

விலை ரூ. **20** பக்: 80

மறைந்த எழுத்தாளர் சு. சமுத்திரத்தின் நினைவுகள், அவரது எழுத்துக்கள் மற்றும் அவரைப் பற்றிய ஏனைய எழுத்தாளர்களது அஞ்சலி ஆகியவை சுருக்கமாக இடம் பெற்றுள்ளன. மத மாற்றத் தடைச்சட்டத்தினை எதிர்த்துப் பேசியும், எழுதியும் வந்த சமுத்திரத்தையும், போயசு தோட்டப் பூசணியாகிவிட்ட கி. வீரமணியையும் ஒப்பிட்டுப் பார்த்து வருந்துகிறார் நூலாசிரியர். முக்கியமாக, பார்ப்பனியத்திற்கு எதிராக தென் தமிழக மக்களிடம் எழுந்த 'தோள் சீலைப் போராட்டம்' குறித்து ஒரு நாவல் எழுதுவதற்காக விரிவான கள ஆய்வு செய்து இவ்வாண்டு எழுதுவதாக இருந்த சமுத்திரம் தற்போது மறைந்து போனார் என்ற செய்தி வருத்தமளிக்கிறது.

ஆசிரியர் : ***நாத்திகம் - பி. இராமசாமி***

நாத்திகம் வெளியீடு:
97/55, என்.எஸ். கிருஷ்ணன் சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி - 52134024




## இதுதான் பார்ப்பனியம்

விலை ரூ. **15** பக்: 37

இந்நூல் தமிழக வரலாற்றில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைச் சுருக்கமாகத் தொகுத்துரைக்கிறது. புரோகிதர்களாக மாறி, பின்பு மத்திய காலத்தில் கோவில்கள் எனும் வலிமையான சொத்து நிறுவனங்களின் மூலம் நிலவுடைமையாளர்களாக, அரசர்களின் ஆலோசகர்களாகப் பரிணமித்து, காலனிய ஆட்சியில் அதிகார வர்க்கமாக உருவெடுத்து நகரங்களில் குடியேறி, கல்வி, கலை, பத்திரிகை என சகல துறைகளிலும் பார்ப்பனர்கள் ஆதிக்கம் செய்து வருவதை எளிமையாகப் புரிய வைக்கிறார் ஆசிரியர். இதன் குறியீடாய் விளங்கிய ராஜாஜியின் பாத்திரத்தையும் இதை மறுத்து எழுந்த நீதிக்கட்சி, திராவிட இயக்கம், பெரியாரின் பங்கையும் கச்சிதமாக எடுத்துரைக்கிறார் நூலாசிரியர். அதேசமயம் பார்ப்பன ஆதிக்கம் ஒரு கருத்தியல் வன்முறையாகவும் பார்ப்பனர்களின் ஆதிக்கமாகவும் மட்டும் ஆசிரியர் புரிந்து கொள்கிறார். இந்திய ஆளும் வர்க்கங்களின் பொருளாதாரச் சுரண்டல்களுக்காகப் பாதுகாக்கப்படும் பார்ப்பனியத்தை ஒரு வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்ப்பதில் இந்நூல் பலவீனமாக இருக்கிறது. காமராசர், இராஜாஜி முரண்பாட்டை பார்ப்பன எதிர்ப்பு x ஆதரவு என்று பார்ப்பதும், பார்ப்பனர்களைச் சேர்க்க மாட்டோம் என முழங்கிய பா.ம.க.வை பார்ப்பன எதிர்ப்புப் போராளியாக அங்கீகரிப்பதும் மேற்கண்ட பலவீனத்திற்கு உதாரணங்கள். இருப்பினும் பொதுவில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு இந்நூல் வாசகர்களுக்குப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்: ***சிவக்குமரன்***

வெளியீடு :
யாதுமாகி பதிப்பகம்,
37/17, இராமசாமி கோவில் சன்னதித்தெரு,
பாளையங்கோட்டை - 627002.
தொலைபேசி: 0462 - 2560083.




## "சாவு வந்தாதான் சமைப்போம்"

விலை ரூ. **5** பக்: 16

அனாதைப் பிணங்களையும், ஆட்கொல்லி நோய்களினால் மடிந்து போன 'அருவெறுப்பான' பிணங்களையும் தனி ஒரு ஆளாய் எடுத்து, கை வண்டியில் போட்டு இழுத்து, மூக்கைப் பொத்திக் கொண்டு சபிக்கும் ஊருக்கு அஞ்சி, சுடுகாட்டில் புதைத்து அதன் மூலம் வாழ்க்கையைத் தள்ளும் ஒரு தலித் பெண்ணின் உண்மைக் கதையிது. தனது அவலமான வாழ்க்கையை எளிமையான உரையாடலில் எடுத்துரைக்கிறார் கிருஷ்ணவேணி. 'தலித் முரசு' (ஜுன், 2003) இதழில் வெளிவந்த இவரது நேர்காணல் சிறு நூலாய் வெளிவந்திருக்கிறது. உழைக்கும் மக்களின் விடுதலையில் நம் பங்கு என்ன என்ற சுயவிமரிசன உணர்வை வாசகர்களிடம் இந்நூல் நிச்சயமாகத் தூண்டும்.

வெளியீடு:
மக்கள் உரிமைக் கூட்டமைப்பு,
39, முத்துமாரியம்மன் கோயில் வீதி,
புதுச்சேரி - 605 001.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/PMG (CCR)/239/03-05

## ஒரு புதிய பாடல்

எழுச்சியுறும்
பல லட்சம் கருப்பருக்காக
நான் பேசுகிறேன்.

மற்றவர்
மவுனமாய் இருங்கள்-
ஒரு கணம்.

இந்தச் சொற்களை
நான் கொண்டுவந்திருக்கிறேன்;
இந்தச் செய்தியை
நான் சொல்ல வேண்டும்;
இந்தப் பாடலை நான்
இசைக்க வேண்டும்:

அந்தக் கசப்பான நாட்கள்-
எசமானனின் சாட்டையின் கீழே
என் முதுகைக் கொடுத்த நாட்கள்-
அவை கடந்துபோன நாட்கள்.

அந்தக் கசப்பான நாட்கள்,
பள்ளிக் கதவுகள் வரவேற்காததால்
படிப்பறியா என் குழந்தைகள்,
குரல்வளை நெறிக்கப்பட்டதால்
ஒளியிழந்த என் இளைஞர்கள்,
அடக்குமுறை வெறியர்களிடம்
தமது உடல்களை
"காமவிளையாட்டுக்குப்" பறிகொடுத்த
என் சகோதரிகள்....
அவை கடந்துபோன நாட்கள்.

அந்தக் கசப்பான நாட்கள்....
எனது கழுத்தைச் சுற்றி
முரடனின் தூக்குக் கயிறு வளைத்தது,
அவர்கள் இரக்கமற்றுப் பாய்ந்தபோது
துயரம் துடித்த பாடல்களில் மட்டுமே
நிம்மதி வந்தது...
அவை கடந்துபோன நாட்கள்.

கருத்த என் கரங்கள் மட்டுமே
கருத்த என் உடலை விடுவிக்க முடியுமெனத்
திடமாக நம்புகிறேன்
திருடும் சுரண்டும்
கொலைகாரக் கூட்டமே....
"கருப்பனே நீ எனது அடிமை
நானே சுதந்திர புருசன்" - என்று
திமிரோடு, வெறுப்புச் சுழித்த உதடுகளோடு
இனிமேல் நீ ஆர்ப்பரிக்க முடியாது...
அவை கடந்துபோன நாட்கள்.

ஏனெனில் இன்று கருப்பர்கள் பலரின்
சிவந்து கனன்ற குரல்களில்
உருவெடுக்கின்றன
புத்தம் புதிய சொற்கள்.

கடந்த காலக் கசப்போடு - ஆனால்
நாளைய கனவுகளின் இனிய சுவையோடு
விறைப்போடு உறுதியாக
வலிமையோடு பிழைபடாமல்
பூமியைப் புரட்டிப்போடும் புதிய சொற்கள்:

"எழு, கலகம் செய்!
கருப்பனுக்கும் வெள்ளையனுக்குமாய்
ஒரே உலகை -
பாட்டாளிகளின் உலகைப் படைத்திடு!

ஒழிந்தது பழைய உலகு!
புத்தம் புதுக் கனவொன்று
சூரியனுக்கு நிகராகத்
தழலாய் எரிந்து கிளம்பட்டும்!"

*- லாங்ஸ்டன் ஹியூஸ்*
தமிழில் : புதூர் இராசவேல்

□ 1930 -களில் பால்ராப்சனின் பாரம்பரியத்தில் விளைந்து "புரட்சியே உனக்கொரு காலை வணக்கம்" என்ற பாடலை எழுதியதற்காக அமெரிக்க அரசின் கடுமையான சித்திரவதைக்கு ஆளானவர் கவிஞர் ஹியூஸ். கருப்பின விடுதலைக்கான போராட்டக் குரலே இவரது படைப்புகள்.



படிப்பகம்